பக்கங்கள்: 16+VI=22

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 17 ஞாயிற்றுக்கிழமை (01-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:250

# புளொட் மோகன் சுட்டுக் கொலை!

## பம்பலப்பிட்டி 'ஹவுஸ் ஒவ் பஷன்' எதிரே வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்தோர் சரமாரியாக வேட்டு

கொழும்பு,ஓகஸ்ட் 1

**புளொட் அமைப்பின் முன்னாள் மூத்த உறுப்பினரும் தற்போது இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து செயற்பட்டு வந்தவருமான 'புளொட் மோகன்' என அழைக்கப்படும் கந்தையா யோகராசா நேற்றுப் பட்டப்பகல் வேளை கொழும்பு பம்பலப்பிட்டியில் - வீதியில் வைத்து அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.**

**பம்பலப்பிட்டி டுப்ளிக்கேஷன் வீதியில் 'ஹவுஸ் ஒவ் பஷன்' புடைவை விற்பனை நிலையத்துக்குச் சமீபமாக நின்றிருந்த ஓட்டோ ஒன்றில் ஏறுவதற்கு ஆயத்தமானபோது அந்த வீதிவழியே மோட்டார் சைக்கிள்களில் வந்த கொலையாளிகள் அவர் மீது வேட்டுக்களைத் தீர்த்துவிட்டுத் தப்பிவிட்டனர். அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.**

இந்தக் கொலைச் சம்பவம் நேற்று முற்பகல் 11.40 மணியளவில் இடம்பெற்றது.

கொலையுண்ட புளொட் மோகனின் சடலம் பிற்பகல் 3.30 மணிவரை அந்த இடத்திலேயே கிடந்தது. அவரது சேர்ட் பொக்கற்றிலிருந்த அடையாள அட்டை மற்றும் கைத்தொலைபேசி என்பனவற்றின் மூலம் பொலீஸார் அவரை அடையாளம் கண்டனர். கல்கிசை பதில் நீதிவான் கே.கணபதிப்பிள்ளை சம்பவ இடத்துக்கு வந்து சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் சடலம் பொரளையில் உள்ள பொலீஸ் சவச்சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

கொலையுண்ட மோகன் நுகேகொடையில் இருந்து ஓட்டோ ஒன்றில் நேற்றுமுற்பகல் பம்பலப்பிட்டிக்கு வந்திருந்தார் என்று கூறப்படுகின்றது. பம்பலப்பிட்டி டுப்ளிக்கேஷன் வீதியில் உள்ள 'ஹவுஸ் ஒவ் பஷன்' விற்பனை நிலை

(16ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளரைப் படம்பிடித்த புலனாய்வுப் பொலீஸ்!

கொழும்பு,ஓக.1

பம்பலப்பிட்டியில் புளொட் மோகன் சுடப்பட்ட இடத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்கள் அவர்களது அனுமதியின்றியே படம்பிடிக்கப்பட்டனர்.

இச்செயலை ஆட்சேபித்துச் செய்தியாளர்கள் பொலீஸ் அதிகாரியிடம் முறைப்பாடு செய்தனர்.

சம்பவம் நடந்த இடத்துக்கு நேற்றுப் பிற்பகல் சென்ற 50 இற்கு மேற்பட்ட செய்தியாளர்கள் அங்கு நின்று தகவல்களைச் சேகரித்துக்கொண்டிருந்தனர். அச்சமயம் அவர்களின் அனுமதியின்றியே படப்பிடிப்பாளர் ஒருவர் செய்தியாளர்களைப் படம் பிடித்துக்கொண்டிருந்தார்.

இதனை அவதானித்த செய்தியாளர்கள் அங்கு நின்ற பொலீஸ் அதிகாரிகளிடம் அது பற்றித் தமது ஆட்சேபத்தை வெளியிட்டனர். பின்னர் பொலீஸார் விசாரணைசெய்தபோது அந்தப் படப்பிடிப்பாளர் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது.(ஐ-3)

## எச்.ஐ.வி. தொற்றிய நோயாளி கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.1

எய்ட்ஸ் நோய்க் கிருமியான எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நோயாளி ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சையின்போது இனங்காணப்பட்டிருக்கின்றார்.

34 வயதான - திருமணமாகாத - ஓர் இளைஞரே இவ்வாறு எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர் எனச் சந்தேகிக்கப்படுகின்றார்.

தீவிர வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்ட

(16ஆம் பக்கம் பார்க்க)



புளொட் மோகனின் சடலம்.



பொலீஸார் பரிசோதிக்கின்றனர்.

## கிழக்குப் படுகொலைகளின் சூத்திரதாரி புளொட் மோகன்

### அரியநேந்திரன் எம்.பி கூறுகிறார்

கொழும்பு,ஓக.1

கொழும்பில் நேற்றுச் சுட்டுக்கொல்லப்பட்ட புளொட் மோகன் மட்டக்களப்பில் கடந்த காலங்களில் நடந்த படுகொலைகள் கொள்ளைகளுடன் தொடர்புபட்டிருந்த முக்கிய சூத்திரதாரி ஆவார்.

தமிழ்க் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.அரியநேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு நேற்றிரவு அளித்த பேட்டியிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

(16ஆம் பக்கம் பார்க்க)

## பம்பலப்பிட்டிச் சம்பவம் சமாதானத்துக்குக் குந்தகம்

### அரச தகவல் திணைக்களம் அறிக்கை

கொழும்பு,ஓக.1

பம்பலப்பிட்டியில் நடந்த படுகொலைச் சம்பவம் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புளொட்மோகன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புளொட் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

எதிர்த்தரப்பினரைக் கொலைசெய்யும் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளை அரசு வன்மையாகக் கண்டிக்கிறது.

படுகொலை செய்யும் ஆயுதக் குழுக்களின

(16ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகள் குழம்பத் தேவையில்லை மேலும் பெயர்ப் பட்டியல்கள் வரும்

### அரச அதிபர் பத்மநாதன் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.1

பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் பல பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவில்லை என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளமை தொடர்பாக திறைசேரியின் முகாமைத்துவப் பிரிவு அதிகாரிகளுடன் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் நேற்றுத் தொடர்புகொண்டு பேசியுள்ளார்.

இதுதொடர்பாக அரச அதிபர் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

(16ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலியிலும் கொடிகாமத்திலும் புதிய பிரதேச செயலக பிரிவுகள்

### பொது நிர்வாக அமைச்சர் இணக்கம்

யாழ்ப்பாணம்,ஓக.1

யாழ். மாவட்டத்தில் வலி.கிழக்கிலும் தென்மராட்சியிலும் குறிக்கப்பட்ட பிரதேசங்களைப் பிரித்துத் தனித்தனியாக இரு புதிய பிரதேச செயலகங்கள் உருவாக்கப்படவிருக்கின்றன.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அனுராதபுரத்தில் உள்ள மத்திய வங்கி கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் யாழ்.

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சங்கம நிகழ்வின்போது யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் தேசியக் கொடியேற்றுவதை முதலாவது படத்திலும், வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா ஈகச்சுடர் ஏற்றுவதை இரண்டாவது படத்திலும் கூட்டத்தில் கலந்துகொண்டோர் மௌன அஞ்சலி செலுத்துவதை இறுதியாக உள்ள படத்திலும் காணலாம். (படம்: சி.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்)

# சமாதான காலத்தை சந்திரிகா அரசு போருக்கான தயார்ப்படுத்தல்களைச் செய்யப் பயன்படுத்துகிறது

## புலிகள் பிரமுகர் இளம்பரிதி குற்றச்சாட்டு



வடமராட்சி,ஓக.1

சந்திரிகாவின் சமாதான காலம் போருக்கான தயார்ப்படுத்தலுக்குரிய காலமாகவே காணப்படுகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் 5 ஆவது பேராளர் மாநாடு, நெல்லியடி முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் நேற்று யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர் தாயகத்தின் பெரும் மக்கள் எண்ணிக்கையைக் கொண்ட யாழ். குடாநாடு பெரும் இராணுவ வலையினால் மூடப்பட்டுள்ளது. இந்த இராணுவம் தமிழரின் நலனில் அக்கறையற்ற ஆக்கிரமிப்புப் படையாக வலைப்பின்னலாக இயங்குகிறது.

இதிலிருந்து விடுபட எமது அமைப்பும் மக்களும் ஆவலாயுள்ளனர்.

விடுதலையை விரும்பாத எவருமே இங்கில்லை. விடுதலை வேட்கையற்ற எவரும் தமிழராக இருக்கமுடியாது. இந்த விடுதலை எப்போது சாத்தியமாகும்?

ஓர் இனம் விடுதலை பெற நான்கு அம்சங்கள் அடிப்படையாகத் தேவை. தாயகத்தின் பெரும் நிலப்பகுதியைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டும். இராணுவ பலம்மிக்க ஒரு படை இருக்கவேண்டும். நாட்டுக்குத் தேவையான கட்டுமானங்களை செயற்படுத்தவேண்டும். சர்வதேசத்தின் ஆதரவும் அங்கீகாரமும் இருக்கவேண்டும். இவ்வாறான விடுதலைப் போராட்டத்தை எவராலும் அழிக்கமுடியாது.

இந்த நிலையில் எமது தாயகத்தின் எழுபது வீதமான நிலப்பரப்பை எமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறோம். முழு உலகும் உற்றுநோக்கும் பெரும்பலம் எம்மிடம் உள்ளது. அனைத்துத் துறைகளிலும் பாரிய கட்டுமானங்களை நடைமுறைப்படுத்தி வருகிறோம். சர்வதேசத்தின் பார்வையும் தொடர்புகளும் எம்மீது உண்டு.

உலக வங்கியின் அறிக்கை கிளிநொச்சியில் வைத்துத் தமிழில் வெளியிடப்பட்டமை சர்வதேச அங்கீகாரத்தின் ஒரு படியாகும்.

ராஜதந்திரிகள், சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள், நிறுவனத் தலைவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து செல்வதும் அங்கீகாரத்தின் நிலையாகும். எனவே மிகவிரைவில் எமது விடுதலை சாத்தியமாகும். நாங்களும் நீங்களும் விரும்பும் விடுதலையைப் பெறுவதற்கான சகல வழிமுறைகளையும் எமது தேசியத் தலைவர் நுணுக்கமாகக் கையாண்டு வருகிறார்.

தேசிய எழுச்சிப் பேரவை என்பது எமது விடுதலையை சாத்தியமாக்கும் ஒரு படியாகவே எமது தலைவரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு மக்களின் ஆன்மாவின் துடிப்பையும் வெளிக்கொணரும் பாரிய மக்கள் அமைப்பு.

இன்று தமிழன் பல வழிகளிலும் தேசியத்தை நோக்கி ஒருமுகப்பட்டுள்ளான். மாவீரர் நாளை அனைத்துலகிலும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பது இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

தமிழர்களுக்குள் தோன்றிய தலைவர்களுக்குள் தமிழர் தேசியத்தை ஒருமுகப்படுத்தி அதை நகர்த்திச் செல்லும் ஆற்றல்மிக்க தலைவராக எமது தேசியத் தலைவர் உள்ளார்.

சமாதான காலத்தில் சந்திரிகா அரசும் மற்றைய தலைவர்களும் சமாதான எதிர்ப் போக்கு மிக்க செயற்பாடுகளைச் செய்துவருகின்றனர். சமாதானத்தைக் குலைக்கும் முயற்சிகளில் இனவாத சக்திகளும் முனைப்புடன் செயற்படுகின்றன.

அரசியல் ஆயுத பலத்தை நசுக்கி தமிழரின் ஒற்றுமையைச் சிதைக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

கருணா விடயத்தில் இவர்களின் நரித்தந்திரம் வெளிப்பட்டுள்ளது. இவ்வாறு ஒற்றுமையைக் குலைப்பதன் மூலம் விடுதலைப் புலிகளின் பேரம்பேசும் சக்தியைக் குறைத்து மீண்டும் ஒரு போரை - இராணுவ நடவடிக்கையை - தொடக்கத் திட்டமிட்டுள்ளது. இதன் ஓர் அங்கம்தான் கருணாவின் பிரதேசவாதம் என்ற மாயைக் கருத்து. இதைத் தென்தமிழீழ மக்கள் முறியடித்துள்ளார்கள். துரோகிகளுக்குள்ளேயே பிளவு ஏற்பட்டு அவர்களின் திட்டங்களும் அரசின் நம்பிக்கையும் தவிடுபொடியாகியுள்ளன.

யுத்த இருள் ஒன்று தோன்றுவதற்கு சிங்களப் பேரினவாதிகள் துணைபோகிறார்கள்.

அரசியல் ரீதியாக எம்மை ஒடுக்க முற்பட்டால் நாமும் அரசியல் ரீதியாக பலம்பெறவேண்டும.

இராணுவ ரீதியாக அழிக்கமுயற்சித்தால் நாமும் இராணுவ ரீதியாகப் பலம் பெறவேண்டும். - இவ்வாறு இளம்பரிதி தெரிவித்தார்.

(ஐ-30-70-86-173)

## எச்.ஐ.வி. தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.1

யாழ். மாவட்டப் பாடசாலை அதிபர்களுக்கான எச்.ஐ.வி. எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளையும், நாளைமறு தினமும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் மருத்துவத்துறை சார்ந்த நிபுணர்கள் கலந்துகொண்டு கருத்துரையாற்றவுள்ளனர்.

சகல பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.(ஐ-13)

## பட்டதாரிகள் விவகாரம்: இன்று மூன்று இடங்களில் கூட்டங்கள் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.1

பட்டதாரிகள் நியமனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டங்கள் இன்று மூன்று இடங்களில் நடைபெறவிருக்கின்றன.

முற்பகல் 11 மணிக்கு வேலணை வங்களாவடி மணி கல்வி நிலையத்திலும், பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி நியூறோயல் கல்வி நிலையத்திலும், மாலை 4 மணிக்கு நெல்லியடி கிறிஸ்தவ கல்லூரி நிலையத்திலும் இக்கூட்டங்கள் இடம்பெறும்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கூட்டங்களில் பங்குபற்றுவார். (ஐ-3)

## வீடமைப்புத்திட்டப் பயனாளிகளுக்கு முதற்கட்டக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஓக.1

உலக வங்கியின் உதவியுடன் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்தின் பயனாளிகளுக்கான முதற்கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அரியாலைப் பிரதேச பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள், அவர்களது வங்கிக் கணக்கில் நேற்றுமுன்தினம் வைப்பிலிடப்பட்டுள்ளன.

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொழும்புத்துறைப் பிரதேச பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் புதன்கிழமை வைப்பிலிடப்படவிருக்கின்றன என்றும் - வீடமைப்புத் திட்டத்துக்குப் பொறுப்பான திட்டப்பணிப்பாளர் எஸ்.சாம்பசிவம் தெரிவித்தார். (ஐ-3)

## பாம்பு தீண்டிய சிப்பாய்க்கு 9 நாள்களாகச் சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஓக.1

விஷ ஜந்துவினால் கடியுண்டவர் என்று கூறப்படும் இராணுவச் சிப்பாய் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

கிளாலி படைமுகாமைச் சேர்ந்த வி.எம். விஜயக்கோன் (வயது23) என்பவரே காவலரணில் கடமையில் இருந்தவேளை விஷ ஜந்துவினால் தீண்டப்பட்டார். இவரைப் பாம்பு தீண்டியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிசசையளிக்கப்பட்ட பின்னர் கடந்த 23ஆம் திகதி இவர் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டார். எனினும் அன்றுமுதல் இவர் சுயநினைவற்ற நிலையிலேயே காணப்படுகிறார் என்று மருத்துவ வட்டாரங்கள் கூறின. (ஐ-15-7)

## அழிப்பதற்கு வைக்கப்பட்டிருந்த சக்திமிக்க மிதிவெடிகள் மாயம்

யாழ்ப்பாணம்,ஓக.1

'டெனிஷ்' கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் வடமராட்சி கற்கோவளம் பகுதியில் அகற்றப்பட்டு அழிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த ஒருதொகுதி மிதிவெடிகள் காணாமற்போயுள்ளன என்று கூறப்படுகின்றது.

வடமராட்சி கற்கோவளம் புனித நகர்ப் பகுதியில் கடந்த சில மாதங்களாக 'டெனிஷ்' கண்ணிவெடிகளை அகற்றும் நிறுவனம் மிதிவெடிகளை அகற்றிவருகின்றது. இப்பகுதியில் இதுவரை அகற்றப்பட்ட 34 மிதிவெடிகள் அழிப்பதற்காக வைக்கப்பட்டிருந்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இவற்றில் 16 மிதிவெடிகள் காணாமற்போனமை தெரியவந்துள்ளது.

இவற்றில் அதிசக்தி வாய்ந்த மிதிவெடிகளும் அடங்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாகப் பருத்தித்துறைப் பொலீஸாரிடமும் பருத்தித்துறை பிரதேச செயலரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஓ-7)

## கணபதி ஹோமம்

வலி.தெற்கு,ஓக.1

ஆனைக்கோட்டை, உயரப்புலம் ஸ்ரீஉத்துங்க விநாயகர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணிக்கு மகாகணபதி ஹோமம் நடைபெறும். தொடர்ந்து சங்காபிஷேகமும் இடம்பெறும்.

(ஐ-52)

## இடம்பெயர்ந்தோருக்கு மார்ச் மாத நிவாரணம்

யாழ்ப்பாணம்,ஓக.1

இடம்பெயர்ந்தோருக்கு மார்ச் மாதத்துக்கான உலர் உணவு நிவாரணம் நாளை திங்கட்கிழமை முதல் வழங்கப்படவிருக்கின்றது.

நிவாரண விநியோகத்துக்கான பொருள்கள ப.நோ.கூ.சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும்

இந்த நிவாரணத்தில் வழமையான பொருள்களுடன் 'சோதனைமாவும்' வழங்கப்படும் என் [illegible] செயலகத் திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (ஐ-3)

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.1

யாழ். மத்திய கல்லூரியின் பரிசளிப்பு வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் வணபிதா எஸ்.அயின்ஸ்லி றொஷான் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஆர் சுரேந்திரன், திருமதி ரேணுகா தேவி சுரேந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

(3-201)

★ ★ ★

சுழிபுரம்,ஓக.1

பண்ணாகம் மக்கள் சிக்கன கடனுதவும் கூட்டுறவுச் சங்க 16ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று பி.ப. 3.30 மணிக்கு பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் ம.சற்குணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(3-28)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.1

யாழ். வலய மட்டத் தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு யாழ்.வேம்படி உயர்தர மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ் - கல்வி வலய தமிழ் உதவிப் பணிப்பாளர் எஸ்.சிறிதயாளன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (3-13)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.1

உயர் தேசியக் கணக்கியல் வர்த்தக பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உயர் தொழில்நுட்ப நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பல முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளதால் பட்டம்பெற்று வெளியேறிய அனைத்துப் பட்டதாரிகளையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(3-204)

★ ★ ★

குடத்தனை,ஓக.1

துன்னாலை வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பெரியபுராணத்தில் பக்தி என்னும் தலைப்பில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஆசிரியர் செல்வி நமசிவாயம் கல்யாணி சொற்பொழிவாற்றவுள்ளார். (10-78)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.1

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினரால் நடத்தப்பட்டுவரும் பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் இரண்டாம் தவணைக்கான போதனா வகுப்புகள் இன்று காலை 9மணிக்கு யா/செங்குந்த இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

(ஓ-405-201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## காலை வாரக் காலம் பார்த்து காத்திருக்கும் இரு தரப்புகள்

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் சிக்கியிருக்கின்றார் என்று இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

அரசுக் கூட்டமைப்புக்குள் குழப்பம் முற்றிவருவது குறித்து வெளியாகும் செய்திகள், ஜனாதிபதியின் இந்த இக்கட்டு நிலையைப் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியிருக்கின்றன.

அறுதிப்பெரும்பான்மையோடு ஆட்சிக்கு வந்து, அமைதி முயற்சிகளைச் சாவகாசமாய் முன்னெடுத்த ஐக்கிய தேசிய முன்னணி அரசை, தமது சுய அரசியல் லாபத்துக்காக, தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆட்சியிலிருந்து அகற்றினார் சந்திரிகா அம்மையார்.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் வெறியால் பேரினவாதக் கட்சியான - தனது கொள்கைப் போக்குடன் முற்றிலும் ஒத்துப்போகவே மாட்டாத - ஜே.வி.பியை அரவணைத்துக் கூட்டு அமைத்தார் அம்மையார்.

இப்போது அந்தப் பேரினவாத - தீவிரவாத - சக்தி தனது சுயரூபத்தைக் காட்டத் தொடங்கிவிட்டது. அதை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறுகிறார் அவர்.

இலங்கைத் தீவில் சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற வாஞ்சையும், உண்மையான அவாவும், நேர்மையான எண்ணமும் அம்மையாருக்கு இருக்கின்றதோ இல்லையோ -

இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் இணக்கத் தீர்வு காண்பதில் அவருக்கு பற்றுறுதி (Commitment) இருக்கின்றதோ இல்லையோ -

சமாதான முயற்சிகளில் எப்படியும் ஈடுபட்டாக வேண்டிய கட்டாயம் மட்டும் அவருக்கு இருப்பது உண்மை.

அதற்கு இரண்டு முக்கிய காரணங்கள்.

ஒன்று - நாடு எதிர்கொண்டிருக்கும் மோசமான பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கமுடியாத கட்டத்தில் அரசு தடுமாறுகின்றது. அந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச உதவிகளைப் பெற்றுக்கொள்வதே ஒரே ஒரு மார்க்கம். புலிகளுடன் அமைதிப் பேச்சைத் தொடங்காமல் சர்வதேச உதவி கிடைப்பதற்கு வாய்ப்பே இல்லை. ஆகவே, சமாதானப் பேச்சை ஆரம்பித்தாகவேண்டும்.

அடுத்தது - சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படாவிட்டால் இப்போதைய யுத்தநிறுத்தம் நின்று நிலைத்துத் தாக்குப்பிடிப்பது துர்லபமாகிவிடும். அத்தகைய சந்தர்ப்பத்தில் கொடூரப்போர் மீண்டும் வெடிப்பதும் தவிர்க்க முடியாததாகும். அத்தகைய போரை எதிர்கொள்ளவோ, அதன் அழிவுகளுக்கு முகங்கொடுக்கவோ கூடிய உறுதி நிலையில் - மனோதைரியத்தில் - படைப்பலத்தில் - தென்னிலங்கை சிங்களம் இல்லை. மீண்டும் கொடூர யுத்தம் வெடித்தால் மீளமுடியாத பேரபாயத்தை அது இலங்கைத் தீவின் மீது பதித்துவிடும்.

அத்தகைய நிலைமை ஏற்பட்டால் அமைதி வழியில் - சமாதான நெறியில் - இணக்கத்தீர்வு காணும் வாய்ப்பைக் கெடுத்தார்கள் என்ற தீராத பழி - அவப்பெயர் - ஜனாதிபதி சந்திரிகா மீதும் அவரது அணியினர்மீதும் நிரந்தரமாகச் சூளுவதோடு, இலங்கை அரசியலின் பக்கம் தலைவைத்துப் படுக்கவே முடியாதவகையில் மக்களால் விரட்டப்படும் நிலையும் அவர்களுக்குநேரும்.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படாவிட்டால் ஏற்படக்கூடிய விளைவுகளின் ஆழ, அகலங்களை ஜனாதிபதி குமாரதுங்க நன்கு புரிந்துகொண்டுள்ளார்; உணர்ந்து கொண்டுள்ளார்.

அதனாலேயே சமாதானத்தின் மீது - அமைதி முயற்சிகளின் மீது - தாம் ஆர்வமாய் இருக்கின்றார் என்று சர்வதேச உலகுக்குப் படம்போட முயல்கின்றார் அவர்.

ஆனால், அவரது அந்த நகர்வுகளுக்குத் தடுக்குப் போடுகின்றது ஜே.வி.பி.

ஜே.வி.பியினரின் பொறுப்பற்ற போக்கால் கடுப்புற்றிருக்கும் ஜனாதிபதி குமாரதுங்க, வேறு வழியின்றி ஜே.வி.பியைத் தூக்கி எறிந்து செயற்படுவது குறித்து ஆழமாகச் சிந்திக்கின்றார். கூட்டுக் கட்சியை வெட்டிவிட வேண்டிய கட்டத்திற்கு - கட்டாயத்துக்கு - அவர் தள்ளப்பட்டிருக்கிறார்.

ஆனால், ஜே.வி.பியை வெட்டினால் அவரது கூட்டமைப்பு அரசு கவிழ்ந்துவிடும். அதனால்தான் ஜே.வி.பியை வெட்டிவிடுவது குறித்து ஒன்றுக்கு இரண்டு தடவைகள் அவர் சிந்திக்கவேண்டியுள்ளது.

ஜே.வி.பியை வெட்டும் அதேசமயம், நாடாளுமன்றத்தில் அதே வலுவுடைய - அல்லது அதிலும் விடக்கூடிய வலுவுடைய - எண்ணிக்கையில் அதிக எம்.பிக்களை எதிரணியிலிருந்து சுருட்ட முடியுமா என்று அவர் சுண்டிப் பார்க்கின்றார்.

அப்படிச் செய்யமுடியும் என்று அவருக்கு நம்பிக்கை பிறக்குமானால் ஜே.வி.பிக்கு ஜனாதிபதி விரைவில் 'பெப்பே' காட்டுவார் என எதிர்பார்க்கலாம்.

ஜனாதிபதி தரப்பினரும், ஜே.வி.பியினரும் கூட்டுச் சேர்ந்து - அணி இணைந்து - ஆட்சி அமைத்திருந்தாலும் ஆளை ஆள் மாறிமாறி இழுத்து விழுத்துவதற்குச் சந்தர்ப்பம் பார்த்துக் காத்திருக்கின்றார்கள் என்பதே உண்மை.

புலிகளோடு சமரசம் செய்ய ஜனாதிபதி முயன்றால் அவருக்குத் தடுக்குப்போட ஜே.வி.பியினரும் -

தமது முயற்சிகளுக்கு இடைஞ்சலாக ஜே.வி.பி. மிஞ்சிப் போனால் அதை வெட்டிவிட ஜனாதிபதி தரப்பினரும் - தயாராக இருக்கின்றார்கள் என்பதே உண்மை.

இத்தகைய நிலையில் அரசும் நாடும் எங்கே போய் முட்டப்போகின்றனவோ தெரியாது....?!

# படைமுகாம்களில் நாய்கள் தஞ்சம்; அவற்றை அழிக்க நடவடிக்கை தேவை!

## இராணுவ அதிகாரிக்கு ரவிராஜ் எம்.பி. கடிதம்

தென்மராட்சி,ஓக.1

படையினரின் முகாம்கள் மற்றும் சோதனைச் சாவடிகளில் நிற்கும் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பலாலி படைத்தலைமையகத் தளபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

படைமுகாம்களிலும் சோதனை நிலையங்களிலும் கழிவாக வீசப்படும் உணவுக்காக ஏராளமான நாய்கள் அப்பகுதிகளில் தங்கியுள்ளன. அவை பொதுமக்களை கடித்துக் காயப்படுத்துகின்றன.

அதனுடன், மோட்டார் சைக்கிள், சைக்கிள் போன்றவற்றில் செல்வோரை விரட்டிச்செல்கின்றன. இதனால், அவர்கள் விபத்தில் சிக்கநேரிடுகிறது.

உள்ளூராட்சிச் சபையினரும் சுகாதாரப் பகுதியினரும் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால், இந்த நாய்கள் முகாம்களுக்குள்ளும், சோதனை நிலையங்களிலும் தஞ்சமடைவதால் அவற்றினைப் பிடித்து அழிக்கமுடியவில்லை.

அண்மைக்காலமாக குடாநாட்டு மருத்துவமனைகளில் நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சைபெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது.

இதேவேளை - தடுப்பூசிக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால், அநியாயமாகப பொதுமக்கள் உயிரிழக்கும் நிலை தோன்றக்கூடும்.

எனவே, முகாம்களில் கட்டாக்காலிகளாக அலையும் நாய்களைப் பிடித்து அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

- இவ்வாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-117)

## காப்புறுதி நிறுவன நிர்வாகிகளுக்கு வவுனியா நீதிமன்றம் பிடியாணை

வவுனியா,ஓக.1

வவுனியாவில் இயங்கி வந்த தனியார் காப்புறுதி நிறுவனம் ஒன்றின் நிர்வாகிகளைக் கைதுசெய்யுமாறு வவுனியா நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இந்த நிறுவனத்தை நான்குபேர் இணைந்து ஆரம்பித்திருந்தனர். அவர்கள் காப்புறுதிச்சேவையின் பெயரால் பொதுமக்களிடம் பணம் திரட்டிக்கொண்டு சமீபத்தில் தலைமறைவாகியிருந்தனர்.

இது தொடர்பாகப் பணம் செலுத்தியவர்கள் பொலீஸாரிடம் முறையிட்டனர். அத்துடன், அந்த நிறுவனத்தில் பணியாற்றிய ஊழியர்கள், தமக்குச் சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்று பொலீஸில் முறையிட்டனர்.

இதனையடுத்து நிறுவன நிர்வாகிகளில் ஒருவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார் மற்றைய மூவரும் தலைமறைவாகினர்.

கைதானவர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். அப்போது அவரை விளக்கமறியலில் வைக்கப்பணித்த நீதிவான் மற்றைய மூவருக்கும் பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டார்.

இந்த நிறுவனத்திற்கு சுமார் 7 லட்சத்து 47ஆயிரத்து 250 ரூபா பணம் பொதுமக்களால் செலுத்தப்பட்டுள்ளதாக இதுவரை கிடைத்த முறைப்பாடுகளிலிருந்து அறியவந்துள்ளதாகவும் -

பணம் செலுத்திய பலர் படிப்படியாக முறைப்பாடுகள் தெரிவிக்கின்றனர் என்றும் -

வவுனியா பொலீஸ் நிலைய விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி எஸ்.பூலோகராசா தெரிவித்தார். (ஒ-164)

## மருத்துவ விளம்பரங்கள் குறித்து விசாரிக்க நீதிமன்றம் பணிப்பு

வவுனியா,ஓக.1

மருத்துவ ஒழுங்கு விதிகளுக்கு முரணாக ஒளிபரப்பப்படும் விளம்பரங்கள் தொடர்பாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி வவுனியா பொலீஸ் நிலைய விசேட குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

வவுனியாவில் செயற்படும் தனியார் ஒளிபரப்பு நிலையம் ஒன்று மருத்துவர்கள், தனியார் வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்கள் தொடர்பான விளம்பரங்களை ஒளிபரப்பி வருகிறது. இவ்வாறு ஒளிபரப்பாகும் விளம்பரங்கள் மருத்துவ ஒழுக்கக்கோவைக்கு முரணானவை என்று வவுனியா நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து மேற்படி ஒளிபரப்புச் சேவையில் ஒளிபரப்பாகும் மருத்துவம் பற்றிய விளம்பரங்களை ஒளிபரப்பியமை தொடர்பாக மேற்படி நிறுவனத்தின் பொறுப்பாளரிடம் விளக்கம்கோரி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா விசேட குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ஒ-164)

## கல்வியியல் டிப்ளோமாதாரிகளுக்கு திருமலையில் நேர்முகப்பரீட்சை

தென்மராட்சி,ஓக.1

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் மூன்றுவருட காலக் கற்கையை நிறைவு செய்து, வெளியேறிய டிப்ளோமாதாரிகள் மாகாண அரச சேவைத்திட்டத்தின் கீழ் ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் திருகோணமலை மாகாணக் கல்வி அமைச்சில் நடைபெறுமென சம்பந்தப்பட்டவர்களுக்கு கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலாளர் சி.சிவானந்தன் அறிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள், இறுதியாகக் கல்விகற்ற பாடசாலை அதிபர், கிராமஅலுவலர், பிரதேசசெயலர் ஆகியோரின் நற்சான்றிதழ்கள், குடியியல் நிலைமைச் சான்றிதழ், தேசிய டிப்ளோமா சான்றிதழுக்குப் பதிலாக வழங்கப்பட்ட இறுதிப்பரீட்சைப் பெறுபேறு ஆகியவற்றின் மூலப்பிரதிகள், புகைப்படப்பிரதிகள் ஆகியவற்றுடன் நேர்முகத்தேர்வுக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

### ஜி.சீ.ஈ.பரீட்சைகளில் சித்தியடைந்தோருக்கு அரச நியமனங்கள்

கொழும்பு,ஓக.1

ஜி.சீ.ஈ. உயர்தரம் மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளில் சித்தியடைந்த 30 ஆயிரம் பேருக்கு அரச நியமனங்கள் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவுள்ளன என்று அமைச்சர் மங்களசமரவீர தெரிவித்துள்ளார்.(ஒ-201)

### இளைஞருக்குப் பாம்புக் கடி

தென்மராட்சி,ஓக.1

யுத்தத்தினால் சேதமடைந்த வீட்டினைத் துப்புரவுசெய்யும் பணியில் ஈடுபட்டவர் புடையன் பாம்பினால் கடியுண்ட சமபவம் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி கல்வயல் பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த இரத்தினம் சபேசன் (வயது 28) எனபவரே பாம்புக்கடிக்கு இலக்காகி சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவராவார். (ஒ-31-117)

## புலன்வலுக் குறைந்தோருக்கு தொழிற்பயிற்சி, கடன் உதவி

வலி.மேற்கு,ஓக.1

யாழ். மாவட்டத்திலுள்ள புலன்வலுக் குறைந்தவர்களுக்கு தொழில்சார் பயிற்சியும் தொழிலை ஆரம்பிப்பதற்கான கடன் உதவியும் வழங்கப்படவுள்ளன. இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை திருநெல்வேலியிலுள்ள ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் மேற்கொண்டுள்ளது.

ஐநா.அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் புலன்வலுக்குறைந்தவர்களின் வாழ்வை வளம்படுத்த இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் தொழில் முகாமைத்துவத்தையும் தொழில்சார் பயிற்சியையும் புலன்வலுக்குறைந்தோருக்கு வழங்கி சுயதொழிலை ஆரம்பிக்க அவர்களுக்குக் கடன் உதவியையும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பயிற்சியையும் கடன் உதவியையும் பெறவிரும்புகின்ற பலன்வலுக்குறைந்தவர்கள் புதன்கிழமைகளில் காலை 10 மணிக்கும் 12 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் திருநெல்வேலி ஆடியபாதம் வீதியிலுள்ள ஊனமுற்றோர் புனர்வாழவுச் சங்கத்திற்குப் பங்கீட்டு அட்டையுடன் நேரடியாக வருகைதருமாறு தலைவர் அறிவித்துள்ளார். (ஒ-175)

### நாளை

ஆடி 18
திங்கட்கிழமை
(02.08.2004)
திதி : துதியை
முன்னிரவு 8.53 வரை.
நட்சத்திரம் : அவிட்டம்
பிற்பகல் 2.26 வரை.
சுபநேரம்: 12.04 - 1.34
ராகுகாலம்: 7.34 - 9.04
(பழைய நேரப்படி)

## வேலைக்காக இலங்கையரை ஈராக்குக்கு அனுப்பவேண்டாம்!

### தொழில் அமைச்சர் கண்டிப்பான உத்தரவு

கொழும்பு,ஓக.1

ஈராக்கிற்கு வேலைவாய்ப்புக்காக இலங்கையர்களை அனுப்பவேண்டாம் என்று முகவர் நிலையங்களுக்கு இலங்கையின் தொழில் அமைச்சர் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவ்வாறு சென்றவர்கள் சிலர் ஈராக்கில் இருந்து நேற்றுமுன்தினம் நாடு திரும்பியிருந்தனர். அவர்களின் இன்னல்களைக் கேட்டு அறிந்துகொண்டதன் பினனரே அமைச்சர் அத்தாவுட சென‌விரத்ன மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

இந்தப் பணிப்புரையை மீறிச்செயற்படும் முகவர் நிலையங்களுக்கு எதிராக சட்டநடவடிககை எடுக்கப்படும் என்றும் தொழில் அமைச்சர் எச்சரித்தார். மத்திய கிழக்கில் தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி ஜோர்தான் தலைநகர் அம்மானுக்கு 59 இலங்கையர்கள், முகவர் நிலையம் ஒன்றினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் 29 பேர் நாடு திரும்பியுள்ளனர்.

தம்மை ஜோர்தான் - ஈராக் எல்லைப் புறத்தில் பதுங்குகுழிகள் அமைக்குமாறு பலவந்தப்படுத்தி வேலைவாங்குகின்றனர் என்று திரும்பிவந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாகத் தமக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்தால் தாம் விசாரணைகள் மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தொழில் அமைச்சர் உறுதியளித்துள்ளார். (க)

### உதயவாக்கு

பிறந்து வீழ்ச்சியில் எழுச்சி காண முயல்வாயானால் உனது வீழ்ச்சியை இறைவனாலும் தடுக்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பக்திப் பாடல் அரசு" மெல்லிசை மன்னனின்

# 10ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று

ஈழத்தில் நாதம் ஒலிக்க வந்தது
1940
05
20



ஈழத்தில் நாதம் ஒலித்து ஓய்ந்தது
1994
07
23

# அமரர் A.R. ஸ்ரீகிருஸ்ணமூர்த்தி

## - ஈழத்துச் சீர்காழி கோவிந்தராஜன் -

(யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்)

இனிமையான குரலில் இன்னிசை கானம் பொழிந்து ரசிகர் மனதில் நீங்காத இடம்பெற்று சிறப்புடன் திகழ்ந்தவர் இன்று எம் மத்தியில் இல்லை என்பதை நம்பமுடியவில்லை. பத்து ஆண்டுகள் பறந்தோடிவிட்டாலும் அவரது மெல்லிசைக்குரல் இப்போதும் எமது காதுகளில் ரீங்காரம் இட்டுக்கொண்டே இருக்கிறது.

"மெல்லிசை மன்னன்" என்று புகழ்பெற்ற இவர், சீர்காழி கோவிந்தராஜனின் பாடல்களை அப்படியே இசைத்துப்பாடுவதில் வல்லவராகத் திகழ்ந்தார். அதனால், அவர் சீர்காழி கோவிந்தராஜனாலேயே, 'ஈழத்துச் சீர்காழி', எனவும் பாராட்டப்பெற்றார். இவரது குரலுக்கு வேறு ஒருவருமில்லை. மெல்லிசையால் மக்கள் மனதில் பதிந்து கொண்ட இவர், வண்ணை கலைவாணர் நாடகமன்றத்தின் இசையமைப்பாளராகவும் கண்ணன் கோஷ்டியின் சிறந்த பாடகராகவும் விளங்கினார். நாடகக் கலைஞராகவும் திகழ்ந்தார். சிறந்த அண்ணாவியாராகவும் விளங்கினார்.

சினிமாவில் வரும் துள்ளிசைப்பாடல்களை மேடைகளில் பாடமாட்டேன் என்று தனியே பக்திப்பாடல்களை மட்டும் பாடி ரசிகர்களின் உள்ளங்கவர்ந்த இவர், சங்கீத உலகிலும் தனக்கென ஒரு தனிப்பாணியை அமைத்து மேடைகளில் கச்சேரிசெய்து ரசிகர்களின் மனதைக் கொள்ளைகொண்டவர் என்று கூறினால் மிகையாகாது.

அதுமாத்திரமன்றி இலங்கை சினிமா உலகில் 'தெய்வம் தந்தவீடு' படத்தில் "நாதம் கேட்குதடி" என்று பாடிச் சிறந்த பின்னணி இசைத்துப் புகழ்பெற்ற இவர், நிர்மலா படத்தில் கதாநாயகனாக நடித்துப் புகழீட்டியுள்ளார். எப்போதும் புன்னகைத்த முகத்துடன் பொலிந்து தோன்றும் இவர், குடும்ப நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனாய், சேவகனாய், பண்பிலே தெய்வமாய் வாழ்ந்து கானமழை பொழிந்து எம்மையும் எம்மினத்தவரையும் எல்லோரையுமே மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியவர். தானே தனியாகவும் இசைக்குழுவை நடத்திவந்தவர்.

இவரது மறைவு சங்கீத உலகத்துப் பேரிழப்பாகும். பத்தாண்டுகள் மறைந்துபோனாலும் தினந்தினம் ஆலயங்களில் கண்டாமணி ஓசை ஒலிப்பதுபோல் இவரது இனிய குரலோசை ஒலித்துக்கொண்டேயிருக்கும்.

இத்தனை சிறப்புக்களமைந்த A.R.ஸ்ரீகிருஸ்ணமூர்த்தி அவர்களின் வெற்றிடம் நிரப்பமுடியாதது.

அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து, மனச்சாந்திவேண்டி இறைவனை வணங்குகிறோம்.

புதிய குறிஞ்சி மருந்தகம்,
பரமேஸ்வராச் சந்தி,
பலாலி றோட், யாழ்ப்பாணம்.

19/1, பீ.ஏ.தம்பி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

அன்னாரின் குரலினிமையை
அபிமானத்தோடு, அன்போடு
ரசித்து நினைவுகூரும்
ஈழத்து இசைரசிகர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> "...தத்தமது படைப்புகளை (நூல்கள், சஞ்சிகைகள்) தமக்குள் பகிர்ந்து கொண்டு அவற்றை ஏனையோருக்கு அறிமுகப்படுத்த படைப்பாளிகள் முன்வந்தால் அச்சிடும் பிரதிகள் அனைத்தையுமே விற்றுத் தீர்க்க முடியும். இந்த மன ஐக்கியம் வடக்கு - கிழக்கு, மலையகம் என்று விரிந்தால் தமிழ்ப்படைப்பாளிகள் கொடிகட்டிப்பறக்க முடியும்..."

# "படைப்பாளிகளிடையிலான மனஐக்கியம் படைப்புகளின் விற்பனையை தூண்ட உதவும்..."

## நாடகக் கலைஞர் அமரசிங்கம் செவ்வி

**வீ**ணை வேந்தன், சித்தி அமரசிங்கம் என்னும் 'புனை பெயர்களால் கலை உலகில் நன்கு அறியப்பட்டவர் தம்பியையா தம்பிமுத்து அமரசிங்கம்.

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எழுபதுகளிலும் எண்பதுகளிலும் கலை உலகில், குறிப்பாக மரபுவழி சார்ந்த மேடைநாடகக் கலையில் - பிரகாசித்தவர். பதிப்பாக்க முயற்சிகள் மற்றும் வெளியீடுகள் பலவற்றை வழிநடத்தி அதன் மூலம் இலைமறைகாய்களாக இருந்த படைப்பாளிகளுக்கு களங்களைத் திறந்துவிட்டவர்.

1991 இல் நாடகத்துறையில் கலாபூஷணம் விருது பெறறவர் அமரசிங்கம். விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக்கழகம் திருமலையில் நடத்திய 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' நிகழ்வில் நாடகத்துறையின் மூத்த கலைஞராகக் கௌரவிக்கப்பட்டவர்களில் இவரும் ஒருவர். பெருந தெருக்கள் திணைக்களத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற இவர் சிறிது காலம் 'தினபதி' தமிழ்ப் பத்திரிகைச் செய்தியாளராகவும் பணிபுரிந்தவர்.

இலங்கை தமிழ்த் திரைப்படங்களில் ஒன்றான 'தென்றலும் புயலும்' இவரது விநோதன் என்ற பாத்திரத்திற்காகவே பாராட்டுப் பெற்றிருந்தது.

தற்போது அறுபது அகவையை எட்டியிருக்கும் அமரசிங்கம் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது உதயனுக்கு வழங்கிய ஒரு செவ்வியினூடாக தனது கலை உலகப் பயணத்தை மீட்டுப் பார்த்தார்.

அவரது செவ்வி இது.

❒ ***தங்களின் கலை உலகப் பிரவேசம் குடும்பவழி வந்ததா? அல்லது தற்செயலான ஒருநிகழ்வா? சுருக்கமாகக் கூறமுடியுமா?***

❍ சிறுவயதிலிருந்தே என்னிடம் ஒரு ஜனரஞ்சகமான - ஹாஷியமான - நடிப்பாற்றல் இருந்து வந்துள்ளது. பொழுது போக்காக பாடசாலை நாடகங்களிலும் நண்பர்கள் மத்தியிலும் நடிகனாக தோன்றியதுண்டு.

ஆயினும், நாடகத்துறைக்குள் முற்று முழுதாக புகுவதற்கு களம் அமைத்துக்கொடுத்தது திருமலை ஸ்ரீ இராமகிருஸ்ணமிஷன் இந்துக் கல்லூரி ஆகும்.

குடும்பப் பின்னணி என்று எதுவும் இருக்கவில்லை. நாடகங்களில் தோன்றி நடித்தும் நெறியாள்கை செய்ததும் வெறும்பொழுதுபோக்கு என்று மட்டுமே உணர்ந்திருந்தேன். ஆனால், காலம்செல்லச் செல்ல ரசிகர்கள் மத்தியில் வளர்ந்துவந்த ஆதரவும், ஏதோ கலைத்துவம் எனக்குள் நிறைந்துகிடப்பதாக பிறந்து பாராட்டுகள் வந்துகுவிந்தபோதும் தான் நான் ஒரு கலைஞன் என்பதை உணர்ந்தேன். இதில் கலை உலகப் பிரவேசம் என்று எதைச் சொல்வது?

❒ ***தாங்கள் தயாரித்தளித்த - நடித்த நூடகங்களுள் குறிப்பிடக்கூடிய சாதனை படைத்த நாடகங்கள் எவை?***

❍ திரு. அ.சச்சிதானந்தன் என்பவரோடு இணைந்து 'அமரன் ஆனந்தன்' என்ற அமைப்பின் கீழ் தமிழில் ROCK-N-ROLL என்னும் இசையோடு கூடிய நடன நிகழ்வை திருமலையிலும் தென்னிலங்கையிலும் மேடையேற்றியபோது பெரும் வரவேற்புக் கிடைத்தது. எனினும், நாடக உலகில் எனது அடையாளமாகத் திகழ்வது 'இராவண தரிசனம்' இலக்கிய நாடகம் தான். இராவணனுடைய சிறப்பியல்புகளை வெளிப்படுத்தும் சர்ச்சைக்குரிய வரலாற்றுக்கதை அது. அந்த நாடகத்தில் இராவணன் பாத்திரம் ஏற்று நடித்துள்ளேன். இராவணன் சீதையை காமத்தால் கவரவில்லை; இராவணனை இராமன் கொல்லவில்லை; இராவணனின் வீழ்ச்சி ஒரு பெண்ணால் நிகழ்ந்ததுதான். ஆனால், அவள் சீதை அல்ல என்ற புதிய வரலாற்றுத் தகவல்களை கூறும் நாடகம் 'இராவண தரிசனம்', ஈழத்து இலக்கியச் சோலை' என்ற எனது வெளியீட்டு நிறுவனத்தின் ஊடாக 'இராவண தரிசனம்' இலக்கிய நாடகத்தை நூலாக வெளியிட்டிருக்கிறேன்(1997).

❒ ***தங்களுடைய வெளியீட்டு முயற்சிகளின் ஆரம்பம் என்று எதைக் கூறுவீர்கள்?***

❍ 1950களின் ஆரம்பத்தில் சிங்கப்பூரில் இருந்து வெளிவரும் 'தமிழ்முரசு' பத்திரிகை 'மாணவ மணி மன்றம்' என்னும் இணைப்பிதழை வெளியிட்டு வந்தது. அதில் சிறுவர்களது படைப்புகள் நிறைய வரும். அந்தக் காலத்தில் அவற்றினால் கவரப்பட்டவர்களில் நானும் ஒருவன். 'மாணவ மணிமன்ற[illegible] போல ஒரு சிறுவர் இதழை உருவாக்கவேண்டும் என்ற அவா எனக்குள் தோற்றம்பெற்றது. அப்போது திருகோணமலையில் இருந்த இளம் எழுத்தாள நண்பர்கள் சிலருடன் சேர்ந்து 'யாழ்' என்ற பெயரில் கையெழுத்துச் சஞ்சிகை ஒன்றை தயாரித்தோம். கையால் எழுதப்பட்ட ஒரேயொரு பிரதி அதில் எல்லா ஆக்கங்களையும் நாங்களே எழுதியிருந்தோம். எங்கள் கன்னி முயற்சியான அந்தச் சஞ்சிகையை எவ்வாறு வாசகர் மத்தியில் கொண்டுபோவது என்பது தெரியாமல் இருந்தது. யாராவது அதனைப் படித்துவிட்டால் அதைவிடச் சந்தோஷம் வேறு எதுவுமே இருந்திருக்காது. எங்கள் சஞ்சிகையை வாசகர் கண்களில் படும்படி வைக்கத்திட்டமிட்டோம். திருமலை நகரில் கிணற்றடிப் பிள்ளையார் கோவில் பக்கம் மரநிழலில் ஒரு கல்லைப் போட்டு அதில் இந்திய சஞ்சிகைகள் சிலவற்றை வாங்கிப போட்டோம். அவற்றோடு சேர்த்து எங்கள் கையெழுத்துச் சஞ்சிகையையும் கண்ணில் தெரியும்படி வைத்தோம். எட்டித் தொலைவில் மறைந்து நின்று பார்ப்போம். எவராவது அதைத் தொட்டு எடுத்துப்படிக்கிறார்களா என்று தினமும் பார்த்தோம். நாள்கள் செல்லச்செல்ல பலர் அதை எடுத்துப் புரட்டுவது தெரிந்தது. அது கண்டு நாங்கள் உற்சாக வானில் சிறகடித்தோம். அங்கு வாசிப்பு வட்டம் ஒன்று உருவாகியது. அதுவே பின்னர் விநாயக முன்னணி வாசிகசாலையும் சனசமூக நிலையமுமாக உருப்பெற்றது. பெரிய வாசகர்சாலையாக மாறியது. இதுவே மறக்கமுடியாத எனது முதல் படைப்பாக்க முயற்சி.



இராவணேஸ்வரனாக...

❒ ***நாடகம் தவிர சிறுகதை நாவல் என்று வேறு படைப்பாக்க முயற்சிகள் எதிலாவது ஈடுபட்டிருக்கிறீர்களா?***

❍ இல்லை. ஆக்க இலக்கியங்கள் என்று குறிப்பாகச் சொல்வதற்கு எதுவும் இல்லை. எனினும், 1960களின் தொடக்கத்தில் சென்னையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த சமயம் அங்கு 'ரேஷன் கார்ட்' உணவு விநியோக முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த முறையின் கீழ் உணவுக்காக மக்கள் படாதபாடு படுவதை நேரில் காண நேர்ந்தது. 'ரேஷன் கார்ட்' பெறுவதற்காக நீண்ட 'கியூ'களில் நின்று உடல் துவண்டு ஏமாற்றத்துடன் திரும்பிய பலரைக் கண்டு எனக்குள் கிளர்ந்த உணர்வுகளுக்கு வடிகால் தேடினேன். அந்த மனித அவலத்தை 'அரைப்படி அரிசி' என்ற தலைப்பிட்டு சிறுகதையாக வரைந்தேன். அந்தக் கதையையும் பின்னர் அவ்வப்போது எழுதிய சிறுகதைகளையும் சேர்த்து ஒரு தொகுப்பாக வெளியிடவுள்ளேன். சென்னையில் அதன் தயாரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

❒ ***[illegible] படைப்பாக்கங்களை விட [illegible] முயற்சிகளிலும் [illegible] தீவிர ஈடுபாடு கொண்டிருந்தீர்கள் என்பதை அறியமுடிகிறது. சிறு சஞ்சிகைகளை வெளியிடுவதைவிட அவற்றின் விநியோகத்தை மேற்கொள்வது கல்லில் நார் உரிப்பதை ஒத்ததாக மாறிவிட்டது. இந்த நிலைமை ஏன்? இதனை மாற்றிட வழிவகைகள் உண்டா?***

❍ 1972 இல் 'குங்குமம்' என்னும் சஞ்சிகையை திருமலையிலும் கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் விநியோகிக்க முயன்றேன். தமிழ்ப் பகுதிகளிலிருந்து வெளிவந்த பிரதேச ரீதியான முதல் சஞ்சிகை என்று அதனைக் கூறலாம். அதன் விற்பனையை அதிகரிக்க நான் மேற்கொண்ட முயற்சிகள் தொடர்ந்து வேறு பல சஞ்சிகைகளின் விநியோகப் பணிகளிலும் ஈடுபடவேண்டிய பொறுப்புகளை எனக்களித்தது. திருமலை எழுத்தாளர்கள் பத்துப்பேரை இணைத்து 'ஒற்றைப் பனை' என்ற வெளியீட்டை ஆரம்பித்தோம். ஆனால், சிறுசஞ்சிகைகளின் ஆயுள் அவற்றின ஓரிரு பிரதிகளுடன் நின்று விடும் சோகம் அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது.

❒ ***சஞ்சிகைகள் மற்றும் படைப்புகளைச் சந்தைப்படுத்துவதில் படைப்பாளிகள் தாங்களுக்குள் இணைந்து கூட்டு முயற்சிகளில் ஈடுபடத் தயங்குவது ஏன்?***

❍ இதுவும் ஒரு பெரிய சோகம் தான். படைப்பாளிகளுக்குள் நீ பெரிது; நான் பெரிது என்ற கர்வம் இப்படிக்கு ஓர் இணக்கப்பாட்டுக்கு வரமுடியாதபடி தடைபோடுகிறது. இலக்கியப் படைப்பாளிகளிடையே மன ஐக்கியமான இணைப்பு ஒன்று உருவாகும் போது அவர்களது வெளியீடுகளின் விற்பனை வாய்ப்பைப் பெருக்கமுடியும் தத்தமது படைப்புகளைத் தமக்குள் பகிர்ந்து அவற்றை ஏனையோருக்கு அறிமுகப்படுத்தப் படைப்பாளிகள் முன்வந்தால் அச்சிடும் பிரதிகள் அனைத்தையுமே விற்றுத் தீர்க்கமுடியும். இந்த ஐக்கியம் வடக்கு, கிழக்கு, மலையகம் என்று விரிவாகும் போது தமிழ்ப் படைப்பாளிகள் கொடிகட்டிப் பறக்கமுடியும்.

❒ ***ஒரு காலத்தில் பொது மக்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த மரபுவழி நாடகக்கலை இன்று பின் தள்ளப்பட்டிருப்பது ஏன்?***

❍ மரபுவழி இலக்கியங்கள் போன்றே மரபுவழி நாடகக் கலையும் பின் தள்ளப்பட்டிருக்கின்றது. நவீன இலக்கியம் போன்றே நவீன நாடகக்கலை வளர்ந்துள்ளது. அதற்காக மரபுவழி நாடகக்கலை உயிரிழந்து போய்விடவில்லை. தொலைக்காட்சி, சினிமா போன்ற ஊடகங்களின் வேகமான வளர்ச்சி மரபுவழி நாடகங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மக்களின் ரசனைகள், பொழுது போக்குகளில் ஏற்பட்ட மாற்றங்களும் அதற்குக் காரணமாகலாம்.

❒ ***கிழக்கில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே அண்மைக் காலத்தில் ஏற்பட்ட விரிசலுக்கு எது காரணம்? இதில் தமிழ் - முஸ்லிம் படைப்பாளிகளின் நிலை எத்தகையது?***

❍ தமிழர் - முஸ்லிம்கள் இடையிலான விரிசல் என்பது அரசியல் ரீதியானது; இன முரண்பாடு அல்ல. அது அரசியல் வாதிகளால் உருவாக்கப்பட்டது. இலங்கையில் இனங்களிடையிலான விரிசலுக்கு கல்விமுறையும் ஒரு பிரதான காரணியாக உள்ளது. மதரீதியாக - இன ரீதியாக - பாடசாலைகள் தனித்துவப்படுத்தப்பட்டிருப்பதே விரிசல்களின் தோற்றத்துக்கு காரணமாகின்றது என்பது எனது கருத்து. இனம், மொழி மற்றும் மதம் ரீதியான வேறுபாடு தெரியாமல் பிள்ளைகள் கல்விகற்கும் சூழல் தோற்றுவிக்கப்பட்டால் பின்னர் வேறுபாடுகள் எழாது. விரிசல்களுக்கான அடிப்படை கல்வி முறை மூலமே ஊட்டப்படுகின்றது. இந்துப் பாடசாலைகள், இஸ்லாமியப் பாடசாலைகள், சிங்களப் பாடசாலைகள் என்ற பாகுபாடுகள் களையப்பட வேண்டும்.

அரசியலுக்கு அப்பால் மனித உணர்வுகளை மதிக்கின்ற படைப்பாளிகள் பலர் கிழக்கில் இருக்கிறார்கள் இன ஐக்கியம் அங்கு நிலைத்திருப்பதற்கு அவர்களும் காரணமாகின்றார்கள். ✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

யப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாவித்த V.C.R. டெக், துணி துவைக்கும் இயந்திரம் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 024-222-4402, 077-3039649, 077-6005478. (34756)

புதிய 400 Wats-AHUJA அம்பிளிபயர் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 6160345. (34762)

கோழி எருவும், ஒரு Great Dane ஆண் நாய்க்குட்டியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர், வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34728)

Sony (Japan) பாவித்த T.V.கள் விற்பனைக்கு. மொடல் 2183-14000/=, 2192-16000/= தொடர்பு: R.மகேஸ்வரன் (சிறுவர் பூங்கா முன்பாக), K.K.S. வீதி, மல்லாகம். (34764)

## வீடு விற்பனைக்கு

கல்வியங்காடு, 3ஆம் கட்டைப் பகுதியில் நல்ல சூழலில் 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 0773 049827. (34731)

இல.226, கொழும்புத்துறை வீதியிலுள்ள வீடும காணியும் விற்பனைக்குண்டு. (கொழும்புத துறை மேற்கு, சனசமூக நிலையத்திற்கு எதிரில்) நேரில்வரவும். மேற்குறிப்பிட்ட விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். (34761)

இளவாலை, பிரதான வீதியில் கோயிலுக்கும் பாடசாலைக்கும் அருகில் 6பரப்புக் காணியுடன் கூடிய வடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 117, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P.: 0777-222103. (34766)

## வீட்டுப பணிப்பெண் தேவை

எங்கள் வீட்டில் தங்கியிருந்து வேலைசெய்ய நடுத்தர வயதுடைய வீட்டுப் பணிப்பெண் ஒருவர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்பு: ஆ.பாலசுப்பிரமணியம், டச் வீதி, சண்டிலிப்பாய் (சீரணிச் சந்திக்கு அருகில்). (34660)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler மற்றும் பேட்டுக் குஞ்சுகள் 02.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவுசெய்யவும். எமது பருத்தித துறைக் கிளையிலும் Suddi வட்டுக்கோட்டைக் கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34323)

தரமான Prima Broiler குஞ்சுகள் (விலை 40/-) 02.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது சகல கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34526)

## மணமகள் தேவை

புலோலி, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 31 வயதுடைய, கொழும்பில் பிரபல கம்பனியில் மாதம் 10,000இற்குமேல் வருமானமுடைய, நிரந்தரத் தொழில்புரியும், சொந்தமான காணிகளுடைய மகனுக்கு அதே குலத்தில் அரச துறையில் தொழில்பார்க்கும் மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: S.சிதம்பரநாதன், புங்கடி, கொடிகாமம் றோட், புலோலி தெற்கு, பருத்தித்துறை. (34661)

யாழ்.இந்து, 1967, கார்த்திகை நட்சத்திரம், 2இல்செவ்வாய், 32பாவம், 5'4" உயரமுள்ள, A/L, (Information Technology), U.K. Citizen லண்டனில் பெரிய பதவியிலுள்ள மகனுக்கு பட்டதாரியான, வேலைபார்க்கும் மணமகள் தேவை. குடும்ப விவரம், ஜாதகம், புகைபடத்துடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: Mr.S.Kumarasamy. 18 1/4, Collingwood Place, Wellawatta T.P.: 0112 552786. (C/36397)

## மணமக்கள் தேவை

35வயது விசாகம் MBBS டாக்டர், 32 வயது சுவாதி ஆசிரியர், 33 வயது கேட்டை வியாபாரம், 28 வயது கணக்காளர் மணமகன்களுக்கும், 31 வயது மிருகசீரிடம் (7இல் செவ்வாய்), 32வயது அவிட்டம் (8இல் செவ்வாய்), 32வயது அனுஷம் பட்டதாரி ஆங்கில ஆசிரியர் மணமகள்களுக்கும் மணமகள் தேவை. தொடர்பு: K.ரவி, 21/1, ரயில்வீதி மேற்கு, சிறாம்பியடி, யாழ்ப்பாணம். T.P.: 222-3272. (34763)

## ஏ.ஆர்.வி- தடுப்பூசி வந்துசேர்ந்தது

யாழ்.மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்கென ஒரு தொகுதி விசர் நாய்க்கடி நோய்த் தடுப்பூசி மருந்து (ஏ.ஆர்.வி) சுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் குடாநாட்டு ஆஸ்பத்திரிகளில் இந்த தடுப்பூசி மருந்து முடிவடைந்துளளதால் நோயாளர்கள் கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு ஆகிய ஆஸ்பத்திரிகளுக்குச் செல்லும் அவல நிலை ஏற்பட்டது.

யாழ். சுகாதார திணைக்களத்திற்கு வந்துள்ள தடுப்பூசி மருந்துகளை ஆஸ்பததிரிகளுக்கு உடனடியாக வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றச் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையில் நடைபெறும் இக கலந்துரையாடலில் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி தெ.து. விஜயலட்சுமி கலந்துகொள்வார். (எ-117)

## கோழி வளர்ப்புக்கான மருந்துவகை விற்பனை

எமது சங்கத்தில் கோழி வளர்ப்புக்குப் பாவிக்கப்படும் பின்வரும் மருந்து வகைகள் விற்பனைக்குண்டு.

1) மீன்தூள்
2) லேயர் பிறிமிக்ஸ்
3) ஸ்ராட்டர் பிறிமிக்ஸ்
4) புறோயிலர் பிறிமிக்ஸ்
5) டி.எல் மெத்தியோன்
6) லைசீன்
7) அம்புறோல்பிளஸ்
8) டைகல்சியம் பொஸ்பேற்

தேவையானவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(சி-36650) (32-13-19-26)

## சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு, கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம், இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும்.

**BIO TEC INTERNATIONAL**
இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.:021-4590907.
(34771)

## பராமரிப்பவர் தேவை

பெண் நோயாளி ஒருவரை உடனிருந்து பராமரிப்பதற்கு நடுத்தர வயதுடைய நல்லொழுக்கமுள்ளவர் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: திருமதி நா.கனகம்மா
43/1, யமுனா வீதி, நல்லூர்.
(34765)

# நீங்காத நினைவுகளின் அஞ்சலி

11ஆம் ஆண்டில்.... 4ஆம் ஆண்டில்....



திருமதி
**அட்ஷயலிங்கம் சரஸ்வதிதேவி**



அமரர்
**வைரமுத்து அட்ஷயலிங்கம்**
(தபாலதிபர்)

| | | |
|---|---|---|
| 18-05-1933 | தாயின் மடியில் | 19-05-1932 |
| 23-04-1993 | இறைவன் அடியில் | 17-07-2000 |

திதி: 01-08-2004 (அமரபக்க பிரதமை) ஆடி மாதம்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமே!
எம்மை வையத்துள் வாழ்வாங்கு
வாழவைத்த அன்புத் தெய்வங்களே!
ஆண்டுகள் பல ஆயிடினும்
ஆறிடுமோ எம் துயரம்?
எம் இதயத்தில் உங்கள் நாமம் என்றும்.
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

*"அட்ஷயபவன்",
தும்பளை,
பருத்தித்துறை.*

(சி-36665) (26-13-19)

*பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்.

# மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ பெற்றோர், தமது டிசெம்பர் 1971 இல் பிறந்த, மிருகசீரிட நட்சத்திரம், அரசாங்கத்தில் நடுத்தர தொழில் புரியும் மகளுக்கு தகுந்த உள்நாட்டு வரனைத் தேடுகின்றார்கள். தகுந்த சீதனமும் வீடும் கொடுக்கப்படும்.

**18.07.1968 அச்சுவினி 2 ஆம் பாதம்**
**20.12.1969 கார்த்திகை முதலாம் பாதம் (நீர்வேலி)**
**23.04.1971 உத்தரட்டாதி 3 ஆம் பாதம்**

மேற்குறிப்பிட்ட ஆண் சாதகங்கள் உத்தமப்பொருத்தமானவை. பெற்றோரின் சரியான முகவரி தெரியாததால் தொடர்புகொள்ள முடியவில்லை. பெற்றோர் விரும்பினால் தொடர்புகொள்ளவும். தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

விளம்பர இல:2339,
C/O உதயன், யாழ்ப்பாணம்.
(34760) (34-13-19-26)

## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் (வ.து)
# கூறுவிலை கோரல்

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாவிக்கப்பட்ட மின் பிறப்பாக்கி இயந்திரம், கைத்தறிகள் எமது சங்கத்தினால் கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. இந்த இயந்திரங்களை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். கூறுவிலைகள் 18.08.2004ஆம் திகதிக்கு முன்னர் *பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு* என்னும் முகவரியில் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம்.

**விவரம்**
1) றொபின் மின்பிறப்பாக்கி 3KV, mark 28, 01 தனி
2) கைத்தறிகள்

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு. (C/36655)(35-13-19-26)

# வெற்றிடங்கள்

27 வருடங்களாக இயந்திரத் தயாரிப்பில் முன்னோடியாக விளங்கும் எமது ஸ்தாபனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

1. உருக்கிணைப்பாளர்கள் (Arc Welders & Tig Welders)
2. பொருத்துநர்கள் (Fitters)
3. பப்ரிகேட்டர்ஸ் (Fabricators)
4. தகட்டு வேலையாள்கள் (Sheet Metal Workers)

மேற்படி வெற்றிடங்களுக்கு சுயமாகச் சிந்தித்துச் செயற்படும் ஆற்றலுள்ள, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அனுபவமுள்ள தரமாக வேலைசெய்வதில் ஆர்வமுள்ள தொழிலாளர்கள் தேவை.

கல்வித் தகைமை:
தேசிய தொழில் பயிலுநர் சபை சான்றிதழ்கள்/தேசிய தொழில்நுட்பக் கல்லூரி சான்றிதழ்கள் பெற்றிருந்தால் நலம்.

அனுபவம்:
குறைந்தது 5 வருடங்கள்.
திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

மேற்படி வெற்றிடங்களுக்கு நற்சாட்சி விவரம் கோரக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசத்துடன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக இயக்குநர்,
**புறோமோட்டர்ஸ் எஞ்ஜினியரிங் கம்பனி லிமிடெட்,**
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி-36666)(34-13-19-26)

# மரண அறிவித்தல்

## திருமதி துரைராசா சிவமலர்

டச்சு வீதி, உடுவிலைச் சேர்ந்த திருமதி துரைராசா சிவமலர் கடந்த (29.07.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற விக்னேஸ்வரன் மற்றும் வசந்தகுமாரி, வனஜா, வனிதா, வத்சலா, விக்னேஸ்வரி, ஜெயதீஸ்வரன், காலஞ்சென்ற சிவனேஸ்வரன் மற்றும் சாரதா, ஜெயராணி, காலஞ்சென்ற ரமேஸ்வரன் மற்றும் ஜெயரூபன் ஆகியோரின் அருமைத் தாயாரும் வரதலட்சுமி, சிறீதரன, சாம்பசிவம், ஜெயக்குமார், தேவராசா, சிவகுமார், தயாநிதி, ஜெயரட்ணம், தவராஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கவிதா, ஈஸ்வரராஜா, மலர்விழி, மதிவதனன், கலாதரன், கயல்விழி அகல்விழி, நிரஞ்சன், நிரோஜன், சிவன்யா, ஜீவனா, ஜீவாகரன், சிவாகரன், அனுசா, அபிரா, அரோஜா, சகானா, அஜிதா, அபிஷன், சாலினி, வினோலினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கிரிஷிகா, அனோஜ் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (02.08.2004) திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி, உடுவில்,
சுன்னாகம்.
(34759)(34-13-19-26)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இது புலமைப்பரிசில் பரீட்சைப் பருவகாலம் (சீஸன்) வீடுகள் தோறும் சிறுவர்களையும், பெற்றவர்களையும் படாதபாடுபடுத்துகின்றது இந்தப் பரீட்சை. சோதனை பிள்ளைகளுக்கா பெற்றோருக்கா என்று தலைகால் புரியாத நிலை.**

**இந்தப் பரீட்சையின் முக்கியத்துவம் சமீபகாலங்களாக பெற்றோர்கள் மத்தியில் ஒருகௌரவப் பிரச்சினையாக மாறிவிட்டிருக்கிறது.**

**இந்தப் பரீட்சை உருவாக்கிவிட்டிருக்கும் சமூகத்தாக்கங்கள் மற்றும் கல்வித்துறையில் இதன் தவிர்க்கமுடியாத வளர்ச்சிப்போக்கு என்பன பற்றி துறைசார்ந்தவர்கள் பலருடன் பேசினோம். அவர்களின் கருத்துக்கள் இங்கே பிரசுரமாகின்றன. பரீட்சை நெருங்குகின்ற வேளையில் இந்தக் கருத்துக்கள் மிகவும் பயனுள்ளவையாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.**

## ஸ்கொலஷிப் சோதனை

# பிள்ளைகளுக்கா? பெற்றோருக்கா?

ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சைக்கு இன்னும் சில நாள்களே உள்ளன. பரீட்சைக்கான நாள் நெருங்க நெருங்க மாணவர்களும் போருக்குப் புறப்படும் வேகத்துடன் தம்மைத் தயார்படுத்துகின்றார்கள். தயார்படுத்தப்படுகின்றார்கள்.

விளையாடும் பருவக்குழந்தையின் வாழ்க்கை முறையைப் பாருங்கள்...

நாளின் 10 மணித்தியாலங்களுக்கு அதிகமான நேரம் தொடர்படிப்பு, விளையாட்டில்லை, தொலைக்காட்சி பார்ப்பதில்லை, நல்ல இசையைக் கேட்பதில்லை. படி... படி... படி என பிள்ளை வாட்டி வதைக்கப்படுகின்றது.

'மீன் பிடிக்க கற்றுக்கொடுப்பதுதான் பயனுடையதே தவிர. மீனை ஒவ்வொருநாளும் கொடுப்பதல்ல'. தற்போதைய கற்றல் முறையில் பிள்ளைகளுக்கு சுயமாகக் கற்றல் மூலமே கற்பிக்க முடியும். ஆனால், இந்தப்பரீட்சைக்குப் பிள்ளையைத் தயார்படுத்தும் முறையைத் திணித்தல் முறை என்றே சொல்லலாம்.

குறிப்பாகப் பிள்ளைகளை விடப் பெற்றோரே இந்தக் காலத்தைச் சோதனைக் காலமாகக் கருதுகின்றனர். தேசிய பாடசாலையில் அனுமதி பெறுவதுடன் இதை (பரீட்சைப் பெறுபேறை) ஒரு கௌரவப் பிரச்சினையாகக் கருதுகின்றனர்.

'எனது பிள்ளை புலமைப்பரிசிலில் சித்தி' என்ற வார்த்தைகளைச் சொல்வதற்கு ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை படாதபாடுபடுத்தி விடுகின்றார்கள்.

பிள்ளைகளுக்கு உண்டாகும் இந்த அக, புற அழுத்தங்கள் மாணவர்களை உளவியல் ரீதியில் பெருமளவு தாக்கத்திற்கு உள்ளாக்குகின்றன.

ஒவ்வொரு பிள்ளையும் தனது தனித்தன்மைக்குரிய அம்சத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. அந்த அம்சத்தை உணர்ந்து அதன் வழியில் பிள்ளையின் கற்கையில் தூண்டுதலை ஏற்படுத்தவேண்டும்.

புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக துறைசார்ந்த சிலரைச் சந்தித்துப் பேசினோம். அவர்கள் தெரிவித்த கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

**மாணவர் மனநிலை பாதிப்படைய இடமளிக்கக்கூடாது**



**யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைப் பிரதி அதிபர் சு.தியாகலிங்கம்**

ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சையானது புலமைப் பரிசிலைப்பெறவும் தேசிய பாடசாலைக்கு அனுமதிபெறவும் ஒரு பிள்ளைக்கு உதவுகின்றது. ஆனால் 10 வீதமான மாணவர்கள் மட்டுமே இந்தப்பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதால் 90 வீதமான மாணவர்கள் சித்தியடைவதில்லை எனக் கருதப்படுகின்றது.

இதனால், பிள்ளைகளின் மனது பாதிக்கப்படுவதோடு, பெற்றோரும் மிகுந்த ஏமாற்றம் அடைகின்றார்கள்.

எனவே, ஒரு குறிப்பிட்ட புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் அனைவரும் சித்திபெற்றவர்கள் எனவும், வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் மட்டும் புலமைப்பரிசிலைப் பெறுவார்கள் எனவும் ஒரு திட்டம் ஏற்படுமானால், பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் மிகவும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிக்கும். இதன் மூலம் அதிகமான பிள்ளைகள் சித்தி அடைவதால் பிள்ளைகள் தொடர்ந்து கற்பதில் ஆர்வம் காட்டுவார்கள்.

ஒவ்வொரு பிள்ளைக்கும் பரீட்சை எடுக்கும் உரிமையுண்டு. எனவே, எல்லாப்பிள்ளைகளையும் பரீட்சைக்கு ஆயத்தம் செய்து அனுப்ப வேண்டும். பிள்ளைகளுக்குப் பாடத்தில் இடர்பாடுகள் ஏற்படுவதை உணர்ந்தால் அதை இனங்கண்டு அதனை விருத்தியடையச் செயய வேண்டும்.

**பிள்ளையின் அறிவு வளர்ச்சியானது முக்கோண வழிப்பாதையில் அமையவேண்டும்**



**யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை 5ஆம் தர வகுப்பாசிரியர் வே.அன்பழகன்**

தற்போது பிள்ளைகள் மிகவும் புத்திசாதுர்யமானவர்கள். மிகவும் ஆழமாக ஆராயும் தன்மை உள்ளவர்கள். உதாரணமாக ஒரு பிள்ளையிடம் 'சந்திரனில் இரண்டாவதாகக் காலடி வைத்தவர்யார்' என வினவினேன். அதற்குப்பிள்ளை 'நீல் ஆம்ஸ்ரோங்'தான் எனப் பதில் சொல்கின்றான். ஏன்? எனக் கேட்டதற்கு அவன் சொன்ன பதில் என்னையே சிந்திக்க வைத்தது. அவன் சொன்ன பதில் 'ஆம்ஸ்ரோங் ஒரு காலை மட்டுமா நிலத்தில் வைத்திருப்பார், இரண்டாவது காலையும் நிலத்தில் வைத்திருப்பார்தானே. எனவே, அவர்தான் இரண்டாவதாகக் காலடி வைத்தவர்' என்பதுதான்.

இப்படியான சிந்தனையாற்றலும், புத்தி சாதுரியமும் உள்ள பிள்ளைகள் இயல்பான கற்றலின் மூலமே கற்றுக்கொள்கின்றது.

பிள்ளையின் கல்வி வளர்ச்சியானது முக்கோண வழிப்பாதையினூடாகக் வளர்க்கப் படவேண்டும். அதாவது, ஆசிரியர் - பெற்றோர்- பிள்ளை என்ற தொடர்பினூடாகவே கற்பித்தல் நடைபெறும்போதே அது வெற்றியளிக்கும்.

பிள்ளைகளுக்கும் கற்றல் ஒரு 'சுகமான சுமையாக'வே அமைதல்வேண்டும். அதாவது பிள்ளைகளுக்கு இலகுவாகக் கற்பிக்கவேண்டும். பிள்ளைகளும் மிகுந்த ஆர்வத்துடனும் விரும்பத்துடனும் கற்கவேண்டும். அப்பொழுதே ஒரு பிள்ளை தேர்ச்சி பெறமுடியும்.

**சூழலுடன் இசைந்து கற்றல் பிள்ளையின் வெற்றிக்கு வழி**



**கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி செ.சகாதேவன்**

ஐந்தாம் தரப்புலமைப்பரிசில் பரீட்சை என்பது பெற்றோருக்கான பரீட்சையா, பிள்ளைகளுக்கான பரீட்சையா எனத் தெரியவில்லை. பெற்றோர்கள் பரீட்சைக் காலங்களில் பிள்ளைகளை வேறு நிகழ்வுகளிலோ, விளையாட்டுக்களிலோ பங்குபற்ற அனுமதிப்பதில்லை. இவற்றில் பிள்ளைகள் ஈடுபடுவதால் பிள்ளைகளின் கல்வித்தரம் குறைகின்றது என்று கருதுகின்றார்கள். இது தவறான கருத்தாகும்.

தற்போதைய கல்வி முறையானது சூழலுடன் இசைந்து கற்றலாகும். பல்வேறு துணை நிகழ்வுகளினூடாகவும் ஒரு பிள்ளை கற்றுக் கொள்கின்றது. பெற்றோர் இதனை உணராது பிள்ளைகள் மீது அழுத்தம் கொடுக்கின்றார்கள்.

இந்தப் பரீட்சைமூலம் நல்லதொரு எதிர்காலம் இருக்கவேண்டும். நல்ல விழுமியத்துடன் மாணவனை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டே நாம் கல்வியை வழங்க வேண்டும்.

**தொலைக்காட்சியின் மோகம் பிள்ளையின் கல்வியைப் பாதிக்கின்றது**



**கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய 5ஆம் தர வகுப்பாசிரியை செல்வி மா.சாந்தினி**

பெற்றோர் சிலர் அக்கறை கொள்ளாமை பிள்ளைகளின் கல்வியில் வீழ்ச்சிக்குக் காரணமாகின்றது. கல்வி அறிவின்மை, வறுமை, நேரமின்மை போன்ற பல்வேறு காரணங்களால் பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்துவதில்லை. பிள்ளைகளைத் தவறாது நாளாந்தம் பாடசாலை அனுப்பி வைத்தாலே ஒரு பிள்ளை போதிய அறிவைப் பெற்றுக்கொள்ளும்.

இப்பொழுது அதிகரித்துள்ள தொலைக்காட்சிகளின் பாவனை பிள்ளைகளின் கல்வியைப் பாதிக்கின்றது. நன்றாகப் படித்த ஒரு பையன் புள்ளிகள் குறைவாக எடுத்ததை அவதானித்து அந்தப் பையனின் பின்புலத்தை ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் வீட்டில் புதிதாக ரி.வி. ஒன்றை வாங்கியிருக்கிறார்கள். பிள்ளை தனது நேரத்தை அதிகமாக ரி.வி. நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில் கழிக்கின்றது. இதுதான் இப்பொழுது அநேக வீடுகளில் நடக்கின்றது.

**ஆசிரியர் பற்றாக்குறையே கல்வித்தர வீழ்ச்சிக்குக் காரணம்**



**யா/கோட்டைக்காடு அ.த.க. பாடசாலை அதிபர் தி.நவரத்தினம்**

அரசு மொத்த மாணவர் தொகையிலிருந்து 10 வீதமான மாணவர்களை மட்டுமே இந்தப் புலமைப் பரிசில் பரீட்சைமூலம் தேர்ந்தெடுக்கின்றது. மாணவர்கள் பெறும் புள்ளி அடிப்படையிலேயே வெட்டுப்புள்ளியை அமைக்கின்றார்கள். எனவே, எல்லா மாணவர்களும் சித்தியடைவது அதாவது, புலமைப் பரிசிலைப் பெறுவது என்பது ஒருபோதும் நடக்காது.

பிள்ளைகளின் தர்க்க சிந்தனைகளையும் அவதானத்தையும் வளர்ப்பதற்கு இந்தப் பரீட்சை உதவுகின்றது.

சில கெட்டிக்காரப் பிள்ளைகளும் சித்தியடையாததற்குக் காரணம் பிள்ளைகள் கேள்வியை அவதானமாக வாசிப்பதில்லை. பதில் சரியாக அளித்தாலும் அந்தப் பதில் அளிக்கும் முறையை மாற்றிக்கொடுப்பதால் அந்த வினாவுக்கான புள்ளியை இழக்கின்றார்கள்.

எனவே, இந்தப் பிள்ளைகளுக்கு நாம் புதிதாகத் திணிப்பதைவிடப் பிள்ளைகளுக்கு கேள்விகளை எவ்வாறு பதிலளிப்பது என்பதைத் தெளிவுபடுத்திவிட வேண்டும். இதற்கு நிறைய மாதிரிப் பயிற்சிகளை அளிப்பது சிறந்ச பலனைத் தரும்.

சில பாடசாலைகளில் பரீட்சைப் பெறுபேறுகள் வீழ்ச்சியடைவதற்குக் காரணம் ஆசிரியர் பற்றாக்குறையே. ஆரம்பப் பிரிவுக்கு ஆசிரியர்கள் அதாவது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மிகக் குறைவு.

சில பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பிலேயே பிள்ளைகளைத் தேர்ந்து எடுப்பதால் அங்கு பெறுபேறுகள் அதிகமாகக் கிடைக்கின்றன. சில ஆசிரியர்களின் அதிகமான முயற்சியும் வெற்றிக்குக் காரணமாகக் குறிப்பிடலாம்.

**மாணவர் வரவில் அக்கறை செலுத்தப்படுவது அவசியம்**



**இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு அதிபர் வீ.பரஞ்சோதி**

பாடசாலையைச் சூழவுள்ளவர்களில் வசதி படைத்தவர்கள் தமது பிள்ளைகளை நகர்ப்புறப் பாடசாலைகளில் சேர்க்கின்றார்கள். கிராமப் பாடசாலைகளில் பெரும்பாலும் வறிய மாணவர்களே சேர்கின்றார்கள். இதனால், மாணவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாக்கப்படாததால் அவர்கள் கல்வியில் அக்கறை காட்டுவதில்லை.

கிராமப் புறங்களில் உள்ள பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டுவதில்லை. சிலர் அக்கறை எடுப்பார்கள் தான். ஆனால், பலர் விவசாய நடவடிக்கைகளுக்காகத் தமது பிள்ளைகளைப் பயன்படுத்துவதால் பிள்ளைகள் ஒழுங்காகப் பாடசாலை வருவதில்லை. இது அவர்களின் கல்வியைப் பாதிக்கின்றது.

பாடசாலைக்கு வேண்டிய உபகரணங்களை வாங்காமல் கல்வியை மேற்கொள்வது என்பது பிள்ளையின் கல்வியைப் பாதிக்கும் விடயமாகும்.

எனவே, பெற்றோர்கள் தமது பிள்ளையின் கல்வியில் அக்கறையுடன் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

**மீத்திறன் குறைந்த மாணவர் மீது விசேட கவனம்செலுத்தவேண்டும்**



**இணுவில் மத்திய கல்லூரி தரம் 5 வகுப்பாசிரியர் இ.வை.கனகநாயகம்**

தனியாள் வேறுபாடு என்பது பிள்ளைக்குப் பிள்ளை உண்டு. எனவே, அதற்கேற்ற வகையில்தான் நாம் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும். எனவே, நாம் ஆரம்பத்திலேயே அதாவது தரம் ஒன்று படிக்கும்போதே பிள்ளைகளின் தரத்தை மாற்றியிருக்கவேண்டும்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரை ஒரு வகுப்பில் மீத்திறன் உள்ள பிள்ளைகளும் இடைநிலைப் பிள்ளைகளும் எழுத்துக்களை எழுதிவிட்டுப் பார்த்தெழுத முடியாத பிள்ளைகளும் உள்ளனர். இதனால், ஆசிரியர்கள் இவர்களுக்குக் கற்பித்தலை மேற்கொள்ளும்போது மீத்திறன் உள்ள மாணவர்களுக்கான கற்பித்தல் தாமதமடைகின்றது. இது ஆசிரியர்களைப் பொறுத்தவரை பெரும் பிரச்சினையாக உள்ளது.

இதனை அந்தப் பிள்ளைகளின் பெற்றோர்கள் உணரவேண்டும். தமது பிள்ளைகளுக்கு வீட்டில் எழுத்துப் பயிற்சிகளை அளித்துப் பிள்ளைகளின் எதிர்காலத்தை முன்னேற்றவேண்டும்.

**செவ்வித்தொகுப்பு: தீபா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம்
பெருமையுடன் வழங்கும்

உன்னத தேசிய வியாபார விருது

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்குப் பங்களிக்கும் அதேவேளை
வியாபாரத்தில் திறமையைக் காட்டிய
வியாபார முயற்சிகளை அங்கீகரிக்குமுகமான ஆண்டுநிகழ்வு

• விருதுகள்
வாங்கப்படவுள்ள 43 விருதுகளில்
ஒன்றை அல்லது பலவற்றையும்
அதனுடன் கிட்டும் பல நலன்களையும் வென்றிடுவீர்

தகைமை
ஆகக்குறைந்தது 5 வருடங்களாக இயங்கிவருவதும்
இலங்கையில் நிலைகொண்டுள்ளதுமான ஏதேனும் வியாபார அமைப்பு

வியாாபார வகுதிகள்
மிகப்பெரிய, பெரிய, நடுத்தர, சிறிய

துறைகள்
விவசாய, கால்நடை, அகழ்வு, பார்க்குழிற்றொழில், கடற்றொழில்
பதனிடல், உற்பத்தி, கைத்தொழில், எந்திரவியல்
பயன்பாடுகள், உட்கட்டமைப்பு
வங்கித்தொழில, காப்புறுதி
பொழுதுபோக்கு, களியாட்டம்
நிதிச் சேவைகள்
தொழில்நுட்பம் தொடர்பான சேவைகள்
பிற சேவைகள்
வர்த்தகம்

வைபவம்
விருந்தளிப்பு வைபவம்
கொழும்பு ஹில்டன் ஹோட்டலில்
2004 நவம்பர் 12 ஆம் திகதி நடைபெறும்

விண்ணப்பங்கள்
விண்ணப்பப்படிவங்களை
இலங்கை தேசிய வர்த்தக கூடம்
450, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10
என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.
தொலைபேசி : 5374801- 3, தொலைநகல் : 2689596
மின்னஞ்சல் : sg@nccsl.lk
இணையத்தளம் : http ://www.nationalchamberlk.org
விண்ணப்பங்கள் 2004 ஆகஸ்ட் 31 இல் முடிவடையும்

National Business Excellence Awards




## அச்சுவேலியில் திருத்தப்படாத பயித்தோலை வீதி

அச்சுவேலி,ஓக.1

அச்சுவேலி பிரதேச சபை உப அலுவலகத்தின் 10ஆம், 11ஆம் வட்டார எல்லை வீதியாக விளங்கும் பயித்தோலை வீதி 25 வருடங்களுக்கு மேல் திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக இருப்பதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பிரதான வீதிகள் இரண்டை இணைக்கும் இந்த வீதி பெருமளவில் வாகனங்களும் பொது மக்களும் பயன்படுத்தும் வீதியாக இருந்த போதிலும், நீண்ட காலமாக திருத்தப்படாமல் இருப்பதால் மாரிமழைகாலத்தில் வெள்ளம் தேங்கி நீர்த் தேக்கம் போல் காணப்படுகின்றது.

இந்த வீதியைத் திருத்தி அமைப்பதில் உள்ளூராட்சி அமைப்பிற்கும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் இடையே யாருக்கு வீதியை திருத்தி அமைக்கும் அதிகாரம் என்ற இழுபறி நிலை இருப்பதாக -

தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

(ஐ-11)


அழகுக் கலை பயிற்சி வகுப்புகள்

இலங்கை அரசாங்க அங்கிகாரம் பெற்ற
சன்றிதழ் வழங்கப்படும்

* சிகை அலங்காரம் ┌ 10 (Latest Hair Styles) 07.08.2004 சனிக்கிழமை.

* மணப் பெண் அலங்காரம் – 08.08.2004 ஞாயிற்றுக் கிழமை. (Dance Make up) - நடன ஆசிரியர்களும், மாணவர்களும் வரவேற்கப்படுகின்றனர்.

* Facials, பொடுகு தொல்லை, முடி உதிர்தல், Perming – 09.08:2004,, 10.08.2004 திகதிகள் (திங்கள், செவ்வாய் கிழமைகள்).

* மங்கு, மரு, கழுத்துக் கறப்பு, கண்ணின் கீழ் கரு வளையம், முகத்தில் பள்ளம், கரும்புள்ளிகள் போன்றவற்றிற்கு சிகிச்சை வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:
திருமதி. நளினி சிவகுமாரன்,
(NalineS Beauty Parlour)
(Herbal & Aroma Theraphy)

காலம் :- ஆகஸ்ட் 7ம், 8ம், 9ம், 10ம் திகதிகளில்
புதிய நேரப்படி காலை 10.00 முதல் மாலை 4.00 வரை.
இடம் :- 393/48, கோயில் வீதி, நல்லூர்.

முன் கூட்டிய உங்கள் பதிவுகளுக்கான தொடர்புகளுக்கு:

திருமதி. நளினி சிவகுமாரன்
தொ.பே.: 0777 383846, (011) 2 595390, (011) 2 503138.
செல்வி. மீரா
தொ.பே.: 021 222 2472, 0777 722056.



எமது சிறார்களின் ஆங்கில அறிவையும் கல்வித் திறமைகளையும்
நேரில் பார்வையிட ஒரு அழைப்பிதழ் !!

260 பாலர் பாடசாலை சிறார்களும் 270 ஆங்கில பாடசாலை சிறார்களும் பங்கு பெறும் ஆங்கில மொழி மூலமான மெகா விழா

BRITISH BUSINESS SCHOOL
பாலர் பாடசாலை சிறார்களும் ஆங்கிலப் பாடசாலை சிறார்களும் தங்கள் திறமைகளை
Saturday 14th August 2004 அன்று
English Day & Concert
மூலம் தமது பெற்றோருக்கும் நலன் விரும்பிகளுக்கும் காண்பிக்க இருக்கின்றார்கள்.



நேரம்
காலை 9.00- ப.ப 1.00 (யாழ் சிறார்கள்)
ப.ப 2.00- மாலை 6.00 (வடமராட்சி சிறார்கள்)

இடம்
யாழ். வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

பொது மக்கள் குறிப்பாக தங்கள் பிள்ளைகளை எமது பாலர் பாடசாலைகளிலும் ஆங்கில வகுப்புக்களிலும் சேர்க்க விரும்புவோர்களை அன்புடன் அழைக்கின்றோம். எங்கள் பாடசாலைகளின் கற்கைத்தரத்தை அறிய இது ஒரு அரிய வாய்ப்பு.

ஆவணியில் ஆரம்பம்

பாலர் பாடசாலை வகுப்புக்கள்
- ஆங்கில மொழிமூலம்
- தமிழ் ஒரு கட்டாய பாடம்
- 2+ முதல் 5+ வரை

சிறுவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள்
[5+ – 14+ வரை] Level 1,2,3,4

சிறார்களுக்குக்கான CAMBRIDGE சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்
BRITISH COUNCIL இனால் யாழ் நகரில் நடாத்தப்படும்.

The Peninsula's English Academy

BRITISH BUSINESS SCHOOL
யாழ்ப்பாணம்: இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
வடமராட்சி: பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி.
HOT LINE : 021-222-5796

British BUSINESS SCHOOL
Where Students Come First


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கென்றொரு சினிமா, தொலைக்காட்சி மரபு இல்லாதது பெருஞ்சோகம்..!



சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் வீ. அரசு அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரை 'உதயன்' வாசகர்களுக்கென்றே சிறப்புச் செவ்விகண்டோம்.

***கேள்வி:*** உதயன் வாசகர்களிடம் நீங்கள் எத்தகையவராக அறிமுகமாகப்போகிறீர்கள்?

***பதில்:*** சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறைப் பேராசிரியராகவும் அந்தத் துறையின் தலைவராகவும் பணியாற்றுகிறேன். கலாநிதி, முதுமாணி பட்டங்களுக்கான ஆயவுகளுக்கான வழிகாட்டியாகவும் கடமைபுரிகிறேன். தமிழ் சமூக வரலாறு, அதோடு தொடர்புடைய துறைகள் ஆகியவற்றில் எனக்கு ஈடுபாடும் பரிச்சயமும் உள்ளது. குறிப்பாக ஊடகங்கள் அச்சு ஊடகம், காட்சி ஊடகம் இவை பற்றிய பல்கலைக்கழக புலமைசார் ஆய்வுகளை நடத்தும் ஆர்வமும் எனக்கு உள்ளது.

கொழும்பில் நடக்கும் பேராசிரியர் வி.செல்வநாயகம் நினைவுப் பரிசில் வழங்கும் நிகழ்வில் பங்குகொள்ளும்படி அதனை முன்னின்று நடத்துபவர்களான பேராசிரியர் சிவத்தம்பி, குமரன் ஆகியோர் அழைத்தனர். அந்த விழாவில் பரிசுபெறும் ஐராவதம் மகாதேவன் அவர்களைப் பற்றிய அறிமுக உரையை நிகழ்த்தும் வாய்ப்பை அவர்கள் எனக்கு வழங்கினார்கள். அதற்காக கொழும்பு வந்த என்னை பேராசிரியர் சண்முகதாஸ் யாழ்.பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரையை நிகழ்த்த வரும்படி அழைத்தார். அவரது அழைப்பை ஏற்று வந்திருக்கிறேன்.

### எதிர்பார்த்ததும் நேரில்கண்டதும்...

***கேள்வி:*** யாழ்ப்பாணம் என்றவுடன் நீங்கள் எதிர்பார்த்ததும் நேரில் கண்டதும்..?

***பதில்:*** நான் யாழ்ப்பாணத்தைப் பற்றிய எதிர்பார்ப்புடன் அல்ல... யாழ்ப்பாணத்தைப் பற்றிய - கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக - தமிழக ஊடகங்களில் வரக்கூடிய எல்லாச் செய்திகளையும் அன்றன்று வாசித்தும், கேட்டும், பார்த்தும் அறிகின்ற ஈடுபாடு உடையவன் நான். இங்கு நடந்த பல்வேறு விதமான போர் சம்பவங்கள், நடவடிக்கைகள் அன்று சம்பந்தப்பட்ட அழிவுகள் மக்களுடைய வாழ்வு முறையில் ஏற்படும் மாற்றங்கள் இப்படி பல விடயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவல் எனக்கிருந்தது. இங்கு தரைவழியாக வந்தபோது, வரும்பாதையின் இருபுறங்களிலும் கண்ட காட்சிகள், பல்வேறு நிகழ்வுகள் ஒரு வித்தியாசமான உலகத்தைக் காட்டின.

நான் தமிழகத்தில் ஊடகங்கள் மூலம் அறிந்தவற்றைக் கண்ணால் பார்த்தேன்.

இங்கு வந்த பிறகு பேராசிரியர் சிவச்சந்திரனோடு அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை போன்ற பகுதிகளுக்குச் சென்றுவந்தேன். அப்பிரதேசத்தில் மனிதர்கள் வாழாமல் இருக்கிற வீடுகள் அங்குள்ள வளங்கள் ஆகியவற்றைப்பார்த்தபோது, எனது மனதை அவை பெரிதும் பாதித்தன. மனிதர்கள் குடிபெயர்வது என்பது மேலும் வளமாக வாழ்வதற்காகவே. ஆனால், அந்த வளமான பூமியை விட்டு குடிபெயர்ந்திருப்பது மிகப்பெரிய சோகம். அந்த வளம் வீணாகிப் போகிறது என்பது அதை விடப்பெரிய சோகம்.

***கேள்வி:*** 1960களுக்குப் பிறகு தமிழகத்தில் தமிழ் உணர்வு அதிகமாகவே பேசப்படுகிறது. அப்படி இருக்கும்போது உங்கள் பல்கலைக்கழகம் உள்ள சென்னைநகரத்தில் கூட ஆங்கிலக்கலப்பு மிக்க தமிழ் அதிகரித்துவருவதாகவே அங்கிருந்து வருவோர் வேதனை தெரிவிக்கின்றனர். இதனை போக்க தமிழ் துறைப் பேராசிரியர் என்ற வகையில் என்ன கூறுகின்றீர்கள்?

***பதில்:*** தமிழ் பேராசிரியர் என்றால் அவருக்கு இரண்டு அடிப்படைகள் இருக்கும். ஒன்று வந்து தமிழ் மொழியை, பண்பாட்டை தமிழர்கள் சார்ந்த இனத்துவக் கண்ணோட்டத்தில் புரிந்துகொள்ளும் முறை இன்னொரு பக்கம் மொழி என்பது காலந்தோறும் எப்படிப்பட்ட தாக்கங்களை உள்வாங்கி வளர்ந்து வருகிறது என்பதைப் புரிந்துகொள்வது மற்ற முறை. இப்படி இரண்டு அடிப்படையான தீர்வுகள் உண்டு.

ஒரு மொழிக்கும் இனத்துக்குமான உறவு, அது சம்பந்தப்பட்ட செய்திகள் என்ற வகையில் உங்கள் கேள்வியைப் பார்க்கமுடியாது. இந்தக்கேள்வியை ஈழத்தில் இருப்பவர்கள் தான் அதிகம் எழுப்புகிறார்கள்.

மொழிக்கலப்பு என்பது தமிழைப் பொறுத்தவரை தொடர்ச்சியாக இருந்து கொண்டே வருகிறது. சங்க இலக்கியத்தில் மொழிக் கலப்பினுடைய அளவு குறைவு. பின்னர் பக்தி இலக்கியத்தில் பார்த்தால் கொஞ்சம் அதிகமாகவேயிருக்கும். பிற்காலச் சிற்றிலக்கியங்கள் என்று சொல்லக்கூடிய பிரபந்த இலக்கியங்களில் இந்த அளவு மேலும் அதிகம். பிறகு சமயம் சார்ந்த இலக்கியங்களாக இருக்கக் கூடிய - குறிப்பாக வைணவம் சார்ந்த இலக்கியங்களில் மணிப்பிரவாளமொழி என்று கலப்பு அதிகரித்தது. இவற்றில் வடமொழிச் சொற்களை தமிழில் பயன்படுத்துவதென்பது நடந்தது.

தமிழ் நாட்டிலே ஆட்சிமொழியாக, ஆட்சி அதிகாரச் சொற்களாகத் தமிழ் பயன்படுத்தப்பட்ட சூழலில் - 1920களிலே அதிகம் வடமொழிச் சொற்களையே பயன்படுத்தினார்கள். ஆனால் அதே காலதத்லேயே இன்னொரு பக்கம் தனித் தமிழ் இயக்கமும் உருவானது. வேறுமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதைத்தவிர்க்க வேண்டும் என்று திரு.வி.க. போன்றவர்கள் அப்போதே வலியுறுத்தினார்கள்.

இந்த இரண்டும் நடந்து வந்தபோது சமூகத்தில் வேறோர் இயக்கமும் உருவானது. அது திராவிட இயக்கம் . அது தமிழ் இனம், மொழி பற்றிப்பேசுகிற ஓர் இயக்கம். அந்தத் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ் மொழியில் வடமொழிச்சொற்கள் கலப்பதைத் தவிர்த்துபேசத் தொடங்கினார்கள். குறிப்பாக அண்ணாத்துரையிலிருந்து, எல்லோரும் அதனைப் பினபற்றினார்கள். அது இப்போது தமிழ் நாட்டினுடைய எழுத்து நடையாக வந்துவிட்டது.

> **தமிழில் ஈடுபாடு மிக்கவர்கள் இங்கு அதிகாரத்தில் உள்ளனர். அதனால் இங்குதானே தமிழ் இனிதாக வளரும்.**

எழுத்துமொழி, அலுவலகமொழி, விளம்பரப்பலகை மொழி என்று அந்த நடை இப்போது வந்துவிட்டது.

இப்போது நீங்கள் ஆங்கிலக் கலப்புப் பற்றிக்கேட்கிறீர்கள். ஆங்கிலக் கலப்பு என்பது தமிழ் நாட்டைப்பொறுத்தவரை 1950 களிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பித்து இன்று அதன் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. எதில் அதிகமாக உள்ளது என்றால் காட்சி ஊடகத்தில், அத்துடன் வெகுசனங்கள் வாசிககிற, குமுதம் போன்ற மிக ஜனரஞ்சகமான பத்திரிகைகளில் ஆங்கிலக் கலப்பு அதிகமாகிவிட்டது. சிரத்தையாக எழுதுகின்ற எழுத்துக்களிலேயோ, தினமணி போன்ற பத்திரிகைகளிலேயோ, இந்த கலப்பு மொழிநடை கிடையாது. சிலபத்திரிகைகள் - தினமலர் போன்றவை வேண்டுமென்றே அந்த கலப்பு மொழிநடையைக் கொண்டுவருகிறார்கள். அதற்கு அவர்களுக்கு ஒரு நோக்கம் உண்டு. ஆனால், நேர்மையாக இருப்பவர்கள் எவரும் கலப்பு மொழி நடையைப் பத்திரிகைகளில் கொண்டுவருவதில்லை. ஆய்வுகள், கட்டுரைகள் எழுதுபவர்கள் கலப்பு மொழிநடையைப் பின்பற்றுவதில்லை.

இப்போது, பேச்சுவழக்குச் சார்ந்த ஆங்கிலக்கலப்பு வந்தது. ஒரு குறிப்பிட்ட பொது மக்கள் மத்தியில் தான் இந்தப் பேச்சுவழக்கு எழுந்ததாகப் பதிவுசெய்யப்படவில்லை. ஆகையால் அது எதிர்காலத்தில் பெரும்செல்வாக்குச்செலுத்தி, தமிழ்மொழி அழிந்துவிடும் என்று சொல்வதென்பது அடிப்படை இல்லாதது.

### ஆங்கில ஆதிக்கம்

***கேள்வி:*** உங்கள் பதில் மொழி சார்ந்ததாக அமைந்துள்ளது. ஆனால், சமூகம் சார்ந்ததாகப் பார்த்தோமானால் இந்தியாவில் பிறமொழிபேசும் கல்விமான்கள் உதாரணமாக மலையாளமோ, கன்னடமோ, பேசுபவர்கள் சந்தித்துக்கொண்டால் தமது தாய்மொழியிலேயே உரையாடுவது வழக்கம். ஆனால், தமிழ் அறிஞர்கள் சந்திக்கும்போது ஆங்கிலத்தில் உரையாடுவதே நாகரிகம் என்ற நிலைப்பாடு உருவாகிவருகிறது. இதனைப் பார்த்தால் ஒரு மொழியாகத் தமிழ் காப்பாற்றப்பட்டாலும், தமிழர்களிடமிருந்து அது அன்னியப்பட்டுவிடுமோ என்று கவலை எழுகிறதே?

***பதில்:*** இல்லை, நீங்கள் சொல்கின்ற அந்தப் பிரிவினர் - சந்திக்கும்போது, ஆங்கிலத்தில் பேசுகின்றவர்கள் - எல்லாத்தரப்பிலும் இல்லை. அது குறிப்பாக தமிழ்நாட்டின் சமூக வரலாற்றில் ஓர் ஆதிக்க சாதிமரபினர் உள்ளனர். அந்த [illegible] காலத்திலும் [illegible] இருந்ததேஇல்லை.

அதாவது, அவர்கள் கடிதம் எழுதுவது வீட்டில் பேசுவது இதெல்லாவற்றிலும் தமிழை மரியாதையுடன் பயன்படுத்தவில்லை. குறிப்பாக அந்த ஆதிக்கச்சாதியைச் சார்ந்தவர்கள் ஆங்கிலக்கல்வி முறைவந்தவுடன் ஆங்கிலத்திலேயே கற்றுவருபவர்கள். அதனுடைய தொடர்ச்சிதான் ஆங்கிலத்தில் பேசுவது எல்லாம்.

அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், ஆங்கிலம் அதிகாரமொழி. அந்த ஆங்கிலத்தில் பேசும் தனக்கு அறிவு இருக்கும் அதிக செய்தி தெரியும் என்று நம்புகிறார்கள். இத்தகைய ஓர் உளவியலை அவர்கள் தமிழ் நாட்டில் பரப்பியிருக்கிறார்கள்.

இது எந்தளவுக்கு இருக்கிறதென்றால், தமிழ்நாட்டிலே ஓர் அலுவலகத்துக்குச் சென்று ஒரு கேள்வியை ஆங்கிலத்தில் கேட்பதற்கும், தமிழில் கேட்பதற்கும் இடையே கிடைக்கும் பதிலில் மரியாதையில் வேறுபாட்டை ஏற்படுத்தி இருக்கிறது.

இதனால், அந்த அதிகார மொழியைக் கண்டு பயந்து போகின்றவர்களும் ஆங்கிலத்தைப் பயன்படுத்தத் தொடங்குகின்ற போலித்தனம் உருவாகிறது. ஆங்கிலம் பேசுவது சமூகநிலையை உயர்த்தும் என்று நினைத்துப் பேசுகிறார்கள். இது ஒருவகையான போலி மனநிலை. இந்தப் போலி மனநிலை பலதரப்பிலும் உள்ளது. தமிழர்கள் மத்தியில் கொஞ்சம் அதிகமாக உள்ளது. இது ஒருவகையான தாழ்வு மனப்பான்மை. ஆனாலும் தமிழ் நாட்டின் பண்பாட்டு வரலாற்றில் இது ஒரு கொடுமைதான்.

***கேள்வி:*** இந்த நிலைக்குக் காரணம் ஆதிக்க சாதியினர் என்று கூறுகிறீர்கள். ஆனால் 60 களுக்குப் பின்னர் தமிழை அடிப்படையாகக் கொண்டுவளர்ந்த திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் தமிழில் கற்று தமிழில் கலாநிதிப்பட்டம் வாங்கிய ஒருவருக்கு உரிய மரியாதை கிடைக்கிறதா?

### தமிழ்மூலம் கற்பதற்கு பாடசாலையில்லை

***பதில்:*** தமிழ்த் தேசியத்தைப் பேசி ஆட்சிக்கு வந்தவர்கள் தமிழை ஆட்சி மொழியாகவோ, பயிற்றுமொழியாகவோ ஆக்கி உள்ளார்களா என்று கேட்டிருந்தால் பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகின்றேன்.

இந்தக் கேள்விக்கு இல்லை என்பதே எனது பதில். அவர்கள் ஏன் இதனைச் செய்யவில்லை என்றால் தமிழை வைத்து ஆட்சியைப் பிடித்தவர்களும் ஆங்கிலம் படிப்பதே அறிவு, ஆங்கிலத்தின் மூலமாகத்தான் பெரிதாகத்தாம் சாதிக்கமுடியும் என்று தனிப்பட்ட முறையில் நம்புகிறார்கள் அவர்கள். வீட்டுப்பிள்ளைகள் எல்லோரையும் ஆங்கிலமொழிமூலத்தில் தான் படிக்கவைக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்குத் தமிழில் பேசத் தெரியாது. இதைவிட, தமிழகத்தில் உள்ள நகரங்களில் ஒன்றில்கூட தரமான கல்வியை தமிழில் கற்க வேண்டுமென்றால் பாடசாலையே கிடையாது. எல்லாமே ஆங்கில மொழிப்பாடசாலைகள் தான். இந்நிலை 60களுக்குப்பின்னர் உருவாகியது. அலுவலகங்களில் பணியாற்றுவோர், வசதிபடைத்தவர்கள். மேல் மட்டத்தில் இருப்பவர்கள் என எல்லோரது குழந்தைகளும் ஆங்கிலத்தில் தான் கற்கிறார்கள்.

இப்போது தமிழில் கற்க வசதியாக பாடத்திட்டத்தை மாற்றினால் முதலில் பாதிக்கப்படப்போகின்றவர்கள் அவர்களது பிள்ளைகள்தான்.

பெரும்பாலான மக்கள் குறிப்பாக கிராமப்புற மாணவர்கள் - தமிழில் கற்க ஆர்வமாக இருந்தாலும்கூட மேல்தட்டு மற்றும் நடுத்தர வர்க்கத்தினரின் குரலே அதிகாரத்தில் உள்ளதால் தமிழில் கல்வி என்பது கைகூடவில்லை.

இவர்களுக்கு தமிழ் என்பது வாக்குப் பெறமட்டுமேதவிர அதனை ஆட்சி மொழியாகவோ, பயிற்றுமொழியாகவோ கொண்டுவருவதை அவர்களே விரும்பவில்லை என்பதுதான் உண்மை.

### அதிகாரம் இல்லை

***கேள்வி:*** இந்த நிலையை மாற்ற உங்களைப் போன்ற கல்வியியலாள்கள் நடவடிக்கை எடுக்கவில்லையா?

***பதில்:*** ஒரு சமூகத்தில் ஆட்சி அதிகாரம் என்பது ஒன்று கருத்து நிலைகளை விவாதிக்கும் [illegible] அறிவுக்கூட்டம் என்பது மற்[illegible], இந்த அறிவுக் கூட்டத்தின் கருத்தை அதிகார பீடத்தில் உள்ளவர்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளமாட்டார்கள். அதிகார பீடத்தில் இருப்பவர்கள் உறுதியாகவும், துணிவாகவும் இருந்தால் மட்டுமே இந்த மாதிரியான வடயங்களைச் செய்யமுடியும். ஆனால், இவர்கள் எதனையும் செய்யமாட்டோம் என்கிறார்களே?

***கேள்வி:*** சிலமாதங்களுக்கு முன்னர் தமிழகத்தில் இருந்து வந்த இலக்கியவாதி ஒருவர், பிறமாநிலங்களில் உள்ள மொழிசார் பேராசிரியர்கள் தத்தமது மொழியில் ஆக்கங்களை, வெளியிட்டு மொழியின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். ஆனால் தமிழகப் பேராசிரியர்கள் இன்றும் ரஜினி ரசிகர்கள் மட்டத்திலேயே இருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டினார்.

***பதில்:*** இல்லை... இல்லை... இதனை நான் மறுக்கிறேன். கேரளா, கர்நாடகா போனற மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் மொழிப் பேராசிரியர்கள் தமது மொழியில் ஆய்வுகள், ஆக்கங்களை அதிகம் வெளியிடுகிறார்கள் என்பது உண்மைதான் அதற்காக தமிழகத்தில் பேராசிரியர்கள் அப்படியில்லை என்று கூறிவிடமுடியாது.

எண்ணிக்கை குறைவு என்று வேண்டுமானால் கூறலாம்.

ஏன் எண்ணிக்கை குறைவு என்பதை அறிய, பல்கலைக்ழகங்களில் எப்படிப்பட்டவர்களை ஆசிரியர்களாக அமர்த்துகிறார்கள் என்பதற்கு விடைகாணவேண்டும். இந்த நியமனங்கள் அரசு அதிகாரம் சார்ந்தவை. இதனைச் செயற்படுத்தும் முறையில் ஒழுங்கீனம் அதிகம். இதனால் தகுதியில்லாத பலரை பலகலைகக்கழக ஆசிரியர்களாக நியமித்து விடுகிறார்கள். இப்படி ஒழுங்கீனமாக நியமிக்கப்பட்டவர்கள் பிறகு மற்றொருவரை நியமிக்கும்போது தராதரம் இல்லாதவரையே நியமிக்கிறார். இப்படி இது சங்கிலித் தொடராகச் செல்லும். இந்த நிலையில் பல்கலைக்கழகத்தின் சிறப்பான செயற்பாடு என்பது சிக்கலாகத்தான் இருக்கும். அதனால் நீங்கள் குறிப்பிட்டதுபோல் பேசுவார்கள். ஆனால் இதனை பொதுமைப்படுத்துவது தவறு.

### ஈழத்தில் தமிழ்

***கேள்வி:*** எதிர்காலத்தில் ஈழத்திலிருந்தே சிறந்த தமிழ் இலக்கியம் உருவாகும் என்ற கருத்து பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

***பதில்:*** ஈழத்தைப் பொறுத்தவரையில், இங்குள்ள தமிழர்கள் தமிழ்மொழியின் மீது மிகுந்த ஈடுபாடு உள்ளவர்களாக இருக்கிறார்கள். உயர் கல்வியை தமிழில் படித்தவர்கள் இங்குள்ளனர். ஆங்கிலத்தின் பக்கம் அதிகம் நீங்கள் செல்லவில்லை. ஆனால் தமிழ் நாட்டில் அப்படியல்ல. ஆங்கிலத்தில் படித்தவர்கள்தான் அங்கு தமிழ் எழுத்தாளர்களாகப் பெரும்பாலும் உள்ளனர். வெறும் தமிழ் மட்டும் தெரிந்த எழுத்தாளருக்கு அங்கு அவ்வளவு மரியாதை இருப்பதாகக் கூறமுடியாது.

**செவ்வி: மதுமிதா**

தமிழின் மீது ஈடுபாடற்ற ஆதிக்க சக்தி தமிழகத்தில் மேலே இருக்கிறது. ஈழத்தில் தமிழின் மீது ஈடுபாடுகொண்ட ஆதிக்க சக்தி அதிகாரத்தில் உள்ளதாகவே கருதுகிறேன்.

ஆகவே, நிச்சயமாக எதிர்காலத்தில் தமிழ்த் துறையின் வளர்ச்சி ஈழத்தில் நன்றாகவே இருக்கும் இதில் சந்தேகமேயில்லை.

இங்கு யாழ்.பல்கலைக்கழகத்தை எடுத்துக்கொண்டால், பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் வித்தியானந்தன் போன்றதமிழ் அறிஞர்கள் இங்கு பெரிய பதவிகளில் - பொறுபபுக்களில் இருந்துள்ளார்கள். ஆனால் தமிழ் நாட்டைப்பொறுத்தவரை இது மிகவும் குறைவு. நீங்கள் தமிழா? ஆங்கிலமா? என்று வரும்போது தமிழுக்கு முதலிடம் கொடுக்கிறீர்கள். தமிழகத்தில் அதிகாரத்தில் இருப்பவர்கள் ஆங்கிலத்துக்கு முன்னுரிமை கொடுத்துவிடுகிறார்கள். ஆகையால் இங்கு தான் தமிழ்வளரும்!

ஆனால், உங்களுக்கென்று ஒரு சினிமா மரபோ, தொலைக்காட்சிமரபோ இல்லை நீங்கள் தமிழக சினிமா, தமிழக தொலைக்காட்சிகள் இவற்றையே உங்கள் மரபாகப் பார்க்க வேண்டிய சோகம் இருக்கிறது. ஆனால் அவை நீங்கள் விரும்புகின்ற கருத்தியல்களுக்கு நேர்மாறானவையாக உள்ளன. அவற்றை நிர்வகிப்பவர்கள் வியாபாரிகள். அவர்களுக்கு மொழி, இன உணர்வு ஏதுமில்லை. சந்தையில் விலை போவதை விற்பதே அவர்கள் தொழில். அவர்களிடம் இன, மொழி உணர்வுகளை எதிர் பார்க்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## G.G.Ponnambalam Q.C.Higher Education Scholarships

The G.G.Ponnambalam Q.C. Foundation is inviting applications for Higher Education Scholarships from Students who have gained admission to the Faculty of Medicine, University of Jaffna and are due to commence their studies in August, 2004.

Two scholarships willbe awarded this year and the amount of each award will be Rs.75,000 per year for the duration of the course. Continued funding will be contingent upon the recipient remaining in good academic standing at the beginning of each academic year.

Scholars will be selected by the Selection Committee of the Foundation. The decision will take both academic standing and need into consideration in making the award.

Application forms can be obtained by contacting the Executive Director of the Foundation, Professor C.Tissa Kappagoda, Ph.D., F.R.C.P. at the mailing address or e-mail address given below.

Dr.C.Tissa Kappagoda
Professor of Medicine
One Shield's Avenue
TB 172, Bioletti Way,
University of California, Davis
Davis
California 95616
U.S.A.
e-mail: **ctkappagoda@ucdavis.edu.**

*Deadlines:*
1) Closing date for requesting applications August 1st 2004
2) Completed applications must be received by the Executive Director by the 30 th of August, 2004.
3) Awards will be announced in November 2004

(34636)(34-13)

## SHAKTHI HOME SCIENCE ACADEMY

டிப்ளோமா பயிற்சி வகுப்புகள்

01) நவீன தையல் பயிற்சி
02) பெயின்ரிங் (அடிப்படை பெயின்ரிங், சாறி பெயின்ரிங், கிளாஸ் பெயின்ரிங்)
3) கெயார் ஸ்டைல் (50 வகை)
4) கிறிஸ்டல், சிப்பி வேலை
5) நிற்றிங் (பின்னல் வேலை)
(F) வொன்டன் ஐசிங், சுகர் பிளவர், கேக் ஐசிங்
7) முத்து வேலை
8) பேப்பர் ரோல்
9) மணப்பெண் அலங்காரம், வைற்றிங் பேசியல்
10) பூ வேலை

**வகுப்புகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.**

★ மருதாணியிடல், கைவேலை வகுப்புகள் இலவசமாகக் கற்பிக்கப்படும்.

★ பழைய மாணவர்கள் சான்றிதழை வந்து பெற்றுக்கொள்ளவும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**ஜீவனா செல்லத்துரை**
**கம்பன் கோட்டம் முன்**
**359/8, கோயில் பின் வீதி,**
**நல்லூர்.** (34712)(34-19)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

## 47 ஆம் நாள் நினைவுநாள் அழைப்பு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 - 01 - 1971 | 17 - 06 - 2004 |

கடந்த 17.06.2004 வியாழக்கிழமை சிவனடி சேர்ந்த நயினாதீவைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் நாட்டை வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் நடராசா அருட்செல்வன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியை நாளை (02.08.2004) திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு நயினை 'கங்காதரணி' தீர்த்தக்கரையில் நடைபெற்று. வீட்டுக்கிரியை பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து பிரார்த்திப்பதுடன். மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

காளி கோயிலடி,
5 ஆம் வட்டாரம், நயினாதீவு.
தொ. பே. :0712 704984

**- குடும்பத்தினர்.**

(34699)(34-19)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 . 07 . 1930 | 03 . 07 . 2004 |

அமரர் இராமசாமி துரைராசா
**RTD Manager HNB**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய 01.08.2004 ஞாயிறு அவரது இல்லத்தில் நடைபெற இருக்கும் வீட்டுக் கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

167/14,
கந்தசாமி கோவில் வீதிமுடிவு,
இறம்பைக்குளம்,
வவுனியா.

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 21 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை

எமது கல்லூரி ஆசிரியர் திரு.வே.சிவகுருநாதன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இராசம்மா வேலுப்பிள்ளை

அவர்கள் மறைந்த 21 ஆம் நாள் சிரார்த்த தினத்தையொட்டி அவரது இல்லத்தில் இன்று (01.08.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் கிரியையின்போது அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்.**

கோக்குவில் இந்துக் கல்லூரி.

(சி-36618)(34-19)

**பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய துடுப்பாட்டச் சுற்றுப்போட்டிகளின்**

இறுதிப்போட்டிகளும், பரிசளிப்பு விழாவும் - 2004

காலம்: **2004-08-01** ஞாயிறு பி.ப. 3.00 மணி (பு.நே.)
இடம்: திக்கமுனை மைதானம்
தலைவர்: திரு.சி.நந்தகுமார் (*தலைவர், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்*)
பிரதம விருந்தினர்:
கௌரவ திரு. **ச.சிவராஜசிங்கம்** அவர்கள்
(யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர்)
கௌரவ விருந்தினர்: திரு. **இ.தயா** அவர்கள்
(அரசியற்துறைப் பொறுப்பாளர், வடமராட்சி)

★ அமரர் மு.இரத்தினசாமி நினைவான சுழல்கேடயத்திற்காக திரு.இ.தங்கவேலாயுதம் அவர்களின் ஆதரவில் நடத்தப்பட்ட 11 பேர் கொண்ட 20 ஓவர்கள் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி
*வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகம் – எதிர் – ஸ்பேஸ் விளையாட்டுக்கழகம் 'A'*

★ பருத்தித்துறை குமாரி ரேடர்ஸ் ஆதரவில் நடத்தப்பட்ட 06 பேர் கொண்ட 05 ஓவர் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி
*ஸ்பேஸ் விளையாட்டுக்கழகம் – எதிர் – பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் ரீநேஸ்*

~ செயலாளர்,
**பரு.ஐக்கிய விளையாட்டுக்கழகம்.**

(சி-36629)(34-19)

# பத்தாவது வருட நினைவுகளில்

## பக்திப் பாடல் அரசு

## அமரர் A.R. ஸ்ரீகிருஸ்ணமூர்த்தி



அன்னையின் மடியில்
**1940-05-20**

ஆண்டவன் அடியில்
**1994-08-23**





பக்திக்கு அதிபதியாய்
பாடலுக்கு அரசாய் -
திகழ்ந்த எம் தெய்வமே!
பத்தாண்டென்ன பல
நூறாண்டுகள்தான்
சென்றாலும்...

என்றும் உங்கள் நினைவுகளில் வாழும்...

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

19/1A, BA தம்பி லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (34757) (26-34-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | ரா. | | வெ. சனி |
| | இராசிச் சக்கரம் | | சூ. செ. புதன் |
| சந். | | | வியா. |
| | | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 01.08.2004 – 07.08.2004

**மாற்றம்:**
01.08.2004இல் திருவோணம் மகரத்தில் சந்திரன் நிற்கும்.
02.08.2004இல் சிங்கத்தில் செவ்வாய் நிற்கும்.

நீதிக்காக உரிமையை நடுநிலை கொண்டு கேட்க முடியாத நிலை நாட்டின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கும் நிலை தோன்றும். ஆங்காங்கே அழிவுகள் திட்டமிட்டு நடக்கும். தடுமாறு நிலையில் அன்னிய நாட்டின் தலையீடு இருக்கும். பதட்ட நிலை தோன்றும். இந்தியாவில் அரசியல் நெருக்கடி தோன்றும். அரசியல் தலைவர்கள் பழிவாங்கப்படுவார்கள். மத்திய கிழக்கில் யுத்தநெருக்கடி - அழிவுகள் நடக்கும். இந்து சமுத்திரம், அரபியக் கடல் காற்றின் அழுத்தம் அதிகரிக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

ஊக்கத்தைப் பொறுத்து தொழில்நிலை மாற்றம் ஏற்படும். பணவரவு மந்தமாகும். உடம்பல் ஒரு சோம்பல் தன்மை வரும். புதிய ஆலோசனைகள் திட்டங்கள் செயற்படாது. கோயில், சாத்திரம், ஆலோசனைகள் பெறுவீர்கள். அரச உதவி கிடைக்கும். இடமாற்றங்களால் நனமைகள் ஏற்படும். வியாபாரிகள், சட்டத்துறையினர்கள், ஆசரியர்கள் நற்பலன் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், வியாழன், வெள்ளி.*

### இடபம்

புதிய முயற்சிகளில் ஒரு சுறுசுறுப்பு வரும். பெரியவர்கள் உதவுவார்கள். அன்னியர்கள் உதவி கிடைக்கும். மாணவர்கள் நன்மை அடைவர். எதிர்ப்பாலாரால் எதிர்ப்பு வரும். நண்பர்கள் உதவி செய்யமாட்டார்கள். தூரதேசம் செல்ல முயற்சி எடுக்கலாம். உறவினர்கள் மூலம் நன்மைகள் கிடைக்கும். குடும்பத்தினருக்கு நன்மைகள் நடக்க முயற்சி எடுப்பீர்கள். சளி, வாய்வுத் தொல்லை வரும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- வியாழன், வெள்ளி.*

### மிதுனம்

பொருள் வரவு, சகோதரங்களுடன் வாக்குக் கலகம், இடமாற்றங்களில் தடைவரும். வாக்குச் சாதுரியத்தால் செயற்பாடுகள் வெற்றி தரும். எதிர்ப்பாலார்கள் உதவி செய்வார்கள். வீடு, வாகன யோகம் கொடுக்கும். தருமகாரியங்கள் நிறைவுசெய்தல் இருக்கும். வீட்டில் செலவுகள் அதிகரிக்கும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். அவசரப்படாது நிதானமாக உங்கள் கடமைகளை நிறைவு செய்யுங்கள். கால் விறைப்பு, வாய்வுத் தொல்லை கொடுக்கும். வியாபாரிகள், குருத்தொழில் செய்பவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- வியாழன், வெள்ளி, சனி.*

### கடகம்

பண வரவு, சகோதர உறவில் விரிசல் ஏற்படும். வீடு, வாகன சுகம், பேச்சுக்கள், குடும்பத்தினருக்காகப் போராடுதல், மேலதிகாரிகளுடன் வாக்குக் கலகம், வெளிநாட்டுச் செய்திகளால் நன்மைகள் கொடுக்கும். இரத்த அழுத்தம், உடல்களைப்புக் கொடுக்கும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பு, மாற்றங்கள் கொடுக்கும். கொடுக்கல் வாங்கலில் நிதானமாக இருக்கவும். அரசியல்துறையினர், பாதுகாப்புப் பகுதியினர், ஆசிரியர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- வியாழன், வெள்ளி.*

### சிங்கம்

திட்டமிட்டுச் செயற்படுவீர்கள். குடும்பத்தினருக்கு உதவுதல், திட்டமற்றுச் செயற்படுதல், சகோதரங்களுடன் வாக்குக் கலகம் வரும். இனஜனங்களுடன் கொண்டாட்டம் கொடுக்கும். பிடிவாதத்தால் அவதி ஏற்படும். இசைத்துறையில் நாட்டம் கொடுக்கும். வெளியிலிருக்கும் உறவினரால் செய்திகள் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் புதியவர்கள் உதவுவார்கள். குருத்தொழில் செய்வோர், வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- வியாழன் வெள்ளி.*

### கன்னி

பூர்வீகத் தொடர்பினர் வருவர். அன்பற்றவர் செயற்பாட்டால் அவதிகள் ஏற்படல். காணி, பூமி சம்பந்தமான யோசனை வரும். பிறருக்கு உதவுதல். போக்குவரதுல் அவதிகள் வரும். பொருள் நிலையில் நிதானம். எதிர்ப்பாலார் உதவுவர். தொழில் ஸ்தானத்தில் அவமரியாதைப்படல், புத்திர சோகம், பெற்றோர் வழிச் சகோதரங்களுடன் அபிப்பிராயப் பேதப்படல், சளித்தொல்லை, கால் உளைவு என்பன கொடுக்கும். வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், வியாழன், வெள்ளி.*

### துலாம்

குடும்பத்தில் பிரச்சினைகள் தோன்றும். பணத்தட்டுப்பாடு, செலவுகள் அதிகரிக்கும். புத்தரரால் புதிய பிரச்சினைகள் வரலாம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வாய்வு, சளி, நாரி நோ கொடுக்கும். நண்பர்களுடன் கருத்து வேற்றுமைகள் ஏற்படும். குருத்துறை, சட்டத்துறை, பாதுகாப்புப் பகுதி மற்றும் வியாபாரிகளுக்கு மாற்றங்களும் நன்மைகளும் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், வியாழன், வெள்ளி.*

### விருச்சிகம்

தீர்க்கமான முடிவு, திட்டமிட்ட செயற்பாடுகளால் நன்மைகள் ஏற்படும். புதிய இடமாற்றம் அல்லது பொருள் மாற்றமொன்று கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் அதிகரிக்கும். உங்கள் சொல்லுக்கு மதிப்புக் கொடுப்பார்கள். நாரிப் பிடிப்பு, பிறசர் கூடுதல், பித்தக் கொதிப்பு கொடுக்க இடம் உண்டு. குருத்துறை, வியாபாரிகள் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வெள்ளி.*

### தனுசு

பெரியவர்களால் உதவிகள் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரியின் உதவி கிடைக்கும். பணவரவு கொடுக்கும். வீடு, வாகன மாற்றங்களுக்குப் புத்திரரிடமிருந்து செய்திகள் கிடைக்கும். அவர்களுக்கு நன்மைகளும் ஏற்படும். பழைய நண்பர்கள் உதவிகள் செய்து தருவர். இசைத்துறையில் நாட்டமிருக்கும். பிரயாணத்துறையினர் நன்மை அடைவர். தூர இடங்களிலிருந்து செய்திகள் வந்து மனமகிழ்ச்சியைக் கொடுக்கும்

*அதிர்ஷ்டநாள்கள் : ஞாயிறு, திங்கள், வியாழன்.*

### மகரம்

எல்லோரும் தத்தம் சுயநலத்திற்காகத்தான் பாடுபடுகின்றார்கள். நீங்கள் உங்கள் தேவைகளைச் சாதுரியமாகச் செயற்படுத்துங்கள். இடமாற்றங்கள், புதிய பொறுப்புக்கள் வர இடமுண்டு. கொடுக்கல், வாங்கலால் பிரச்சினைப்படுவீர்கள். வாகனத்தால் செலவு அதிகரிக்கும். புதிய திட்டங்களைச் செயற்படுத்தி வெற்றிகாண முயற்சியெடுங்கள். இனஜன உதவிகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- ஞாயிறு, திங்கள், வியாழன்.*

### கும்பம்

நல்லவர்கள் உதவி, புதிய பொறுப்புவரும். வருமானம் அதிகரித்தாலும், செலவுகளும் அதிகரிக்கும். குடும்பத்தில் புகைச்சல் வரலாம். தொழில் நிலையில் ஊக்கங்களால் வருமான அதிகரிப்புத் தோன்றும். கொடுக்கல் வாங்கலில் தடுமாற்றம் கொடுக்கும். நண்பர்களுடன் அபிப்பிராயபேதம் கொடுக்கும். கால்நோ, சலவருத்தம், கட்டுப்பாடற்ற நிலை என்பனதோன்றும். சாப்பாட்டில் கட்டுப்பாடாக இருக்கவும். இடமாற்றங்கள் நன்மை தரும். ஆசிரியத்துறை, சட்டத்துறை, பிரயாணத்துறைகளைச் சேர்ந்தோருக்கு நன்மைகள் கிட்டும்.

*அதிர்ஷ்டநாள்கள் : ஞாயிறு, திங்கள், வியாழன்.*

### மீனம்

எந்த அலுவல்களையும் திட்டமிட்ட நடத்தமுடியாத நிலை தோன்றும். புதிய நண்பர்கள் உதவி செய்வார்கள். இடமாற்றம் அல்லது வெளிநாட்டுப் பிரயாணங்களுக்குத் திட்டமிடுவீர்கள். உறவினர்கள் உதவுவார்கள். குடும்பத்தில் கொண்டாட்டம் வரும். பணவரவுகள் ஏற்படும். புத்திரர்கள் அல்லது சகோதரர்களின் செய்திகள் கிடைக்கும். சலவருத்தம், சளித் தொல்லை கொடுக்கும். வியாபாரிகள், கடல், சந்தை தொழில், சங்கீதத் துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள் :- ஞாயிறு, திங்கள், வியாழன்.*

**மகாதேவா ஜோதிடம்**

# மனமாற்றத்துக்கான புரட்சியே வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்

**ஞாயிறு நற்பிரசாதம்**

கடவுளின் மீட்பைப்பெற மனிதன் முதலில் மனமாற்றம் அடையவேண்டும். ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஆயிரமாயிரம் அர்த்தங்கள் பொதிந்துள்ளன. இந்த அர்த்தங்களைப் புரியாமல் ஒவ்வொருவரும் உலகில் புரட்சியைச் செய்யவிரும்புகின்றனர். இந்தப் புரட்சியின் போக்கிலே அவர்கள் குறிக்கோளை மறந்து நன்மைக்குப் பதில் தீமையைப் புரிந்து ஆக்கப் புரட்சியை விட்டுவிட்டு அழிவுப் புரட்சியிலே தங்களையே அழித்துக்கொள்கின்றார்கள்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது வாழ்வின் அர்த்தங்களைப் புரிந்துகொண்டு சவால்கள் ஊடாக நடத்தப்படவேண்டும். வாழ்வைத் தூரத்திலே இருந்து பார்க்கின்றபோது அங்கே நேரான பாதைகள் தெரிவதில்லை. ஆனால், வாழ்வைச் சீராக அமைக்க வேண்டியது அவரவர் பொறுப்பு. இறைமகன் இயேசு நடந்த கல்வாரி நேரான பாதை அல்ல, அவர் தொங்கிய சிலுவை கூட நேராக இருக்கவில்லை. ஆனால், அவருடைய வாழ்வு சீராகவே இருந்தது.

இன்று பல குடும்பங்களிலே பெற்றோர்களின் வாழ்வு பிள்ளைகளுக்கு துன்மாதிரியாக அமைந்திருக்கின்றன. பிள்ளைகளுக்கு வாழ்வைக்காட்ட வேண்டியவர்கள் அழிவை அள்ளி கொடுப்பவர்களாக இருக்கின்றார்கள். இவ்வாறான வாழ்க்கை முறையால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளும் வாழ்வின் மறுமுனையிலே விரக்தியின் விளிம்பிலே வாழ்வைப் பாழ்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள்.

இறுதியிலே இருபகுதியினரும் ஏதோ ஒரு வகையிலே வாழ்வைத் தொலைத்தவர்களாக முரண சாட்சிகளாக இனியும் வாழ்வு உண்டா, மன்னிப்பு உண்டா? ஆண்டவனின் மன்னிப்பு கிடைக்கமுடியுமா? என்று பலவகையான ஐயப்பாட்டுடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இவர்களுடைய இவ்வாறான கேள்விக் கணைகளுக்கு மனிதர்களால் அல்லது மனித சக்தியால் விடைகொடுக்கமுடியாது. மாறாக மனிதனால் கொடுக்கக்கூடிய விடை ஒரு சில தத்துவங்களாக மட்டுமே அமையமுடியும்.

இந்தத் தத்துவங்கள் ஊடாக சில வழியைக் காட்டலாம்; வாழ்வைக் காட்டலாம். சில வேளைகளிலே உண்மையையும் காட்டலாம்.



ஆனால், இந்தக் கேள்விகளுக்குரிய விடையை கிறிஸ்துவால் மட்டுமே காட்டமுடியும். இவற்றைக் கண்டுகொள்ளவேண்டுமென்றால் நாங்கள் கிறிஸ்துவின் மனநிலையை படைக்கலமாக அணிந்து கொண்டு செயற்படும்போது மன விரக்தியில் இருந்து விடுதலையைப் பெறவும் தொலைந்துவிட்ட வாழ்வை மீண்டும் கண்டு கொள்வதற்கும் வழியாக அமையமுடியும்.

எங்களுடைய கடந்தகால செயற்பாடுகளை விரும்பப்படாத விளைவுகளை விட்டுவிட்டு அறிவுத்தெளிவோடு ஆழ்ந்த அன்போடு ஆண்டவனிடம் திரும்பிப்போகும்போது எங்களுடைய பாவங்களை மன்னிக்கக் காத்திருக்கின்றார். இந்த மனமாற்றம் ஒருபகுதியினருக்கு உரியது மட்டுமல்ல. மாறாக இருபகுதியினரும் தங்களுடைய நிலைகளை உணர்ந்து வாழ்வின் அர்த்தங்களைப் புரிந்துகொண்டு திரும்பி வரவேண்டும். இவ்வாறான ஒருதிருப்புமுனை தான் எங்களுடைய வாழ்வில் எழுகின்ற கேள்விகளுக்கு விடையைக் கொடுக்கமுடியும்.

எனவே, அழிவுக்கான புரட்சியை எமது வாழ்வில் இருந்து எடுத்தெறிந்துவிட்டு ஆண்டவனோடு ஒன்றிக்க ஆன்மீக ஆறுதல் அடைய,

**அருட்சகோதரர் எஸ்.அன்ரன்**

மீட்புப்பெற மனமாற்றம் என்ற ஆக்கப்புரட்சியில் ஈடுபட்டு ஆண்டவரோடு இணைந்துகொள்வோம்.

"கடவுளின் வல்லமைமிக்க கரத்தின் கீழ் உங்களை தாழ்த்துங்கள், அப்போது அவர் ஏற்றகாலத்தில் உங்களை உயர்த்துவார்."

(1 பேதுரு 5:6)

# நூல்நிலையப் பொறுப்பாசிரியர்கள் பாடசாலைகளில் நியமிக்கப்படுவர்

அச்சுவேலி,ஓக.1

பாடசாலைகளின் நூல்நிலையங்களை கற்றல் - கற்பித்தல் வளநிலையங்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்புடைய முறையில் அபிவிருத்தி செய்வதற்குப் பாடசாலைகள்தோறும் நூல்நிலையப் பொறுப்பாசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

நூல்நிலையப் பொறுப்பாசிரியர்களாக நியமிக்கப்படும் 'ஆசிரிய நூலகர்' வகுப்பறைக் கற்பித்தலில் இருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டு நூலகம் தொடர்பான பணிகளில் முழுநேரம் பணிபுரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மனிதவள அபிவிருத்தி கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் வீ.கே. நாணயக்காராவினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் இதுபற்றி விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சுற்றறிக்கை பாடசாலைகளின் அதிபர்கள் உட்படக் கல்வி நிர்வாக சபையை மேற்கொள்ளும் சகல தரப்பினருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

"சுற்றறிக்கை அனுப்பிவைப்பதில் கால தாமதம் ஏற்பட்டமையினால் மூன்றாம் தவணையில் இருந்து பரீட்சார்த்த நிலையில் தொடங்கும் இந்தச் செயற்றிட்டம் அடுத்தவருடத்தில் இருந்து முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்" எனக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி தெரிவித்தார்.

(ஐ-11)



'நியாப்' திட்டத்தின் கீழ் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் வல்லிபுரத்தில் நிறுவப்பட்ட முதலாவது பொதுமண்டபத்தை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நாடாவெட்டித் திறப்பதைப் படத்தில் காணலாம். அருகில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், ஆசிரியர் கே.கருணாமூர்த்தி, யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி மற்றும் பலரும் காணப்படுகின்றனர்.

(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கியூபிட் போட் KUPID FORT Capsules

(இது ஒரு இந்தியன் தயாரிப்பு)



பிரசித்தி பெற்ற, ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை, சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியூபிட் போட் கீழ்க்காணும் பிரச்சினைகளை சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத் தன்மையைப் போக்க
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு
- சாதாரண பாலியல் குறைபாடுகளை சீர்ப்படுத்த ஒன்றோ இரண்டு மாத்திரைகளை தொடர்ந்து ஒரு மாதம் பாவித்து சிறந்த பயனைப் பெறுங்கள்.

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.
எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.
கியூபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.
கியூபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

**நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

வைத்திய ஆலோசனையைப் பெற்று சிறந்த பயனை அடையுங்கள்.


## உணவகங்களுக்கு அனுமதி

காரைநகர்ஓக.1

காரைநகரில் நெருப்புக் காய்ச்சல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து தற்காலிகமாக மூடப்பட்ட உணவகங்களை மீண்டும் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.(எ-73)

## அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.1

அனுமதிப்பத்திரம் இன்றி மதுபானம் விற்பனை செய்த ஏழு பேருக்கு யாழ். நீதிமன்றம் 35ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த சின்னப்பு - குணசேகரம், ஈச்சமோட்டையைச் சேர்ந்த நாகலிங்கம் சற்குணராசா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெருமாள் சுப்பிரமணியம், நல்லூரைச் சேர்ந்த பெரியபாலன் மயூரன் -

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த இரததினசிங்கம் ராஜ், இல. 430/2, மடம் வீதியைச் சேர்ந்த சாந்தன் சுதாகரன், அரியாலையைச் சேர்ந்த முத்தையா அப்பாத்துரை ஆகிய ஏழு பேரையுமே 3 ஆயிரம் ரூபா தண்டப் பணமாகவும் தலா 2 ஆயிரம் ரூபா தர்மப் பணமாகவும் செலுத்துமாறு மாவட்ட நீதிபதி இ. த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (எ-5)

## ஓராண்டு நிறைவு நாளில் எமது கண்நிறையும் சோகங்களால் நாம் வரையும் அஞ்சலிகள்



உயிர் பெற்று வந்தது 1924 - 07 - 02

உயிர் அற்றுச் சென்றது 2003 - 08 - 13

### திருமதி பூமணி அப்புத்துரை

திதி: 2004-08-01

ஓராண்டு போலப் பல ஆண்டுகள் மறைந்திட்டாலும்
நாம் வாழ்ந்து முடியுமந்த நாளொன்று வரும்வரையும்
எப்படித் தாயே நாங்கள் உங்களை மறந்திருப்போம்?
நம்விழி மூடும்வரை நம்நெஞ்சில் நீங்களம்மா!

155, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை.

மகன்: அ.புவனேந்திரராசா
குடும்பத்தினர்.

(34741) (24-13-19)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி விஜயலட்சுமி செல்வரட்ணம்

மலர்வு 02-05-1951 உதிர்வு 12-08-2003

ஓராண்டும் ஆயிற்றோ ஒளிமுகம் மறைந்து
தீராத வேதனையில் தினமும் தவிக்கின்றோம்
வேராக நீறிருந்து குடும்பத்தை ஆதரித்தீர்
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

'விஜயவாசா'
மாதர் சங்க ஒழுங்கை,
சித்தங்கேணி.

- சகோதரர்கள்.

(34733) (29-13-19-24)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
ரோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY: ROYAL Industries Colombo ☎ :0112334603




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணைப் பூங்கா
288. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567

(0368310) சத்திரத்துச் சந்திக்கு அருகில் →


## வீடு விற்பனைக்கு

இல.15/8, ஓட்டுமடம், செபஸ்தியார் வீதியில் 5பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடனும் அமைந்த மாடி வீடு விற்பனைக்குண்டு.

*தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:*

**த.கனகரத்தினம்,**
இல.234/6, செபஸ்தியார் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

(34740)(35-13-19-24)


## சிங்கப்பூரில் திருமண சேவை



சிங்கப்பூரில் திருமணஞ்செய்ய வருவோருக்கும், விடுமுறையைக் கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும்கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்துதருவோம். மேலும் எங்கள் இடம் "குட்டி இந்தியா" என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால் வேண்டிய பொருள்களை நடந்து சென்றும் வாங்கலாம். மேலும் விவரமறிய எந்தநேரத்திலும் தொடர்பு கொள்ள வசதியாக கைத்தொலைபேசி எண்: 0065 9751 4941, தொலைநகல்: 0065 6481 6144

சிங்கப்பூரில் சுற்றுலா அனுமதி கிடைப்பது சிலசமயங்களில் கஷ்டம். அதனால் 3 கிழமைக்கு முதலில் எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**LINGAM WEDDING SERVICES**
**10, Anson Road, # 15-14 International Plaza, Singapore 079903.**

(26-13-19-24) (26954)


## சுன்னாகம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## அறிவித்தல்

எமது சங்கத்தின் 30.06.2004 ஆம் திகதிய நிதியாண்டுக்கான கணக்காய்வு நடைபெறவிருப்பதால் எமது சங்கத்தில் இயங்கும் கிராமிய வங்கியில் கணக்கு வைத்துள்ள அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஏனையோர் அங்கத்தவர்களின் சேமம் மீதிகளையும், கடன் மீதிகளையும் 30.08.2004 ஆம் திகதிக்கு முன்னதாக நேரில் தங்கள் பாஸ் புத்தகத்துடன் வருகைதந்து மீதிகளைச் சங்க வேலை நேரத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**கி.சந்திரவதனா**
பொதுமுகாமையாளர்.

(சி-36649) (30-13-19-24)


## பல்கட்ட வேண்டுமா!!

மீண்டும் யாழ்.நகரில்!!
சிறப்புத்தேர்ச்சி பெற்றவரால்

★ சிறந்த சங்குப் பற்களை அழகிய முறையில் கட்டிட
★ மிதப்புப் பற்களுக்கு "கிளிப்" செய்து மிகக் குறுகிய காலத்தில் சீர்செய்துகொள்ள
★ அழகிய வடிவமைப்புடைய புதிய பிரேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள
★ வேறு எங்காவது பற்களைக் கட்டி இப்போது அசௌகரியப்படுபவர்கள் நாடுங்கள்.

**துஷா பல்மூக்குக் கண்ணாடி அகம்**
554, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-36657) (26-13-19-24)

## அழகுக் கலையில் ஆர்வமுள்ள பெண்கள் கவனிக்கவும்!

உங்களை நீங்களே அழகுபடுத்தவும்
நீங்கள் மற்றவர்களை அழகுபடுத்தவும்
நாங்கள் உங்களுக்கு பயிற்றுவிப்போம்

கொழும்பு MOON Beauty Care உரிமையாளரும், நடன ஆசிரியையும் ஆன திருமதி அகிலா அவர்களால் நவீன முறையிலான அணுகுமுறைகளுடன பயிற்சியளிக்கப்படுவதுடன் அழகுக்கலை சிகிச்சைகளுக்கான ஆலோசனைகளும் வழங்கப்படும்.

★ Advance, Diploma Course களுக்குப் புறம்பாக Facials மட்டும் படிக்க விரும்புவோரும், Facials செய்ய விரும்புவோரும் தொடர்புகொள்ளவும்.

★ யாழ்ப்பாணத்திலும் வடமராட்சியிலும் வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

★ தென்மராட்சியில் அழகுக்கலை சம்பந்தமான இலவசக் கருத்தரங்கு ஒன்று நடைபெறவிருக்கின்றது.

மேலதிக விவரங்களுக்கு:
021 - 226 3365
0777 570138

(34742) (29-13-19-24)


## மரண அறிவித்தல்

திருமதி
### யோகலிங்கம் சிவபாக்கியம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொற்றாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகலிங்கம் சிவபாக்கியம் கடந்த (28.07.2004) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலேசியன் பென்சனியர் இளையதம்பி - சரஸ்வதி ஆகியோரின் மூத்த அன்பு மகளும் யோகலிங்கம் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பையா - முத்துப்பிள்ளை ஆகியோரின் மருமகளும் பரமசிவம் (ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி), புவனேஸ்வரி சோமாஸ்கந்தராசா, செல்வராசா (கனடா), இராஜேஸ்வரி கந்தசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியை), கனகரட்ணம் (வைத்திய அதிகாரி, ஊர்காவற்றுறை), இராதாகிருஷ்ணன் (பணிப்பாளர், றோட் என்ஜினியரிங் பிறைவேற் லிமிடெட்), பாலசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சோமாஸ்கந்தராசா (ஓய்வுபெற்ற F.o.), கந்தசாமி (ஓய்வுபெற்ற மேல் நீதிமன்றப் பதிவாளர்), செல்வதி, நாகேஸ்வரி, தவனேஸ்வரி, கமலாவதி, நளாயினி, திருமதி குமாரசாமி செல்லமுத்து (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற சிவஞானசுந்தரம், தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற லிகிதர், சாவகச்சேரி நகரசபை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவகாந்தி, (ஜேர்மனி), சிவசீலன் (கனடா), சிவச்செல்வி (நியூஸிலாந்து), மனோகரன் (கனடா), சிவராணி (கனடா), சிவகரன் (டென்மார்க்), சிவசக்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயகுமார் (ஜேர்மனி), சசீந்தினி (கனடா), இரவிகரன் (நியூஸிலாந்து), சாரத்லதா (கனடா), குலசிங்கம் (கனடா), யோகமலர் (டென்மார்க்), பாஸ்கரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் பிரகாஷ், சதீஸ், துவாரகா, கோகுல், கனிஸ்யா, அனிஸ்யா, லேனுஸ்யா, மதுரா, மோகிதன், திலக்ஷன், பிருந்தா, நிருஷன், கிரிஷான், மதுஷான், மீனுஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-08-2004) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊறனி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்:*
சு.யோகலிங்கம் (கணவர்).

*கொற்றாவத்தை
வல்வெட்டித்துறை.*

(34748) (26-13-19-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கா? இந்தியாவுக்கா?

**கொ**ழும்பில் நடைபெற்று வரும் 8 ஆவது ஆசியக் கிண்ணப் போட்டியின் இறுதியாட்டம் பலம்மிக்க இந்திய - இலங்கை அணிகளுக்கு இடையே கொழும்பு ஹெத்தாராம மைதானத்தில இன்று பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

இத்தொடரில் ஏற்கனவே இந்த இரு அணிகளும் ஒவ்வொரு தடவை ஒன்றையொன்று வெற்றியீட்டிய நிலையிலேயே இறுதியாட்டத்தில சந்திக்கின்றன. முதல்சுற்று ஆட்டத்தில் இலங்கை அணி 12 ஓட்டங்களாலும் அடுத்த சுற்று ஆட்டத்தில் இந்திய அணி 4 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியிருந்தன. இரண்டு ஆட்டங்களும் மிகவும் விறுவிறுப்பாக அமைந்திருந்ததுடன் எந்த அணி வெற்றியீட்டும் என்று தீர்மானிக்க முடியாத நிலையிலேயே ஆட்டத்தின் போக்கு அமைந்திருந்தது.

இலங்கை அணி வெற்றியீட்டி இருந்த ஆட்டத்தில் இலங்கை அணியில் ஜயசூரியவும் இந்திய அணியில் லக்ஸ்மனும் இடம்பெற்றிருக்கவில்லை. அதேபோன்று இந்திய அணி வெற்றியீட்டிய ஆட்டத்தில் இலங்கை அணியில் சமிந்த வாஸ், முரளிதரன் ஆகியோரும் இந்திய அணியில் லக்ஸ்மனும் இடம்பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய ஆட்டத்தில் இரு அணிகளிலும் சகல வீரர்களும் இடம்பெறுவார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயினும், வெற்றி, தோல்வியைத் தீர்மானிக்கப்போவது அணியில் சகல வீரர்களும் இடம் பெறுவது மட்டுமல்ல. அவர்களின் பொறுப்பான துடுப்பாட்டம், ஒழுங்கான களத்தடுப்பு மற்றும் பிடிகளைத் தவறவிடாமை என்பனவும் வெற்றி, தோல்வியைத் தீர்மானிக்கக் கூடியன. எனவே இரு அணிகளிலும் இவற்றுக்கு ஏற்றவாறே வீரர்கள் தெரிவு அமையும் என்று நிச்சயமாக நம்பலாம்.

பந்து வீச்சைப் பொறுத்தவரையில் இலங்கை அணியின் பந்துவீச்சே மேலோங்கியுள்ளது. சமிந்த வாஸ், நுவான் சொய்ஸா, மஹரூப், முரளிதரன், உப்புல் சந்தன, ஜயசூரிய ஆகிய அனைவருமே இத்தொடரில் சிறப்பாகப் பந்து வீசி வருகின்றனர். ஆனால், இந்திய அணியைப் பொறுத்தவரையில் இர்பான்பதானும் டெண்டுலகருமே சிறப்பாகப் பந்துவீசி வருகின்றனர்.




இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் அனில் கும்ளே, ஹர்பஜன் சிங், சஹீர் கான், ஆஷிஸ் நெஹ்ரா ஆகியோரின் பந்து வீச்சுக் குறிப்பிடும்படியாக இல்லை என்றே சொல்ல வேண்டும் பாலாஜியின் பந்து வீச்சானது இத்தொடரில் படுமோசம் என்றால் அது மிகையல்ல. அந்த அளவுக்கு தனது அணியினருக்கு மட்டுமன்றி கோடானு கோடி ரசிகர்களுக்கும் தனது பந்து வீச்சினால் வெறுப்பை உண்டாக்கிவிட்டார்.

ஆனால், துடுப்பாட்டத்தைப் பொறுத்த வரையில் இரு அணிகளும் சமநிலையிலேயே உள்ளன. இலங்கை அணியைப் பொறுத்தவரையில் அண்மைக்காலமாக வீழ்ச்சியுற்றிருந்த ஜயசூரியவின் ஆட்டம் மீண்டும் பழைய நிலையை அடைந்துள்ளது. இதுவே இலங்கை அணிக்கு மிகப்பெரும் பலம். அத்துடன், இத்தொடரில் அவிஷ்க குணவர்த்தனவும் நன்கு சோபித்து வருகிறார். இவர்களைவிட அத்தப்பத்து, மஹேல, சங்கக்கார, டில்ஷான், உப்புல்சந்தன என எல்லோரும் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கக் கூடியவர்களே.

இந்திய அணியைப் பொறுத்த வரையில் இத்தொடரில் டிராவிட்டை தவிர எந்த வொரு துடுப்பாட்ட வீரரும் தொடர்ச்சியாகச் சோபிக்கவில்லை. அதிலும் குறிப்பாக லக்ஸ்மன், கைப ஆகியோரது துடுப்பாட்டம் படு மோசம். இந்த நிலையிலேயே இறுதியாட்டத்தில் லக்ஸ்மனின் பங்களிப்பு அணிக்குப் பெரிதும் தேவை என கங்குலி தெரிவித்துள்ளார். எது எப்படியாயினும் ஒட்டுமொத்த இந்திய அணியானது இலங்கை அணிக்கு நிகராகவே உள்ளதை எவரும் மறுக்கமுடியாது.

ஹெத்தாராம மைதானத்தைப் பொறுத்த வரையில் மிகவும் முக்கியமான ஆட்டங்களில் முதலில் துடுப்பெடுத்தாடிய அணியே வெற்றியீட்டியுள்ளதையும் நோக்க வேண்டும். அவ்வாறு முதலில் துடுப்பெடுத்தாடுவதாக இருந்தால் நாணயச் சுழற்சியிலும் வெற்றி பெற வேண்டும். அதற்கு அதிர்ஷ்டமும் வேண்டும். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடும் அணிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் என்று எதிர்பார்க்கப்படும் ஆட்டத்தில் வெற்றிக்கனியைப் பறிக்கப்போவது எந்த அணி?

இந்திய அணியைப் பொறுத்தவரையில் இந்தப் போட்டித் தொடரிலும் இறுதி ஆட்டத்திலும் வீரர்களின் தனிப்பட்ட திறமைகள் நன்கு அவதானிக்கப்பட்டு வருகின்றன. இதில் காட்டுகின்ற திறமைகளின் அடிப்படையிலேயே அடுத்த மாதம் ஹொலண்டில் நடைபெறவுள்ள முத்தரப்புத் தொடர் இங்கிலாந்து அணியுடனான 3 போட்டிகள் கொண்ட தொடர், செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ள மினி உலகக் கிண்ணப் போட்டி ஆகியவற்றுக்கான அணித்தெரிவு இடம்பெற்று எதிர்வரும் 5 ஆம் திகதி அணி வீரர்கள் விவரம் அறிவிக்கப்படவுள்ளது.

**- ஜெயஸ்ரீ -**

இறுதியாட்டத்திற்குத் தகுதிபெற்று அதில் தோல்வியுற்ற சந்தர்ப்பங்கள் பலவற்றைப் பாடமாக எண்ணி இன்றைய இறுதியாட்டத்தில் இந்திய அணிக்கு வெற்றியீட்டவேண்டிய கட்டாயம் உண்டு. ஆனால், இறுதியாட்டத்தில் மோதவுள்ள எதிர் அணி இலங்கை அணி என்பதுடன் ஆட்டம் நடைபெறுவது இலங்கையில் என்பதும் இந்திய அணி கருத்தில் எடுக்க வேண்டிய விடயங்களாகும்.

ஏற்கனவே நடைபெற்ற 7 ஆசியக் கிண்ணப் போட்டிகளில் இந்திய அணி நான்கு தடவைகளும் இலங்கை அணி இரண்டு தடவைகளும் பாகிஸ்தான் அணி ஒரு தடவையும் வெற்றியீட்டிக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளன.

இறுதியாக நடைபெற்ற ஆசியக் கிண்ணப் போட்டியில் கிண்ணத்தை வென்ற பாகிஸ்தான் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெறாமலே இச்சுற்றில் இருந்து வெளியேறியது.

இந்த 8 ஆவது ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்ற இன்று நடைபெறவுள்ள மோதலை ரசிப்போம்.

# 8 ஆவது ஆசியக் கிண்ணம்!

## இறுதியாட்டம் இன்று

8 ஆவது ஆசியக் கிண்ணப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 2.40 மணிக்கு கொழும்பு ஹெத்தாராம மைதானத்தில் இலங்கை - இந்திய அணிகளுக்கிடையே நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தை இந்திய தொலைக்காட்சியின் 'தூரதர்சன்' அலைவரிசையிலும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஐ அலைவரிசையிலும் ரசிகர்கள் பார்க்க முடியும்.

நேற்றைய உதயன் பத்திரிகையின் 4 ஆம் பக்கத்தில் வெளியான **'முரளியை முந்த முயலும் வோனின் கனவு பலிக்குமா'** என்ற கட்டுரையில் இறுதியாட்டம் நேற்று எனக் குறிப்பிடப்பட்டிருந்தது தவறாகும். (10)

## முத்தரப்புக் கிரிக்கெட் போட்டி ஹொலண்டில் 21 ஆம் திகதி ஆரம்பம்

ஹொலண்டில் 3நாடுகள் இடையேயான கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா ஆகிய அணிகள் பங்கேற்கின்றன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோதவேண்டும். புள்ளிகளின அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெறும்.

இந்திய அணி 21ஆம் திகதி பாகிஸ்தானையும் 23ஆம் திகதி ஆஸ்திரேலியாவையும் எதிர்கொள்கிறது. பாகிஸ்தான் - ஆஸ்திரேலியா மோதும் ஆட்டம் 25ஆம் திகதியும் இறுதிப் போட்டி 28ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் மற்றும் இங்கிலாந்துக்கு எதிரான 3ஒருநாள் போட்டிகள், மினி உலகக் கிண்ணப் போட்டிகள் ஆகியவற்றுக்கான இந்திய அணி எதிர்வரும் 5ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது. (10)




## வோர்ன் பயன்படுத்திய பந்து 28 லட்சம் ரூபா ஏலத்தில்

மெல்போர்ண்,ஓக.1

டெஸ்ட் போட்டிகளில் சாதனை செய்ய ஷேன் வோர்ன் பயன்படுத்திய பந்து 28லட்சம் ரூபாவுக்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் ஆஸ்திரேலியாவின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் 527 ஆவது விக்கெட்டைக் கைப்பற்றினார். இதன்மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இலங்கையின் முரளிதரனின் சாதனையைச் சமன்செய்தார். இந்தச் சாதனைப் பந்து ஏலத்தில் விடப்பட்டது. இதனைப் பெயர் குறிப்பிட விரும்பாத ரசிகர் 28லட்சம் ரூபாவுக்கு வாங்கியுள்ளார். இத்தொகை முழுவதும் வோர்ன் அறக்கட்டளைக்குச் செல்கிறது. இந்த அறக்கட்டளையின் வாயிலாக வசதியற்ற குழந்தைகள், நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவிசெய்யப்பட்டு வருகிறது.

அதிக விலைக்குப் பந்து ஏலம் போனது பற்றி வோர்ன் கூறுகையில்:-

இனி முரளி சில விக்கெட்டுகளை வீழ்த்தலாம். நானும் அவரது சாதனையை நெருங்கலாம். ஆனால், மீண்டும் ஒருமுறை சாதனையைச் சமன்செய்யும் வாய்ப்புக்கிட்டாது. எனவே, பந்தை ஏலத்துக்கு எடுத்தவர் அதிர்ஷ்டசாலி என்று தெரிவித்துள்ளார். (10)

## ஆசிய கார்ப் பந்தயம் இன்று இந்தியாவில் ஆரம்பம்

இந்தியாவில் முதல்முறையாக ஆசிய கார்ப் பந்தயம் நடத்தப்படுகிறது. இந்தப் பந்தயம் இன்று கோவையில் நடக்கிறது. இந்தியா, மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் உட்பட 25 நாட்டு வீரர்கள் இதில் பங்கேற்கிறார்கள். இந்தியாவில் இருந்துசென்னையைச் சேர்ந்த அர்மான் இப்ராகீம் உட்பட 15 வீரர்கள் கலந்துகொள்கிறார்கள். (10)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.1

கைதடி, நுணாவில் குமரகுருபரன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா நாளை திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கைதடி, நுணாவில் மாதர் மன்றத் தலைவி திருமதி பு.பேரின்பம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த விளையாட்டு விழாவில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.உமாபாலன், கைதடி கிராம அலுவலர் த.மகேந்திரன், தென்மட்டுவில் கிராம அலுவலர் வே.கந்தையா, மட்டுவில் நுணாவில் கிராம அலுவலர் வே.துரைசிங்கம், ஓய்வுபெற்ற அதிபர் க.சி.சண்முகலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (10-202)

★ ★ ★

வடமராட்சி,ஓக.1

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய துடுப்பாட்டச் சுற்றுப்போட்டிகளின் இறுதி ஆட்டங்களும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் கழகத் தலைவர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ச.சிவராஜசிங்கம் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் இ.தயா கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள்.

அமரர் மு.இரத்தினசாமி நினைவான சுழல் கேடயத்திற்காக நடத்தப்பட்ட 11பேர் கொண்ட 20 ஓவர்கள் துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி ஸ்பேஸ் விளையாட்டுக் கழக ஏ அணி மோதவுள்ளது.

பருத்தித்துறை குமாரி ரேடர்ஸ் ஆதரவில் நடத்தப்பட்ட 6 பேர் கொண்ட 5 ஓவர்கள் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் வதிரி ஸ்பேஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக புளூஸ அணி மோதவுள்ளது.(10-173)

★ ★ ★

கோப்பாய்,ஓக.1

ஊரெழு பாரதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு மு.சுவிந்திரநாதன் தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக ஊரெழு கணேச வித்தியாசாலை அதிபர் இ.குலசிங்கம், சிறப்பு விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் வி.அருளானந்தம் கௌரவ விருந்தினராக வலி.கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.யாழவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (10-72)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.1

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு மானிப்பாய் பிரதேச சபையினால் 35 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியும் 10 மைல் மரதன் ஓட்டப்போட்டியும் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டன.

மேற்படி இருபோட்டிகளிலும் முதல் 5 இடங்களைப் பெற்ற வீரர்களுக்கான பரிசில்களை நாளை திங்கட்கிழமை உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமி வழங்கிக் கௌரவிப்பார்.

சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதல் 5 இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

நடராஜா ஜெயசுதன் (அராலி மேற்கு), நடராசா டினிஸ்ரன் (சாந்தை, பண்டத்தரிப்பு), திரவியம் காமறாஸ் ( சாந்தை, பண்டத்தரிப்பு), கதிரமலை புலேந்திரன் (சில்லாலை, பண்டத்தரிப்பு), துரைராஜா றஜீம் (சாந்தை, பண்டத்தரிப்பு) - திரவியம் நகுலேஸ்வரன் (சாந்தை, பண்டத்தரிப்பு).

மரதன் ஓட்டப்போட்டியில் முதல் 5 இடங்களைப் பெற்ற வீரர்களின் விவரம் வருமாறு:-

நடராசா காந்தரூபன் (சாந்தை, பண்டத்தரிப்பு), பரமானந்தம் ஜயானந்தன் (நவாலி வடக்கு), சொக்கலோகநாதன் கிரிஷாந்தன் (நீதிமன்ற வீதி, மல்லாகம்), இரத்தினம் சுதாகரன் (ஓட்டுமடம், யாழ்ப்பாணம்), நாகராஜா விஜயகுமார் (அரசடி வீதி, கட்டுடை).

இதேவேளை - இருபோட்டிகளிலும் ஓடி முடித்தவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. (10-185)

### பொதுக்கூட்டம்

வடமராட்சி மென்பந்து துடுப்பாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 11 மணிக்கு தேவரையாளி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. (10-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி நிலைமை படுமோசம்

குருநகர்,ஓக.1

யாழ். நாவலர் வீதியில் மனோகரா திரையரங்குச் சந்திக்கும் நாவாந்துறை கடற்கரை வீதிக்கும் இடைப்பட்ட பகுதி படுமோசமாகச் சேதமடைந்துள்ளது.

1995இற்குப் பின்னா இதுவரை இவ்வீதி திருத்தியமைக்கப்படவில்லை. இவ்வீதியைத திருத்தியமைக்குமாறு நாவாந்துறையிலுள்ள பொது அமைப்புக்கள் யாழ். மாநகர சபையிடம் பல தடவைகள கோரிக்கை விடுத்த போதிலும், இதுவரை இவ்வீதி திருத்தியமைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-51)

## மூளாயில் சட்டவிரோத கல் அகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.1

மூளாய் தெற்குப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் கல் அகழ்வு நடைபெறுவதால் அப்பகுதி நிரந்தரமாக வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கல் அகழ்ந்த பகுதிகளில் நீர் தேங்கி நுளம்புகள் அதிகரிப்பதுடன் சூழல மாசடையும் நிலையும் உருவாகியுள்ளதாகவும் -

மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் பரவும் சந்தர்ப்பமும் இதனால், உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.


இச்சட்டவிரோதக் கல் அகழ்வைத் தடுத்து மூளாய்ப் பகுதியைப் பாதுகாக்கும் வண்ணம் மக்களால் கோரப்பட்டுள்ளது. (ஒ-15)

---

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி

**மிருணா**




பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட

**பவளகாந்தன் - சுசிலாதேவி**

தம்பதிகளின்

அருந்தவப் புதல்வி

செல்வி

**மிருணா**

தனது முதலாவது .பிறந்தநாளை நேற்று (31.07.2004) சனிக்கிழமை Zurich என்ற இடத்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடினார்.



இவரை இலங்கையில் வாழும் பாட்டி அம்மாமார், அப்பப்பாமார், அப்பம்மாமார், தாத்தாமார், அம்மம்மாமார், சுவிஸ் சித்தப்பா, சித்தி, ஜேர்மன் மாமா, ஹொலண்ட் பெரியமாமா, பெரியமாமி, அத்தான், தலாவாக்கலை பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், பாரின் ஆசையப்பா, ஆசையம்மா, அக்கா, இலங்கை மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள், லண்டன் அப்பப்பாமார், அப்பம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், ஜேர்மன் அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், மாமிமார், லண்டன் ஆசைமாமா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வேல்தாங்கி உள்ள வேலவன் அருளும் காளித்தாயின் ஆசியும் கிடைக்கப் பெற்றுப் பல்லாண்டுகாலம் எல்லா வளங்களும் பெற்று பேரின்பப் பெருவாழ்வு வாழ்க, வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

விசவத்தனை வீதி, பண்ணாகம். தகவல்: **குடும்பத்தினர்.**

(சி-36070) (24)

---



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**மார்க்கண்டு நாகரத்தினம்**

(உரிமையாளர் : நாகரத்தினம் அன்தோ யாழ்ப்பாணம்)
பங்காளர்: BRITISH LIGHT LANKAN (PVT)LTD, COLOMBO)

திதி: 01-08-2004

தோற்றம் 16-02-1925 மறைவு 24-07-2002

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

62, 127 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-36677)

---

## எரிபொருள் நிலையத்தில் திருட்டு

அச்சுவேலி,ஓக.1

• அச்சுவேலி பல நோ.கூ.சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தில் கடந்த புதன்கிழமை இரவு கூரை பிரித்து பணம் மற்றும் பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

அச்சுவேலி-சங்கானை வீதிச் சந்தியில் எரிபொருள விற்பனை நிலையம் அமைந்துள்ளது. களவு நடைபெற்ற வேளையில் காவலாளியும் கடமையில் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

6ஆயிரம் ரூபா பணம் மற்றும் பொருள்கள் களவாடப்பட்டதாகத தெரிவிக்கப்படுகிறது. அச்சுவேலிப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-11)

---

### கார்விற்பனைக்கு

13 சிறி தொடர் இலக்கம் உடைய மிற்சுபிசி கார், முழுமையாக குளிரூட்டப்பட்டதும் 5 GEAR, OUTO SHUTER

தொடர்பு இல. 021 - 2263575

---

### மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



அரியாலை, வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவத்தை மாற்றி வருடாந்த மஹோற்சவமாக்கி ஒரு வருட காலத்திலேயே கொடித்தம்பம், சப்பறம், தேர் முதலிய உற்சவங்களை சிறப்புற நடத்தியவரான இந்த ஆலய பரிபாலன சபைத் தலைவர்

உயர்திரு.

**கந்தையா சந்திரராசா**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவரது பணியானது மேன்மேலும் சிறப்புடன் தொடர அம்பிகையின் அருட்கடாட்சம் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

பூங்காவன உற்சவ அரியாலை,
நல்லூர் நண்பர்களும், மக்களும்.

(34772)(21-11-19)

---

# ஆண்டொன்றின் நினைவலைகள்

மண் வாசனையில் 20 - 05 - 1932



விண் ஏகலில் 14 - 08 - 2003

**தம்பிப்பிள்ளை மயில்வாகனம்**

( உஷா நிறுவனத்தின் இளைப்பாறிய பொறியியலாளர்)

என் நினைவுகள் உள்ளவரை என்றுமே
என் னுயிர் துணைவர் நினைவில் வாழ்ந்திருப்பேன்
என் னுயிர் எமன் எடுத்த பின்பும்
என் எஜமானுடன் சங்கமிப்பேன்.

02-08-2004 அன்று மனைவியின் இல்லத்தில் ஆண்டுக்கிரியைகள் நடைபெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் கலந்து சிறப்பிப்பதுடன் மதிய போசனவைபவத்திலும் இணைந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

மாவடி வாசா,
வேம்படி,
வல்வெட்டித்துறை.

மனைவி ம.பாலசரஸ்வதி,
ஆசிரியை
தொண்டர் வித்தியாலயம்
மருதானை, கொழும்பு.
மற்றும் சகோதரர்கள்.

---

### வீடு வாடகைக்கு

நல்லூர் கோயிலுக்குச் சமீபமாக நாவலர் வீதியில் ஐந்து (05) அறைகள் கொண்ட விசாலமான வீடு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல: 2227109 காலை 8.30 மணிக்கு முன்னும் மாலை 6.00 மணிக்குப் பின்பும்.

(34752)

---

### மணமகள் தேவை

கணனிப்பொறியியல் படிப்பு முடித்தபின் கனடாவில் புலமைப்பரிசில் பெற்று Masters of Engineering 1st Class இல் முடித்த கனேடிய விருது பெற்று கனடாவில் வசிக்கும் நல்லொழுக்கம் கொண்ட உயர் சைவ வேளாள குலத்து 28 வயதுடைய மணமகனுக்குப் படித்த மிகவும் பண்புமிக்க குடும்பத்தில் இருந்து நன்கு படித்த அழகிய டாக்டர் அல்லது இஞ்சினியர் அல்லது விஞ்ஞானப் பட்டதாரி அல்லது ஓரிரு வருடங்களில் பட்டம் பெறுகின்ற நல்லொழுக்கமிக்க 25 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. சைவபோசனம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: திருமதி குணரட்ணம் குளங்கரைலேன், கொக்குவில் கிழக்கு. (0777 531350) பொருத்தமற்ற பெண் விவரங்களின் இரகசியம் பேணப்படும்.

(21-11-19) (34752)

---

### காணியும் வீடும் விற்பனைக்கு

இலக்கம் 2. இரண்டாம் ஒழுங்கை. பிறவுண் வீதியில் உள்ள 3 பரப்புக் காணியும் சகல வசதிகளுமுள்ள வீடும் உடன் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு ச.தேவராஜனுடன் தொ.பேசி 021-222-2490 என்ற எண்ணில் தொடர்புகொள்ளவும். (சி-36674)

---

### வீடு/காணி தேவை

மனநலம் தொடர்பாகப் பணியாற்றும் தொண்டு நிறுவனமான சாந்திகத்தின் பாவனைக்காக வலிகாமம் பிரதேசத்தில் பிரதான வீதிக்கு சமீபமாக வீட்டுடன் அல்லது வெற்றுக் காணி தேவைப்படுகின்றது. பழுதடைந்த வீடாயினும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ந.கனகரத்தினம்
தலைவர்

தொடர்பு: நிர்வாக உத்தியோகத்தர்,
சாந்திகம்,
15, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 3338 (C/36636)(40)

---

உ

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் ஆதரவுடன்

**நயினை நாகபூஷணி அம்மன்**

மேற்பாடிய பாடல்களடங்கிய

# இசைமாலை வெளியீடு

காலம்: **இன்று (01.08.2004 ) ஞாயிறு மாலை 4 மணி**
இடம்: **நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**
தலைவர்: வைத்தியகலாநிதி வை.தியாகராசா
*(தலைவர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்)*

நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல், அமைதி வணக்கம்
தேவார பாராயணம் -
ஆசியுரைகள்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர்)
சிவஸ்ரீ ஜம்பு மகேஸ்வரக் குருக்கள்
(பீடாதிபதி இந்துகுருமார் ஒன்றியம்)
சிவஸ்ரீ ப.முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்
*(உற்சவகுரு. நயினை நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்)*
தலைமையுரை:
வெளியீட்டுரை:
கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ் மயில்
(செயலாளர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்)
ஒலிப்பேழை வெளியீடு: முதற்பிரதி வழங்கல்
சிறப்புப் பிரதிகள் வழங்கல்
நயப்புரைகள்: செஞ்சொற்செல்வன் ஆறு.திருமுருகன்
(ஆசிரியர், ஸ்கந்தவரோதயா கல்லூரி)
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
(நிதிச் செயலர், சைவ வித்யா விருத்திச் சங்கம்)
முத்தமிழ் வித்தகர்: சிவ.மகாலிங்கம்
(உதவிப் பணிப்பாளர், இந்து கலாசார அமைச்சு - யாழ்.)
கலாநிதி மா.வேதநாதன்
(இந்துநாகரிகத்துறைப் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்)
கலாநிதி கி.விசாகரூபன்
(தமிழ்த்துறைப் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்)
கவிஞர்கள் கௌரவிப்பு:
கவிஞர்கள் ஏற்புரை: திரு.வேலாயுதபிள்ளை ஞானகாந்தன்
(அதிபர், யா/இந்து ஆரம்பப் பாடசாலை)
திரு.கா.பொ.இ.குலசிங்கம்
(கிராம சேவையாளர் - நயினாதீவு)
நன்றியுரை: ச.கு.சரவணபவானந்தன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், தீவகம்)

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-36669)(34) பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக்கழகம்.

---

# மரண அறிவித்தல்

## திருமதி சிவலிங்கம் சிவனேஸ்வரி



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் ஏழாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவலிங்கம் சிவனேஸ்வரி அவர்கள் 29-07-2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பூதாத்தை தம்பதியரின் அருமை மருமகளும் தேவராஜா, காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் இராமலிங்கம் (கனடா), அரியநாயகம், தனலக்ஷ்மி, இரத்தினவடிவேல் (ஆஸ்திரேலியா), பாலரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மதிவதனி (பிரான்ஸ்), தர்மவதனி (பிரான்ஸ்), நகுலேந்திரராஜா, இரத்தினவதனி (பிரான்ஸ்), தேவகி, திலகேந்திரராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சச்சிதானந்தம் (பிரான்ஸ்), சுகுமார் (பிரான்ஸ்), நேசமலர், வசீகரன் (பிரான்ஸ்), இராஜகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் சந்தனா, பானுஷா, சுதர்சன், பகீரதி, சுபாசினி, எலிசபெத், தியானி, வருணன், தீவிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காடாகடம்பை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு,
புளியடி வைரவர் கோயிலடி,
ஏழாலை.

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

(34777)(21-11-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. தீர்மானத்தை நிராகரித்தது சூடான்

கார்டோவம்,ஓக.1

சூடானில் அரசுக்கு ஆதரவாகச் செயற்படும் ஆயுதம் தாங்கிய இயக்கங்களை ஒரு மாதத்துக்குள் கட்டுப்படுத்த வேண்டும் என்று ஐ.நா. சபை இயற்றியுள்ள தீர்மானத்தை அந்நாட்டு அரசு கடுமையாக விமர்சித்துள்ளது.

சூடானில் நடைபெறும் கொடுஞ்செயல்களுக்கு முக்கிய காரணமாக அரசுக்கு ஆதரவான ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் இருக்கின்றன. இவற்றை ஒரு மாதத்துக்குள் கட்டுப்படுத்த வேண்டும். தவறினால் அந்நாட்டின் மீது சர்வதேச நடவடிக்கைகள் தொடங்கும் என்று ஐ.நா. சபை தீமானம் நிறைவேற்றியுள்ளது.

இத்தீமானம் குறித்துக் கருத்துத் தெரிவித்த சூடான் அரசின் செய்தித் தொடர்பாளர் அல் ஜஹாவி இப்ராஹிம் மாலி கூறியதாவது:-

சூடான் மீது சர்வதேச நடவடிக்கைகள் தொடங்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதுபோன்ற மிரட்டல்களை சூடான் நிராகரிக்கிறது. எங்கள் நாட்டு மக்களைப் பாதுகாக்கும் வலிமை எங்களுக்கு உண்டு.

சூடானுக்கு எதிரான சக்திகளின் சதிகளையும் நாட்டின் பொருளாதார வளங்களின் மீது பேராசை கொண்டவர்களின் சூழ்ச்சிகளையும் எதிர்க்கும் சக்தி எங்களுக்கு உள்ளது. சூடான் அரசுக்கும் ஐ.நா. சபைக்கும் ஜுலை 3 இல் ஏற்பட்ட ஒப்பந்தத்துடன் ஐ.நா. தீர்மானம் முரண்படுகிறது என்றார் - மாலிக்.

## வர்த்தக அறிக்கையை ஏற்க இந்தியா மறுப்பு

உலக வர்த்தக அமைப்பில் திருத்தப்பட்ட வரைவு அறிக்கையின் அம்சங்களை இந்தியா நிராகரித்தது. வேளாண்துறை அம்சங்கள் இந்தியாவுக்குப் பாதகமாக அமைந்துள்ளன. இதை ஏற்க இயலாது என்று இந்தியா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. உலக வர்த்தக அமைப்பின் பொதுக்குழுக்கூட்டம் இன்னும் சில தினங்களில் நடைபெறவுள்ளது. அப்போது இந்தப் பிரச்சினை எழுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 14 ஆண்டுகளுக்கு முன் விதிக்கப்பட்ட

# ஈராக் மீதான தடையை அமெரிக்கா நீக்கியது

வாஷிங்டன்,ஓக.1

ஈராக் மீது விதிக்கப்பட்டிருந்த 14 ஆண்டு காலப் பொருளாதாரத் தடையை அமெரிக்கா நீக்கியுள்ளது.

கடந்த 1990 ஆம் ஆண்டு ஈராக், குவைத்தை ஆக்கிரமித்த போது அப்போது அதிபராக இருந்த சதாம ஹுஸைனை ஒடுக்க நினைத்த அமெரிக்கா, ஈராக் மீது பொருளாதாரத் தடையை அமுல்படுத்தியது. இதைத் தொடர்ந்து வளைகுடாப் போர் மூண்டது. அப்போது முதல் ஈராக் மீது பொருளாதாரத் தடை நீடித்து வந்தது. இந்நிலையில், கடந்த ஆண்டு சதாம் ஆட்சி முடிவுக்கு வந்த பின் கடந்த ஆண்டு மே மாதம் ஈராக் மீதான பொருளாதார தடையை ஐ.நா, விலக்கிக்கொண்டது.

சதாம் ஆட்சி வீழ்ந்த பின்பு ஈராக் நிர்வாகத்தைக் கவனித்து வந்த அமெரிக்கா, சதாம சொத்துக்களை முடக்கி வைத்தது. இந்த நிலையில், ஈராக்கில் தற்போது நிலைமை மேம்பட்டுள்ளதாகத் தெரிவித்து அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடையை நீக்குவதாக அதிபர் புஷ் அறிவித்துள்ளார். இதன் மூலம் ஈராக் மீது அமெரிக்கா விதித்திருந்த 14 ஆண்டுகாலப் பொருளாதாரத் தடை முடிவுக்கு வந்துள்ளது.

(ஐ)

## ராகுலுக்கு வெளிநாட்டு மணப்பெண்

அமேதி,ஓக.1

தொகுதியின் வளர்ச்சிப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதுதான் தனது முதல் வேலை. அதன் பிறகே தனது திருமணம் குறித்து முடிவு செய்யப்போவதாக இந்தியாவின் அமேதி தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் மகனுமான ராகுல் காந்தி தெரிவித்தார்.

அமேதியில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

எனது ஸ்பெயின் காதலி வெரோனிகாவை திருமணம் செய்துகொள்வது குறித்து தற்போது எந்த முடிவும் எடுக்கவில்லை - என்றார்.


A/L 2006
C/MA.
Mr.தவசேகர்
CHE.
Mr.ஜெயந்தன்
PHY.
Mr.லெனின்
SHAMROCK
J/Eachchamoddai Rd.
(34778)





நாற்பத்தைந்தாவது ஆண்டுநிறைவு

திருமண வாழ்த்து

45

உடுவில் தெற்கைச் சேர்ந்த

எமது

அன்புக்குரிய

திரு. திருமதி இராமலிங்கம் தம்பதிகளின்

இல்லற வாழ்வின் நல்லறம் கண்டு நாற்பத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்த தம்பதியரை பல்லறம் செய்து பண்புடன் வாழ்த்திடும் பணியில் தொடர்ந்து சிறப்புற வாழ்த்துகின்றோம்.

K.R.S. நிறுவனம்
அருள் கல்வி நிலையம் இணுவில்,
கோண்டாவில் கல்வி நிலையம்,
ஐங்கரன் டொட் கொம் இணுவில்,
றவீனர்கள், நண்பர்கள்- இணுவில்.

(C/36680)



## விநியோக உதவியாளர்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு விநியோக உதவியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

தகைமைகள்:

- G.C.E (O/L) சித்தி
- வயது 22-35 இற்கு இடையில்
- தேக ஆரோக்கியம் உள்ளவர்கள்
- கட்டட, மின் இணைப்புப் பொருள்களில் பரிச்சயம் விரும்பத்தக்கது.

விரும்புவோர் 02.08.2004 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்கு ஆவணங்களுடன் நேரில் வரவும்.

மனிதவள முகாமையாளர்,
லக்ஷ்மி குறூப்
23/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(பிறவுண் வீதியில் இருக்கும் மின்சார சபைக் காரியாலயத்திற்கும் கலட்டிச்சந்திக்குமிடையில் முகவரி அமைந்துள்ளது.)

(C-36681)(40-29-12-15)



## வெற்றிடங்கள்

யாழ்.மெதடிஸ்த திரு அவையினால் நடத்தப்படும் பின்வரும் நிறுவனங்களிற்கு கீழ்வரும் வெற்றிடங்கள் உள்ளன

1) புத்தூர் முதியோர் இல்லம் – சமையலாளர் (ஆண்/பெண்)
2) புத்தூர் முதியோர் இல்லம் – பராமரிப்பாளர் (பெண்)
3) வேம்பஸ்தான் பெண்கள் விடுதி – சமையலாளர் (பெண்)
4) றிம்மர் மண்டபவளவு. தோட்டப் பராமரிப்பாளர் (ஆண்)
5) கில்னர் பாலர் பாடசாலை – பயிற்றப்பட்ட முன்பள்ளி ஆசிரியை

மேற்படி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 08-08-2004 (ஞாயிறு) அன்று காலை 10 மணியில் இருந்து பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு **றிம்மர் மண்டபம், இல.9, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.

கொடுப்பனவுகள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(34775)(26-29-12-15)



## நெல்லை சில்க் - நெல்லியடி

### அதிர்ஷ்டம்

இம்மாத நெல்லை சில்க் பட்டுச் சேலை அதிர்ஷ்ட எண் 052 - உரியவர் நேரடியாக வந்து பட்டுச்சேலையைப் பெற்றுக்கொள்ளலாம்.

சி.அகிலன்,
உரிமையாளர்.

(சி-36678)(29-12-15)


## 21 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை

எமது கல்லூரி ஆசிரியர்
திரு.வே.சிவகுருநாதன் அவர்களது
அன்புத் தாயார்

**திருமதி இராசம்மா வேலுப்பிள்ளை**

அவர்களின் மறைவு எமக்கு கவலையை அளிக்கின்றது. அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி

கொக்குவில். (சி-36679)(29-12-15)

## மரண அறிவித்தல்கள்

### முத்தையா இராசலிங்கம்



கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் தேவாலய வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா இராசலிங்கம் அவர்கள் 30.07.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா லக்சுமி தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்ற காங்கேசு இராசமூர்த்தி ஆகியோரின் மருமகனும் சகுந்தலா தேவியின் அன்புக் கணவரும் ஜெயகாந்தன், சசிகாந்தன் (ஜேர்மனி), கார்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரமிளா, சுசித்திரா ஆகியோரின் மாமனாரும் தட்சாயினி, மதுசாயினி, ததுர்சிகா, ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தேவாலய வீதி,*
*சங்கானை.* (34785)(29-12-15)

தகவல்:
ஜெயகாந்தன் (மகன்).

### துரைச்சாமி ஜெயப்பிரகாஷ் (பத்தர்)



பருத்தித்துறை , விஸ்வகுல வீதியைப் பிறப்பிடமாகவும் ஸ்ரேசன் றோட், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி ஜெயப்பிரகாஷ் அவர்கள் நேற்று (31.07.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் இராஜேஸ்வரி, ராணி, லீலா, லலிதா, கமலா, சாரதா ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற தங்கவேல் மற்றும் தங்கமயில், மகாதேவா, இலட்சுமணன், ஜெகதீசன், பரமானந்தம் ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2004) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் (பழைய நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புகையிரத நிலைய வீதி,*
*சுன்னாகம்.* (34781)(29-12-15)

தகவல்:
சகோதரிகள்.

### பிரம்மஸ்ரீ கு.நித்தியானந்தேஸ்வர சர்மா

(கெக்கராவ விநாயகர் ஆலய முன்னாள் பூசகர் - ரகு ஐயா)

தென்.மட்டுவில், வேரக்கேணி கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரம்மஸ்ரீ கு.நித்தியானந்தேஸ்வர சர்மா (ரகு ஐயா) அவர்கள் 28.07.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் முன்னாள் அர்ச்சகரான குமாரசாமிக் குருக்களின் அன்பு மகன் ஆவார்.

அன்னாரின் தசாகம் முதலான கிரியைகள் யாவும் (06.08.2004) வெள்ளிக்கிழமை இருபாலையில் வீரபத்திரர் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரபத்திரர் கோயிலடி,*
*இருபாலை.* (34788)(29-12-15)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 11 | 13 |
| 03 | 08 |
| 1928 | 2003 |



**அமரர் கந்தையா கதிரவேலு**

*ஆண்டொன்று ஆயினும்*
*ஆறாதப்பா நம்துயர்*
*என்றும் உங்கள் நினைவு*
*எம் நெஞ்சங்களில்...*

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

தலங்காவில் பிள்ளையார் கோவிலடி,
திருநெல்வேலி. (34786)(40-12-15)


நாகம்ஸ் சுன்னாகம்
சிம்பு, ரம்மியா, கருணாஸ், மனோரமா நடித்த

குத்து
திங்கள்முதல் ரஜனிகாந்த் நடித்த
பாட்ஷா

காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C/36662) (12)

லக்சுமி இணுவில்
விஜய், த்திரிஷா, பிரகாஸ்ராஜ் நடித்த

கில்லி
புதிய நேரம் 11.00, 3.00, 7.00
(34789) (12)

நிறஞ்சனாஸ் சங்கானை
ஜூனியர் சிவாஜி துஷ்யந்த், சுபா, பூஜா நடித்த
மச்சி
தினசரி: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு
Saving Private Ryal [இரவு 8.45]

ராஜா யாழ்ப்பாணம்
அர்ஜுன், மீனா, நெப்போலியன் நடித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புளொட் மோகனின் சடலத்தைப் பதில் நீதிவான் க.கணபதிப்பிள்ளை பார்வையிடுகிறார்.

# பட்டதாரிகள் குழம்ப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவது சம்பந்தமாக யாழ். மாவட்டத்தில் பல பட்டதாரிகள் தங்களுக்கான நியமனம் இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். திறைசேரியினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகள் அரச அதிபரினால் இன்று (31.07.2004) திறைசேரி முகாமைத்துவப் பிரிவின் உத்தியோகத்தரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதுதொடர்பாக ஏற்கனவே கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் யாவும் பரிசீலனையில் உள்ளன எனவும் - அவற்றில் முதறகட்டமாக 17 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கான பெயர் பட்டியல் தற்போது தற்போது வெளியிடப்பட்டு உள்ளதாகவும், மேலும் 12 ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர்களது பெயர்ப்பட்டியல் விரைவில் வெளியிடப்படுமெனவும் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது சம்பந்தமான பத்திரிகை அறிவித்தல்கள் காலக்கிரமத்தில் விடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, யாழ். மாவட்டத்தில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய பட்டதாரிகளின் விண்ணப்பங்களும், நேர்முகப் பரீட்சைப் பட்டியல்களும் பிரதேச செயலர்களினால் திறைசேரிக்கு ஒழுங்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அவை திறைசேரிக்குக் கிடைத்துள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. தகுதியுள்ள விண்ணப்பங்களும் பரிசீலனையிலுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனவே இதனையிட்டு தமது பெயர்கள் தெரிவுப் பட்டியலில் வராதவர்கள் கலவரமடையவேண்டியதில்லை என்பதைச் சகல தகுதியுடைய விண்ணப்பதாரிகளின் கவனத்துக்கும் கொண்டுவரவிரும்புகிறேன்.

- இவ்வாறு அரச அதிபர் தெரிவித்துள்ளார்

(ஐ-3)

# புளொட் மோகன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யத்துக்குச் சமீபமாக ஓட்டோவில் வந்திறங்கிய அவர், 'ஹவுஸ் ஒவ் பஷன்' நோக்கிச் சென்றார் என்றும் அந்த நிலையம் மூடப்பட்டிருந்தது கண்டு அங்கிருந்து ஓட்டோ நிறுத்தப்பட்ட இடத்துக்குத் திரும்பி வந்தார் என்றும் கூறப்படுகின்றது. பின்னர், ஓட்டோவினுள் ஏறி அங்கிருந்து கிளம்ப முற்பட்டபோது அவருக்கு கைத்தொலைபேசி அழைப்பு ஒன்று கிடைத்துள்ளது. கைத்தொலைபேசியில் தெளிவாக உரையாடுவதற்கு வசதியாக அவர் ஓட்டோவை விட்டு இறங்கி வீதியோரமாகச் சென்று உரையாடியுள்ளார். சிறிதுநேரத்தின் பின் மீண்டும் வந்து ஓட்டோவிலேற ஆயத்தமானார் என்றும் - அச்சமயம் அந்த வீதியை வேகமாகக் கடந்து சென்ற இரண்டு மோட்டார் சைக்கிள்களில் ஒன்றிலிருந்து அவர் மீது சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்றும் - கூறப்படுகின்றது.

முதுகு, விலாப்பகுதி, இடதுகால் ஆகிய இடங்களில் நான்கிற்கும் மேற்பட்ட குண்டுகள் பாய்ந்ததில் புளொட் மோகன் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. சடலத்தின் அருகே எட்டுக்கும் மேற்பட்ட வெற்றுத் தோட்டாக்கள் காணப்பட்டன.

நுகேகொடையிலிருந்து புடைவை வாங்குவதற்காக அவர் பம்பலப்பிட்டிக்கு வந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இந்தச் சூட்டுச் சம்பவத்தினால் பம்பலப்பிட்டிப் பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

மூன்று குழந்தைகளின் தந்தையான புளொட் மோகனுக்கு வயது 41. இவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது விடுதலைப் புலிகளின கட்டுப்பாட்டில் இருக்கும் கொத்தியப்புளை என்னும் இடத்தைச் சேர்ந்தவர்.

இந்தியாவில் இராணுவப் பயிற்சிபெற்ற புளொட் அமைப்பின் முதல் அணி உறுப்பினர்களில் இவரும் ஒருவர். 1983 ஆம் ஆண்டு முதல 1993 ஆம் ஆண்டு வரை பத்து ஆண்டு காலம் இவர் புளொட் அமைப்பில் இணைந்திருந்து செயற்பட்டவர்.

இக்காலப் பகுதியில் கொலைகள் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டு அமைப்பு விதிகளை மீறிச் செயற்பட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு இவரும் அவரோடு சேர்த்து வேறு இருபது உறுப்பினர்களையும் புளொட் அமைப்பு வெளியேற்றியிருந்தது. அதன் பின்னர், புளொட் மோகனும் அவரது தலைமையிலான சிறு அணியினரும் இராணுவத்துடன் இணைந்து துணைப் படையாகி கிழக்கில் செயற்படத் தொடங்கினர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவில் தீவிரமாகச் செயற்பட்ட மோகன் கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் இராணுவத்துக்குப் பெரிதும் உதவி வந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்கள் பலர் காணாமற்போனமை, கொலை செய்யப்பட்டமை போன்ற சம்பவங்களில் இவரே சூத்திர தாரியாக இருந்தார் எனக் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டு வந்தன.

வடக்கு - கிழக்கில் காணமற் போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்த ஓய்வுபெற்ற நீதிபதி கி.பாலகிட்ணர் தலைமையில் அமைக்கப்பட்ட ஆணைக்குழு, மட்டக்களப்பில் விசாரணை நடத்தியபோது அங்கு ஆள்கள் காணாமற்போன சம்பவங்களுடன் இவருக்குத் தொடர்பு இருந்ததைப் பலரும் தங்கள் சாட்சியங்களில் வெளியிட்டிருந்தனர்.

அண்மையில் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவுடன் புளொட் மோகன் தொடர்புகளை வைத்திருந்தார் என்று தகவல்கள் வெளியாகி இருந்தன.

கருணாவைச் சந்தித்துப் பேசுவதற்காக இவர் கொழும்பிலிருந்து இராணுவ ஹெலிகொப்டரில் மட்டக்களப்புக்குச் சென்று வந்தார் என்றும் தகவல் வெளியாகியிருந்தது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரியான கப்டன் நிலாமுடன் புளொட் மோகன நெருங்கிய உறவு வைத்திருந்தார்.

அத்துருகிரிய மிலேனியம் சிற்றிப் பகுதியில் இரகசிய மறைவிடம் ஒன்றில் புலனாய்வுத்துறை முகாமின் பொறுப்பாளராகவும் புளொட் மோகனே செயற்பட்டு வந்தார் என்று கூறப்படுகின்றது.

பொலீஸ் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சரத் லூகொட தலைமையிலான பொலீஸ் குழு மற்றும் பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி குமாரசிறி ஆகியோர் இக் கொலைச் சம்பவம் பற்றி விசாரணைகளை நடத்தி வருகின்றனர். அருகருகே வந்த இரண்டு மோட்டார் சைககிள்களில் ஒன்றிலிருந்து 9 மில்லிமீற்றர் பிஸ்டல் ரகத் துப்பாக்கியால் சுடப்பட்டிருப்பது பொலீஸ விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

கொலை செய்யப்படுவதற்கு சிறிது நேரத்துக்கு முன்வந்த தொலைபேசி அழைப்புத் தொடர்பாகவும் பொலீஸார் விசாரித்து வருகின்றனர்.

இதேவேளையில்-

பம்பலப்பிட்டியில் நேற்றுச் சுட்டுக் கொல்லபபட்ட புளொட் மோகன் இராணுவத்துடன் தொடர்பு வைத்திருக்கவில்லை என்று மறுத்திருக்கிறார் இராணுவப் பேச்சாளர் கேணல் சுமெத பெரேரா.

(ஐ-3-6)

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு கொக்கட்டிச்சோலை, வந்தாறுமுலைச் சம்பவங்களுக்கு பொறுப்பானவர் புளொட் மோகன்தான் பொதுமக்களை வெருட்டி கப்பம் பெறுவது, படுகொலைகள் செய்வதுதான் இவரது வேலை என்றும் அரியநேந்திரன் தெரிவித்தார்.(ஐ-3)

## அச்சுவேலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலக அதிகாரிகளைச் சந்தித்து நடத்திய கலந்துரையாடலின்போது அமைச்சர் இதற்கான அங்கீகாரத்தை வழங்கினார்.

வலி.கிழக்கில் அச்சுவேலியையும், தென்மராட்சியில் கொடிகாமத்தையும் மையமாகக் கொண்டு புதிய நிர்வாக எல்லைகள் வகுக்கப்பட்டு பிரதேச செயலகப் பிரிவுகள் அமைக்கப்படும்.

வலி கிழக்கிலும் தென்மராட்சியிலும் குடிசன அடர்த்தி கூடுதலாக இருப்பதால் புதிய பிரதேச செயலகங்களை உருவாக்கவேண்டிய அவசியம் குறித்து யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் அமைச்சருக்கு விளக்கினார்.

இவ்விரு இடங்களையும் மையமாகக் கொண்டு பிரதேச செயலகங்களை ஆரம்பிக்க அங்கீகாரம் வழங்கிய அமைச்சர், பிரதேச செயலர் பிரிவு அமையும் பிரதேசத்தின் எல்லை, சனத்தொகை, வளங்கள் ஆகியன தொடர்பான விரிவான அறிக்கை ஒன்றை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் தமக்குச் சமர்ப்பிக்கும்படி அரச அதிபரிடம் கேட்டுக்கொண்டார்.

(ஐ-3)

## பம்பலப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை சட்டம், ஒழுங்கு மற்றும் சமாதான அமைச்சரும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான-ரட்ணசிறி விக்கிரமநாயக்க சில தினங்களுக்கு முன்னர் கண்டித்திருந்தார்.

தற்போதைய அமைதிச் சூழலுக்கு பாதகம் ஏற்பட்டுள்ளதாகவே அரசு இதைக் கருதுகின்றது. - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-6)

## எச்.ஐ.வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவருக்கு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

பிரஸ்தாப நோயாளி வலிகாமம் கிழக்கு பகுதியைச் சேர்ந்தவர். 1996ஆம் ஆண்டு வெளிநாடு செல்லப் புறப்பட்ட இவர், பயண முகவரால் ஏமாற்றப்பட்டு இடைவழியில் தாய்லாந்திலும் பின்னர், கம்போடியாவிலும் நீண்டநாள்கள் தங்கியிருந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. கம்போடியாவில் ஹோட்டல் ஒன்றிலும் சிறிது காலம் வேலை புரிந்துள்ளார்.

சுமார் 10 மாதகாலம் கம்போடியாவில் தங்கியிருந்துவிட்டு பின்னர், அங்கிருந்து ஜேர்மனிக்குச் சென்றுள்ளார். ஜேர்மனியிலிருந்து கனடாவுக்குப் புறப்படமுயன்றபோது அந்நாட்டுப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட இவர், 1998ஆம் ஆண்டு கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தார்.

அதன்பின்னர், சொந்த ஊர் திரும்பி பகுதிநேர ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார் என்று தெரியவருகிறது.

குடாநாட்டில் எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக்கானவர்கள் என்று இதுவரை அடையாளம் காணப்பட்ட அனைவருமே வெளிநாடுகளிலிருநது திரும்பியவர்களாவர். (ஐ-15)


கிளிநொச்சியில்
உதயன் பணிமனை
செய்திகள்
விநியோகம்
விளம்பரம்
சம்பந்தமான சகல தொடர்புகளுக்கும்...
இல: 167, ஏ-9 நெடுஞ்சாலை,
கிளிநொச்சி.

NEW SCIENCE CENTRE யாழ். நகர்
CHEMISTRY DAY CLASS
★ துரித மீட்டல்.
★ அலகு ரீதியான வினா விடை.
★ அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள்.
★ மாதிரி வினாக்கள்.
★ 20 இற்கு மேற்பட்ட கருத்தரங்குகள்.
Mon. - Fri. - 8.00 - 9.15 a.m.
By: அன்பழகன் B.Sc.
(சி-36686)

வேலையாள்கள் தேவை
(பெண்பிள்ளைகள்)
மா வகைகள் பொதிசெய்தல்
K.R.S. FOOD PRODUCTS
(உப தபால் அலுவலகம் முன்பாக)
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில். (சி-36672)

முக்கிய அறிவித்தல்
A/L 2005
பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விசேட வினா விடை வகுப்பு.
வழமையான ரியூசன் முறைகளிலிருந்து வேறுபட்ட, புதிய கற்பித்தல் உத்திகளை உள்ளடக்கியது
Bio - அல்போன்ஸ்
Maths - பிரபாகரன், - ஜெயந்தன்
Che - அன்பழகன், - ஜெயந்தன்
Phy - செந்தில்குமரன், - பிரபா
❖ விரும்பிய அலகுகள் கற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.
ஆரம்பம்: 02. 08. 2004 திங்கள் 3. 30 p.m.
CHEMISTRY CENTRE,
Temple Road.
(சி-36685)

பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்
ஆரம்பம்:
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974184 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS.
(33927)

Computing for Kids
சிறுவர்களுக்கான கணனிப் பயிற்சி விடுமுறைக் கால பயிற்சிநெறி ஆரம்பமாகவுள்ளது.
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
Sky Computers (Pvt)Ltd.
89, Kandy Road,
Chundikuli,
Jaffna.
(36616)(40-11-16)


## மரண அறிவித்தல்

### நடராஜா தில்லைநாயகி

நயினாதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா தில்லைநாயகி நேற்று (31.07.2004) சனிக்கிழமை கீலமாகிவிட்டார்.

அன்னார் நடராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவநாதன், செல்வநாதன் (விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்), சரோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானசுந்தரி, தேவமதி, காலஞ்சென்ற ராஜகுலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*நயினாதீவு,*
*8ஆம் வட்டாரம்.* (34790)

தகவல்:
செல்வநாதன் (மகன்).




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# தமிழ் அரச 'முடி'யின் புத்துருவாக்கம் எப்போது?

டென்மார்க்கின் முடிக்குரிய இளவரசர் பிரடறிக்கும், இளவரசியாகும் மரிடொனால்சனுக்குமான அரச குடும்பத் திருமணம் டென்மார்க் நாட்டையே கடந்த ஒருவாரகாலமாகத் ஸ்தம்பிக்க வைத்தது. சுமார் 15 கோடி குறோணர் பணத்தைச் செலவு செய்து இந்த ஆடம்பர வைபவம் நடத்தப்பட்டது. அதிகாரம் இல்லாவிட்டாலும் உலகத்தின் பல நாடுகளிலும் அரசர்களாக இருப்போரும், அவர்களுடைய குடும்பங்களும் ஆயிரக்கணக்கில் அணிவகுத்து வந்து இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். முப்படைகளின் மரியாதை, கலை நிகழ்ச்சிகள் , பிரமாண்டமான விருந்துபசாரங்கள் , பல்லாயிரம் ரூபாய் செலவிலான ஆடைகளின் உருவாக்கம் என்ற இருபத்து நான்கு மணிநேரமும் தொலைக் காட்சிகளின் நேரத்தை எல்லாம் இந்தத் திருமணம் சுவீகரித்துக் கொண்டது.

இங்கிலாந்தின் இளவரசர் சாள்ஸ் டயானா திருமணத்திற்குப் பிறகு நடை பெற்ற மிகப் பெரிய அரச குடும்ப திருமணம் என்று வர்ணிக்கும் அளவிற்கு இதனுடைய பிரமாண்டம் இருந்தது. நாட்டின் பொருளாதாரம் இறங்குமுகத்தில் இருக்க, ஏழைகள், வேலையற்றோர், தினந்தினம் வேலைஇழப்போர் துயரங்கள், குரல் வளையைப் பிடிக்க , ஈராக் போரினால் எரிபொருள் விலை உயர்ந்து நாலுபக்கமும் விலையேற்றம் தலைவிரிகோலமாக சதுராட இந்த நாட்டில் மக்கள் படும்பாடு சொல்லுந்தரமன்று. நிலைமை இப்படியிருக்க, இத்தனை மில்லியன் குறோணர்களை செலவழித்து ஒரு திருமணத்தை நடத்த வேண்டுமா?இது சிலருடைய கேள்வி.

இந்த நிலையில் ஏன் இப்படியொரு ஆடம்பரத் திருணத்தை நடத்தினார்கள்? அதற்கான தேவை என்ன? இவை பற்றி அறிவுக்கு எட்டிய கோணத்தில் ஆய்வு செய்ய நமக்கும் உரிமையிருக்கிறது. அதே வேளை, உலகத்தின் அரச குடும்பங்கள் எல்லாம் அணிவகுத்து வந்த இந்தத் திருமண நிகழ்வில் நமது தமிழ் அரச குடும்பங்கள் எங்கே என்று வினவும் நமது தமிழ் குழந்தைகளின் கேள்விகளுக்கும் நாம் பதில் சொல்லாமல் இருக்க முடியாது.

முதலில் இப்படியொரு திருமணத்தின் அவசியம் என்ன?

முதலாவது இப்போதுள்ள மகாராணி யாரிருக்குப் பின்னர் அரச முடிதரிக்கப்போவது இளவரசர் பிரடறிக்தான். அவருடைய திருமணத்தை எவ்வளவு சிறப்பாக நடத்த முடியுமோ அவ்வளவு சிறப்பாக நடத்த வேண்டும். அப்பொழுதுதான் அரச முடிக்குரிய பெருமையையும் , மரியாதை யையும் நாட்டு மக்களிடையே நிலை நிறுத்த முடியும்.

ஐரோப்பாவில் மன்னர்களுக்கு எதிராக எத்தனையோ புரட்சிகள் வரலாற்றுக் காலத்தில் நடைபெற்றுள்ளன. பிரான்சியப் புரட்சியில் கொல்லப்பட்ட பிரான்சிய மன்னன் 14 ஆம் லூயி குடும்பம் ரஷ்யப் புரட்சியில் கொல்லப்பட்ட சார் அரச குடும்பம் என்று மக்கள் புரட்சிகள் வெடித்த போது அரச குடும்பங்கள் மரணத்தின் விளிம்பிலும் நிற்க வேண்டிய நிலை இருந்தது. அதே வேளை மன்னர்களிடம் இருந்து அதிகாரத்தை மீட்டெடுப்பதற்காக நெடிய போராட்டங்களை ஐரோப்பிய மக்கள் நடத்தியுமுள்ளார்கள். அதற்காக பல்லாயிரக்கணக்கில் செத்து மடிந்தும் உள்ளார்கள்.

இவ்வளவு மாற்றங்கள் நடந்த பிறகும் கூட மன்னராட்சியின் அடையாளங்கள் உலக அரங்கில் அழிந்ததாக இல்லை. இன்றைய நிலையில் ஐரோப்பிய நாடுகள் மட்டமல்ல, ரஷ்யா போன்ற சோசலிச நாடுகளும் மன்னர் அல்லது அரச முடி என்ற மாட்சியைத் தாங்கிய ஒரு தலைமை ஒவ்வொரு நாட்டிற்கும் இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றன.இதனால் லெனின் சிலைகளை இடித்து வீழ்த்திய ரஷ்ய அரசு அதேபிக்கான்களாலும்,மண்வெட்டிகளாலும் கொலை செய்யப்பட்ட சார் மன்னரின் எலும்புக் கூட்டைத் தோண்டியெடுத்து அபிஷேகம் செய்த காட்சியையும் நாம் தொலைக்காட்சிகளில் பார்க்க நேர்ந்தது.

இதற்குக் காரணம் என்ன?

இரண்டாயிரம் ஆண்டுக்குப் பிற்பட்ட புதிய அரசியல் சிந்தனையானது பெருமைக்குரிய அரச முடிஒன்றை ஒவ்வொரு நாடும் சம்பிரதாய பூர்வமாக வைத்திருப்பது அவசியம் என்று கருதுகிறது.அறிவியலின் வளர்ச்சி காரணமாக கடவுள்கொள்கைகள் பலத்த கேள்விக்குள்ளாகி வரும் நிலையில் மக்களை ஒன்றிணைக்க ஒரு சம்பிரதாய பூர்வமான முடி அவசியம்.

நாடு பிளவுபடாமல், பல்வேறு ஜனநாயகக் கொள்கைகளால் துண்டு துண்டாகச் சிதறினாலும் அதிகாரத்தின் முடிவில் அனைவருமே ஒன்றிணையும் வண்ணமாக ஒரு அரச முடியைத் தாபிப்பது அவசியம் என்பதை இன்றைய நவீன உலக நாடுகள் ஏற்றுக் கொள்கின்றன. ஆகவே டென்மார்க் நாடும் இந்தக் கருத்தியலை வலுப்படுத்தசில வேலைகளை செய்துவருகிறது. அதில் ஒன்று தான் இந்தத் திருமணம் என்று எண்ணலாம்.

தற்போது புதிதாகத் தோன்றியுள்ள ஐரோப்பிய ஒன்றியமானது ஏறத்தாழ ஐரோப்பிய நாடுகளையே மூழ்கடித்து விட்டது. ஐரோப்பா என்னும் பெரியதோர் அரக்கனின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒவ்வொரு குடிமகனும் உழைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. டென்மார்க்கில் கற்றசிறந்த கல்வியை வைத்து, ஐரோப்பிய ஒன்றியம் முழுவதும் வேலை தேடுங்கள் என்பதற்கான விளம்பரங்கள் வெளியாகத் தொடங்கிவிட்டன. இந்த ஐரோப்பிய பேரலையில் அலைபடப்போகும் மக்கள் வருங் காலத்தில் சொந்த நாட்டையும் மறக்க நேரலாம். ஆகவேதான் ஐரோப்பிய ஒன்றியம் வந்தாலும் டெனிஸ் முடி அதனுடைய அடையாளங்களுடன் நிற்கிறதுஎன்பதை மக்களுக்குக் காட்ட வேண்டியிருக்கிறது.

இங்கு வாழும் மக்களிடையே, வளரும் குழந்தைகளிடையே டெனிஸ் தேசியத்தை வலியுறுத்த இவை அவசியம். ஐரோப்பாவில் உள்ள மற்ற எந்த நாட்டு அரசமுடிக்கும் டெனிஸ் அரச முடி குறைந்ததல்ல என்பதையும் அழுத்தம் திருத்தமாக சொல்லியிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை அவர்களின் செயல் பாராட்டுக்குரியதே.

இனி நமது நாட்டுக்கு வருவோம்.இந்தத் திருமணத்திற்கு வந்த பல நாடுகளின் அரசர்களின் முகங்களைப் பார்க்கும் ஒவ்வொரு தமிழனின் கண்களும், அடடா நமது அரச பரம்பரையும் இருந்திருந்தால் இந்த நிகழ்வில் கலந்திருக்குமே என்று எண்ணி வேதனைப்பட்டிருக்கும், ஆனால் இன்று நம்மிடம் முடி இல்லை. அதற்குரிய அத்தனை தடயங்களும் குடியேற்ற ஆட்சிக் காலத்தில் திட்டமிட்டு அழிக்கப்பட்டுவிட்டன. அரச முடி அதனடிப்படையிலான தேசியம் என்ற நிலையில் நமது மக்கள் ஒன்றிணையக்கூடாது என்பதற்காக நமது மன்னர்களின் வம்சங்களே ஆணிவேருடன் சுட்டெரிக்கப்பட்டு விட்டன. திரைப்படங்களிலும், உப கதைகளிலும் மட்டும் நமது இராசாக்கள் பற்றியும், அவர்களுடைய சாதனைகள் பற்றியும் பேசி மகிழ்கிறோம்.

இலங்கைத் தீவின் கடைசி அரசனாக கண்டியில் இருந்து ஆட்சி செய்த ஸ்ரீவிக்கிரராஜசிங்கன் கோவாவிற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து ஆங்கிலேயரால் சுட்டுக் கொல்லப்பட்டான். இவன் சிங்களஇனத்தை சேர்ந்தவன் அல்லன். தமிழன் இது போலவே வன்னியில் இருந்து ஆட்சி செய்த பண்டாரவன்னியனும், யாழ்ப்பாணத்து சங்கிலியனும் ஐரோப்பியரால் கொல்லப்பட்டனர். தமிழகத்தில் பாளையக்காரன், வீரபாண்டியகட்டபொம்மன்கதையுடன் தமிழ்முடியின் கதை மறைந்து போகிறது. இவர்களுடைய வம்சங்களை சேர்ந்தவர்கள் ஒருசிலர் எஞ்சியிருக்கிறார்கள். சிறிவிக்கிரமராஜசிங்கனின் வம்சத்தில் வந்த ஒருவர் தமிழகத்தில் கூலிவேலை செய்வதாக அறியமுடிகிறது.

ஆனால், இன்றைய ஐரோப்பிய மன்னர்கள் கொண்டுள்ள பெருமையும், கௌரவமும் நமது தமிழ் மன்னரிடம் மிகப்பெரியளவில் இருந்துள்ளது. 15 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் ஆசியா வருவதற்கு முன்னரே இராஜராஜன் சோழன் மிகப்பெரிய தமிழ் சாம்ராஜ்ஜத்தைக் கட்டியிருந்தான். 10 ஆம்,11 ஆம் காலத்திலேயே மலேசியாவின் கூடாரத்திற்கு அப்பாலும் படையெடுத்து சென்று வெற்றி கொள்ளும் கடற்படையுடன் திகழந்தான். இந்தோனேசியா, அவுஸ்திரேலியா வரை சோழர்களின் பெருமையும், தாக்கமும் அரச பாரம்பரியத்தைக்கொண்ட அரசர்களாகவே இருந்து வந்துள்ளனர். தமிழ் மன்னர்களைப் போலவே அவர்களும் ஐரோப்பிய ஆதிக்கவாதிகளால் அழித்தொழிக்கப்பட்டார்கள்.

மன்னராட்சியும், அதனால் வரும் மானிட ஏற்றத்தாழ்வுகளும் நமக்கு அவசியமா?

வேண்டாம் மன்னராட்சி என்று இன்னொரு பக்கமாக நாம் வாதிடலாம். இது வேறொரு தலையங்கத்தில் பேசப்பட வேண்டிய விவகாரம்., இக்கட்டுரையின் கோணம் அதுவல்ல. இன்றுள்ள ஐரோப்பிய மன்னர்களுக்கு நாம் தாழ்ந்தவர்களுமல்லர், அவர்களிலும் பிற்பட்ட உலகமே தெரியாத பேதைகளுமல்லர் என்பதை முதலில் நாம் புரிய வேண்டும். ஐரோப்பியருடைய கலாசாரத்தை நாம் மதிக்கிறோம். அது போல நமது கலாசாரத்தையும், நமது மன்னர்களின் பெருமைகளையும் நாம் மீளாய்வு செய்து புது வலுப்பெற வேண்டும்.

நமது முடி நமக்கு முக்கியமானது! அது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேய ஆதிக்கவாதிகளால் அழிக்கப்பட்டாலும் அதன் பெருமை குன்றியதல்ல என்பதை நாம் நிறுவ வேண்டும். இரண்டாம் இராஜசிங்கனுக்கு ஒல்லாந்தர் எழுதிய கடிதங்களைப்படித்தால் ஒருஉண்மை தெரியவரும். ஒல்லாந்தர்கள் அவனைப் பல தடவைகள் மன்றாடி, கடவுளின் அவதாரம் என்று வர்ணிக்கும் அளவுக்குக் கீழிறங்கி கடிதம் எழுதியுள்ளார்கள்.

கி.செ.துரை

வீரம், மானம்,கொடை, கலைகளை மதிக்கும் பண்பு, நீதிக்காக உயிர்கொடுக்கும் துணிவு, அதிகாரத்திற்கு அடிபணியாத வீரம், கல்வித்திறன் இவைகளில் இன்றைய உலக சமுதாயத்திற்கு வழிகாட்டிய அறிஞர்களாக நமது தமிழ் மன்னர்களில் பலர் இருந்திருக்கின்றனர்.

நமது அரண்மனைகளின் புத்தாக்கம், முடியின் புத்துருவாக்கம், போர்த்துக்கேயர் வருவதற்கு முன்னர் நாம் இருந்த தனித்துவப் பெருமை யாவற்றையும் மறுபடியும் உருவாக்க முடியுமா?

அதற்காக இவர் தான் மன்னரின் வம்சம் என யாரோ ஒரு செயற்பாடற்றவரைக் கொண்டு வந்து முடியை உருவாக்க வேண்டிய அவசியமில்லை. இன்று நமக்கான விடுதலையைப் பெற்றுத்தருவோரை அவ்விடத்தில் வைத்துப் போற்றுவது எப்படி? இது குறித்து கருத்தியலை உருவாக்க முடியுமா? இது பற்றி ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

டென்மார்க் அரச குடும்பத் திருமணத்தை நாம் பாராட்டுவோம். நமது வேர்களை நாம் தேடுவதற்கான உந்து விசையை அது தந்திருப்பதால் அரச தம்பதியருக்கு நமது வாழ்த்துக்களை இன்னொரு தடவை கூறுவோம். நமது தேசியமும் சர்வதேச சமூகத்திற்கு இணையாக அமையும் என்பதையும் விரைவில் காண்போமாக.

# குப்பைகளை உரிய முறையில் அகற்றி சுகாதாரமான வாழ்வுக்கு வழிசமையுங்கள்

சுகாதாரம் என்பது நோய்களிலிருந்து மீட்சியடைதல் மாத்திரமல்ல. உடலில், உளவியல் மற்றும் சமூக ரீதியான பூரண திருப்தியை எய்தும் நிலைதான் '' சுகாதாரம்'' என்று சொல்லலாம். அவ்வாறாயின் நாம் உடலியல் , உளவியல் மற்றும்சமுகரீதியான அடிப்படையில் எம்மில் சுகாதாரத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட சகல இடங்களிலும் குப்பை கூழங்களை அகற்றும் பணி மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதைக் கண் கூடாகக் காணக்கூயதாக இருக்கிறது. இதற்குப் பொது மக்களின் முழுமையான ஒத்துழைப்பு இல்லாமையே பிரதான காரணமாகும். குறிப்பாக ஒவ்வொருவரும் தமது வளவுக்குள் சேரும் கழிவுகளை சுகாதாரமான முறையில் (எரித்தல், குழியில் புதைத்தல், செய்கைப் பசளை செய்தல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு) அகற்றிக் கொள்ளாது '' மற்றவன் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன'' என்ற நோக்கில் தமது சுயநலன்களை மட்டும் கருத்திற் கொண்டு செயற்படுகின்றனர்.

பொது இடங்களிலே குப்பை கூழங்ளைக் கொட்டுவோம் என்றால் அவ்விடம் குப்பைகளால் நிரம்பி விடுவதோடு மாத்திரம் நின்று விடாது. மனிதனுக்கு தீங்கு செய்யக் கூடிய பல விதமான உயிரினங்கள் அவ்விடத்தில் குடியேறி மென்மேலும் சுகாதாரத்திற்குக் கேடான நிலையை உருவாக்கிவிடும். மழை நீர்போன்றவைகளும் அவ்விடத்தில் தேங்கி நிற்கும் போது குப்பைகளுடன் கலந்து அப்பகுதியிலேயே நடமாட முடியாதவாறு துர்நாற்றம் வீச ஆரம்பிக்கும். அப்போது அப்பகுதியில் வாழும் குழந்தைகள் முதல் வயோதிபர் வரை அவ்வூர் வாசிகள் அனைவரும் பல்வேறு தொற்று நோய்களுக்கும் துன்பங்களுக்கும் உட்பட்டு அவதியுற நேரிடும் என்பதை மறந்து தமது மனம்போன போக்கில் செயற்படலாகாது.

நாம் செய்ய வேண்டியது என்ன?

✱ அசுத்தம் நம் வாழ்நாளையே சீரழித்து விடும். எனவே, சுற்றாடலை சுகாதாரத்திற்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

✱ குப்பை கூழங்களை கவனயீனமாகக் கண்ட கண்ட இடங்களில் எறியக் கூடாது. அவ்வாறு எறிவோமாயின் பல்வேறு ஊர்வளவில் தொல்லைகள் எம்மைச் சூழ்ந்து கொள்ளுவதுடன் எலிகள் , விலங்குகள் , ஈக்கள் , நுளம்புகள் போன்ற ன பெருகி எம்மத்தியில் பல்வேறு பயங்கரமான நோய்களை ஏற்படுத்திவிடும்.

✱ குப்பை கூழங்களைச் சேகரிப்பதற்காக மாநகர சபையின் வாகனங்கள் வரும் போது தாம் ஒவ்வொருவரும் பொலித்தீன் பைகளிலோ அல்லது வேறு ஏதாவது உறைகளிலோ சேகரித்து வைத்திருக்கும் குப்பைகளை அவர்களிடம் கையளித்து உதவுதல் அவசியம்.

✱ கடதாசிக் கழிவுகளை எரித்தும் ஏனைய எரியாத பொருட்களைப் புதைத்து விட வேண்டும். அல்லது மாநகரசபையின் கழிவு அகற்றம் வாகனங்களிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

✱ ஈரமான கழிவுப்பொருட்களை நன்கு ஆழத்தில் புதைத்தல் வேண்டும்.

✱ கழிவுப்பொருட்களைப் புதைக்கும் இடத்திற்கும்,கிணற்றிற்குமிடையே 15 மீற்றர் இடைவெளி இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

✱ அல்லது சரியான முறையில் கட்டப்பட்ட மூடியுள்ள குழிகளில் கழிவுப் பொருட் களைப் போடுதல் வேண்டும். இது வீட்டிற்கு மிகவும் நெருக்கமாக இருந்தாலும் பரவாயில்லை. எனினும் கிணற்றிலிருந்து கீழ் சரிவானபகுதியில் சுமார் 15 மீற்றர் தூரம் இருத்தல் வேண்டும். இந்தக்குழியைச் சுற்றிவர நீர் தேங்காத வண்ணம் மண் அமைத்தல் வேண்டும்.

இயற்கை கலப்பு உரம்(பசளை) தயாரித்தல் - இரண்டு குழி அல்லது நான்கு குழி முறையில் இதனைத் தயாரிக்க முடியும். மாநகரசபைப் பகுதியில் இம்முறை செயற்படுத்தப்படுவதில்லை. இம்முறை சுகாதாரத்திற்கு உகந்த, சிக்கனமான செயன்முறையாகும்.

✱ மிகவும் கடினமான பொருட்கள், போத்தல்கள், ரின்கள், இறைச்சி முள்ளுகள், தகரப் பாத்திரங்கள், பொலித்தீன்கள் போன்ற சுலபமாக உக்காத கழிவுகளைக்குழி களில் போடாது ஏனைய எல்லாப்பொருட்களையும்குழியிலிட்டுஇயற்கைப் பசளை யை உண் டாக் கலாம். சுலபமாக உக்காத பொருட்களினால் குழி விரைவாக நிறைந்து விடும்.எதிர்பார்த்த பலாபலன் கிட்டாது போகும். இயற்கைப்பசளை தயாரித்தல், பூச் செடிகள், குரோட்டன்கள்செழித்துவளரபணம் கொடுத்து பசளை வாங்கவேண்டிய அவசியம் ஏற்படாது. அனைத்திற்கும் எம்மால் தயாரிக்கப்படும் இயற்கைப்பசளையே பெரும்பலாபலனைத்தரவல்லது.

க. ஆ. ஜீவநாதன்
பிரதமப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
யாழ். மாநகரசபை

உலகில் வாழக்கூடியோர் அனைவரும் ஏதோ ஒரு வகையில் ஒவ்வொரு செயல்களிலும் சிரமத்துடனேயே செயற்படுகின்றார்கள் என்பதை நாம் அறிவோம். எனவே, எவ்விடத்திலும் மற்றவர்களின் உதவியை நம்பி வாழாது தாமே தமது வேலைகளை இயன்றளவு திருப்தியாகச் செய்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

எனவே, குப்பைகூழங்களை அகற்றும் விடயத்தில் ஏதாவது உங்கள் வசதிக்கேற்ப சிறந்த முறையொன்றைத் தேர்ந்தெடுத்து செயற்படுத்துங்கள். அப்போது எம்மத்தியில் தொற்றுநோய்கள்,சுகாதாரப் பிரச்சினைகள் குறையும்.சுகாதார வாழ்வுநம்மத்தியில் ஏற்படும்; சுகமாக வாழலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பணப்பரிமாற்றலுக்கு நேசக் கரம் நீட்டும் வெஸ்ரேன் யூனியன்

வெஸ்டன் யூனியன் – உலகளாவிய ரீதியில் பணத்தை அனுப்புவதற்கும் பெறுவதற்குமான வழி

### நம்பிக்கையானது

ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான மக்கள் வெஸ்டன் யூனியன் மூலம் தமது குடும்பங்களுக்குப் பணப் பரிமாற்றல் செய்கின்றனர்.

**WESTERN UNION**

ஒவ்வொரு பணப் பரிமாற்றலும் எமது உலகத்தரத்திலான பாதுகாப்பு முறையின் மூலம் பாதுகாக்கப்படுகின்றது. நீங்கள் அனுப்பும் பணம் குறிப்பிட்ட நபருக்கு விரைவாக, முழுமையாக வழங்கப்பட்டது என்பதை வெஸ்டன் யூனியன் உங்களுக்கு உறுதிப்படுத்தும்.

### விரைவானது

நீங்கள் பணத்தை அனுப்பி சில நிமிடங்களிலேயே அது உரியவருக்குக் கிடைத்துவிடும். இதற்காக வெஸ்டன் யூனியன் நவீன மின்னியல் தொழில்நுட்பத்தையும், 198க்கும் அதிகமான நாடுகளில் உலளாவிய கணினித் தொடரமைப்பையும் பயன்படுத்துகிறது.

### வசதியானது

வெஸ்டன் யூனியன் முகவர் நிலையங்கள் உலகெங்கும் உங்களுக்கு வசதியான இடங்களான அஞ்சல் அலுவலகங்கள், சில்லறை விற்பனை நிலையங்கள், சிறப்புச் சந்தைகள், ரயில்நிலையங்கள், விமான நிலையங்கள் ஆகியவற்றிலும் ஏனைய பல இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. 90,000க்கும் அதிகமான முகவர் நிலையங்கள் வெஸ்டன் யூனியனை உலகில் மிகப்பெரிய பணப் பரிமாற்றல் தொடராகச் செய்கின்றன.

### பணத்தை அனுப்புவதற்கு

1. அருகிலுள்ள வெஸ்டன் யூனியன் நிலையத்தின் மூலம் எவரும் பணம் அனுப்பலாம். வெஸ்டன் யூனியன் நிலையத்திற்குச் சென்று பணம் அனுப்பவதற்கான படிவத்தைப் பெற்று நிரப்பிப் படிவத்தையும் அவர்களிடம் கையளிக்கவும்.

2. பணத்தைப் பெறுபவருக்கு நீங்கள் பணம் அனுப்பியுள்ள விடயத்தைத் தெரிவிக்கவும். அவர் உலகின் எப்பாகத்தில் இருப்பினும் நீங்கள் அனுப்பிய பணம் சில நிமிடங்களில் பாதுகாப்பாக அவருக்குக் கிடைத்துவிடும். சகல அந்நியச் செலாவணி பணப்பரிமாற்றல்களும் இலங்கை மத்திய வங்கியின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவையாகும்.

3. கணினி மூலம் குறிப்பிட்ட பணப் பரிமாற்றலை உறுதிப்படுத்தி, உரியவருக்கு உடனடியாகப் பணத்தை வழங்கும்.

### பணத்தைப் பெறுவதற்கு

1. பணத்தை அனுப்பியவர், பணம் அனுப்பியது பற்றியும் அனுப்பியுள்ள தொகை பற்றியும் உங்களுக்கு அறிவிப்பார்.

2. அத்தகவல் கிடைத்ததும் அருகிலுள்ள வெஸ்ரேன் யூனியன் அலுவலகத்துக்குச் சென்று பணம் பெறுவதற்கான படிவத்தை நிரப்பவும், படிவத்தில் அனுப்பியவர் பெயர், நாடு, பணத் தொகை என்பவற்றைத் தவறாமல் குறிப்பிடவும்.

3. அவர்கள் கணினி மூலம் குறிப்பிட்ட பணப் பரிமாற்றலை உறுதிப்படுத்தி உங்களுக்கு உடனடியாகப் பணத்தை வழங்குவார்கள்.










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
01-08-2004

# இரண்டு சமாதானங்கள் ஒன்றாக முடியாத

போரை மக்கள் விரும்பவில்லை. மக்கள் இரத்தமும் கண்ணீரும் இழப்புக்களும் விளைவிக்கும் போர் மீண்டும் வெடிப்பதை ஒருபோதுமே விரும்பவில்லை. இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் எவ்வாறேனும் அரசியல் வழிமுறைகளுக்கு ஊடாக - பேச்சுகளினூடாக - இடைக்காலத் தீர்வையோ நிரந்தரத் தீர்வையோ காணவேண்டும் என்பதே மக்களின் இடையறாத பிரார்த்தனையாக உள்ளது. நோர்வேயின் சலிப்பும் எச்சரிக்கையும் மக்களை மிகவும் துயரப்படுத்துகின்றன.

இலங்கைத் தீவின் தமிழ் நகரங்களிலோ தமிழ்க்கிராமங்களிலோ அன்றேல் சிங்கள மக்களது நகரங்களிலோ கிராமங்களிலோ வீதியால் பயணிக்கும் சாதாரண பொதுமகன் ஒருவரிடம் 'போரா? சமாதானமா?' தங்களது விருப்புக்குரியது என்றொரு கேள்வியைக் கேட்டால் அனைவரிடமும் இருந்து வரும் விடை சமாதானம் என்பதாகவே இருக்கும். யாராவது ஒருவர் அல்லது இருவர் போரை விரும்புவதாகக் கூறுகிறார் எனில் அவர் நிச்சயம் உளநலம் குன்றியவராக இருப்பார்.

போரைச் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் வெறுக்கிறார்கள் என்பது உண்மையிலும் உண்மை. அச்சங்களும் பீதிகளும் அழிவுகளும் ஓலங்களும் நிறைந்த கொடும்போர் தம்மைச் சூழ்வதை உலகின் எந்த மனித சமூகமும் விரும்பியதில்லை; விரும்பவில்லை. அதேபோல் இங்கும் எவரும் விரும்பவில்லை.

ஆனால், சமூகவியல் ரீதியில் சிங்கள மக்கள் விரும்புகின்ற சமாதானத்துக்கும் தமிழ் மக்கள் விரும்புகின்ற சமாதானத்துக்கும் இடையில் மிகப்பாரிய வேறுபாடு உள்ளது.

**சிங்கள மக்கள் விரும்பும் சமாதானம்?**

தற்கொலைத்தாக்குதல்கள், குண்டுவெடிப்புகள் போன்றனவும் ஏனைய போராட்டச் செயற்பாடுகளும் தங்களது நகரங்களிலோ கிராமங்களிலோ இடம்பெறக்கூடாது என்று சிங்கள மக்கள் விரும்புகிறார்கள். வடக்கு-கிழக்கிலும் தீவின் ஏனைய பகுதிகளிலும் நிலைகொண்டுள்ள பொலீஸ் மற்றும் முப்படைகளிலுமுள்ள தமது மகன்மாரோ, மகள்மாரோ அல்லது கணவன்மாரோ, காதலரோ போரில் மடிவதைச் சிங்கள மக்கள் எள்ளளவும் விரும்பவில்லை. தற்கொலைத் தாக்குதல்கள், குண்டுவெடிப்புகள், படையினரின் சாவுகள் என்பன நிகழாமலிருப்பதற்கும் தாங்கள் தமது அரசியல், பொருளாதார, கலாசார வாழ்வை நிம்மதியாகக் கட்டியெழுப்பி வளர்ப்பதற்கும் வாழ்க்கையைச் சமாதானமாக ரசித்து, மகிழ்ந்து களியாட்ட விழாக்களிலும் பொழுதுபோக்கு நிகழ்வுகளிலும் கடற்கரைகளிலும் பூங்காக்களிலும் பெற்றோர், பிள்ளைகளாக, காதலர்-காதலிகளாக அளைந்தும் குழைந்தும் அன்பையும் காதலையும் சுவைத்து வாழ்வதற்கும் சிங்கள மக்கள் விரும்புகிறார்கள். இவற்றிற்குச் சகல வழிகளிலும் முழுமையான ஒத்துழைப்பும் துணையும் நல்கக் கூடிய ஒரு சமாதானத்தையே சிங்கள சமூகம் விரும்புகிறது.



தமிழ் இனத்தின் உரிமைக் கோரிக்கைகளால் எழக்கூடிய போர்ச்சூழலையோ அதன் அதிர்வுகள் தம்மைப் பாதிப்பதையோ விரும்பாத சிங்கள மக்கள் போர் நிறுத்தப்பட்டால் போதும் என்ற அளவுடன் மட்டுமே நின்றுவிடுகின்றனர்.

**தமிழ் மக்கள் அடையத் துடிக்கும் சமாதானம்!**

தமிழினத்தின் சமாதானக் கோரிக்கை என்பது விடுதலைப் போரின் நல்விளைவையும் அதன் பயனையும் பெறுதல் என்ற அடிப்படையில் உள்ளது. தமிழ் மக்களைப் பேச்சு மேசையில் பிரதிநிதித்துவம் செய்கின்ற விடுதலைப் புலிகளும் அதனையே வலியுறுத்துகின்றனர்.

போர் இருபது வருடங்கள் நடந்துள்ளது. வடக்குக் கிழக்கின் உட்கட்டுமானங்கள் பெரும்பாலும் அழிந்துள்ளன; நிலம் பயன்பாடற்றுப்போனது; மனித உழைப்பு இழக்கப்பட்டது; மூலதன வாய்ப்புகள் சாத்தியப்படவில்லை; முயற்சியாண்மைத் துறைகள் மங்கி மறைந்தன சேவைத்துறைகள், உற்பத்தித் துறைகள் அனைத்தும் தமிழர் பாரம்பரியப் பிரதேசத்தில் குன்றிப்போய்விட்டன. அரச நிறுவனங்களில் திறமையீனம், ஊழல், மோசடி, சீர்கேடுகள் நிறைந்துவிட்டன. போர்க்கால அவலச் சூழலில் மக்களுக்கான அடிப்படைச் சேவைகளையும் நிவாரண வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுப்பதற்காக நிலைகொண்டுள்ள வெளிநாட்டு அரச நிறுவீனங்களுக்குள்ளும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களுக்குள்ளும் உள்ளூர் பிரகிருதிகள் நுழைந்து நின்றுகொண்டு 'ஊழல் கூத்து' ஆடுகின்றன. ஒட்டுமொத்தத்தில் வடக்கு - கிழக்கு தமிழ்ச் சமூகத்தை போர், குட்டை நாயாக்கி விட்டுள்ளது. அந்தக் குட்டை நாயில் தான் ஊழல் மூட்டைப் பூச்சிகள் இரத்தம் குடிக்கின்றன. இவ்வாறான நிலைமையைச் சீர்செய்து புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், அபிவிருத்தி என்பவற்றை முன்னெடுக்க இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அமைக்கத் தமிழ் மக்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்க சிங்கள மக்களும் அவர்களது அரசியல் வாதிகளும் தயாரா? போரின் அதிர்வு சிங்களப்பகுதிகளில் ஏற்படாமல் விட்டால் போதும் என்ற எதிர்பார்ப்புடன்கூடிய சமாதானம் சிங்கள மக்களுக்கும் அவர்களது தலைவர்களுக்கும் திருப்தியைக் கொடுக்கலாம். ஆனால், தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் சமாதானம் அவர்களது அடிப்படை வாழ்வு ஆதாரங்களை புனரமைப்பதற்கான நிர்வாக அலகுக் கோரிக்கைக்குரியது.



**- டன்ஸ்ரன் லூயிஸ் -**

இக்கட்டத்திலேயே சிங்கள சமூகமும், தமிழ்ச் சமூகமும் எதிர்பார்க்கும் சமாதானத்தின் உள்கருத்துகளுக்கிடையில் தீவிர வேறுபாடுகள் உள்ளமை வெளிப்படையாகத் தெரிகிறது.

**சிங்களவரின் ஜனநாயகத் திரிபுகள்!**

கடந்த 13ஆவது நாடாளுமன்றத் தேர்தலிலும் சரி, அண்மையில் நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தல்களிலும் சரி சிங்கள மக்கள் இனப்பிரச்சினை விவகாரத்தில் அக்கறை காட்டத் தவறியுள்ளனர் என்றே கூறலாம். அவர்கள் தமது பிரதேசங்களின் விவசாயம், மீன்பிடி போன்ற தொழில் பிரச்சினைகளுக்கும் நுகர்வுப் பொருள்களின் விலைவாசி ஏற்றங்கள், வேலைவாய்ப்புகள் போன்ற பிரச்சினைகளுக்குமே முன்னுரிமை கொடுத்துள்ளனர். போர் ஒன்று உக்கிரமாக நடைபெற்ற வேளையில் அதன் கொடும் பாதிப்புகளில் இருந்து விடுபட ஆதங்கப்பட்டு -

(IV ஆம் பக்கம் பார்க்க)

# டில்லி - கொழும்பு அரசியல் உறவு கிரிக்கெட் வரை எதிரொலிக்கிறதா?

அரசியல் அரங்கில் இந்தியாவும் இலங்கையும் நெருக்கமாகி வருகின்ற பின்னணியில் இலங்கை - இந்தியக் கிரிக்கெட் விளையாட்டிலும் இந்த நெருக்கம் எதிரொலித்திருக்கின்றதா?

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற ஆட்டத்தின் முடிவுகளைக் கண்டு பலரும் இவ்வாறு எண்ணத் தலைப்பட்டிருக்கின்றனர்.




அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை; நிரந்தரப் பகைவனும் இல்லை என்று கூறுவார்கள். அது நூற்றுக்கு நூறு வீதம் உண்மை என்பது இந்திய - இலங்கை அரசியலில் மாத்திரமன்றி கிரிக்கெட் விளையாட்டிலும் நன்கு புலப்படுகிறது.

இரு நாடுகளிலும் ஆட்சியில் முன்னர் இருந்த அரசுகள் அகற்றப்பட்டுப் புதிய அரசுகள் பதவியேற்றுக் கொண்டதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையே சீரற்றிருந்த அரசியல் உறவுகள் தற்போது பலப்பட்டு வருகின்றன.

இந்த அரசியல் உறவின் வெளிப்பாடு கிரிக்கெட் விளையாட்டிலும் புலப்படுவதை அவதானிக்கமுடிகிறது.

அரசியல் ஒரு சித்து விளையாட்டு என்று சொல்வார்கள். ஆனால், அரசியல் கிரிக்கெட் விளையாட்டிலும் கலந்துவிட்டது. தற்பொழுது கொழும்பில் நடைபெற்று வருகின்ற ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இலங்கை - இந்திய அணிகள் மட்டுமன்றி பாகிஸ்தான் அணியும் பங்குபற்றி வருகின்றது.

ஆனாலும், இந்திய - இலங்கை அணிகளுக்கு இடையிலான ஆட்டங்களில் அரசியலும் கலந்து விட்டதைக் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இரு அணிகளுக்கும் இடையிலான ஆட்டம் நன்கு வெளிப்படுத்தியது. அந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றால் மட்டுமே இறுதி ஆட்டத்தில் விளையாட முடியும் என்ற நிலை இருந்தது இந்திய அணிக்கு. ஏற்கனவே இத்தொடரில் ஒருதடவை இலங்கை அணியிடம் தோல்வியுற்ற இந்திய அணி மீண்டும் இலங்கை அணியிடம் தோல்வியுற்றால் அது பெரும் அவமானம் மட்டுமன்றி அரசியல் கலப்புள்ளதாகவும் நோக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

இவ்வாறான நிலையிலேயே கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் ஒருவாறு 4 ஓட்டங்களால் இலங்கை அணியை வெற்றியீட்டித் தமது அணியின் மானத்தைக் காப்பாற்றியதுடன், தமது நாட்டின் கௌரவத்தையும் காப்பாற்றியிருக்கிறது இந்திய அணி. இலங்கை அணியில் முக்கியமான ஒருசில வீரர்கள் இந்த ஆட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்பது இதுவிடயத்தில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இலங்கை அரசைப் பொறுத்தவரையில் இந்திய அரசின் தயவு தேவையாக உள்ளது. புதிய அரசு பதவியேற்ற இந்த மூன்று மாதகாலத்திற்குள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் இந்தியா சென்று அங்குள்ள அரசியல் பிரமுகர்கள் பலருடனும் பேச்சுக்களை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அந்தப் பிரமுகர்கள் இலங்கைப் பிரதமருக்கும் வெளிவிவகார அமைச்சருக்கும் பல உறுதிமொழிகளை வழங்கியிருந்தனர். இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று விரைவில் கைச்சாத்தாகவுள்ளது.

இதற்கு நன்றியும் நல்லெண்ணமும் நல்குவதாக அன்றைய கிரிக்தெட் ஆட்டம் அமைந்திருந்தது. இரு அணி வீரர்களின் பட்டியலைப் பார்த்தவுடனேயே கிரிக்கெட் ரசிகர்கள் பலர் ஆரூடம் கூறிவிட்டனர் இந்திய அணிக்கே வெற்றி என்று. அதை நிரூபிப்பது போலவே இலங்கை அணி வீரர்களின் ஆட்டமும் அமைந்திருந்தது.

டில்லி - கொழும்பு அரசியல் உறவு கிரிக்கெட் வரை நெருங்கியிருப்பது கூர்மையாக அவதானிக்கப்பட வேண்டிய விவகாரமே!

**- வைஷாலி -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சுவாமியை தோளில் ஏற்றி உலாவரும் அமெரிக்க இந்துக்கள்.


.....எங்களின் சிறப்பு எங்களுக்குத் தெரியாது என்பது உண்மைதான். தமிழ் மொழியின் சிறப்பைப் பத்து மொழி கற்ற பாரதி சொன்னபோது தான் நமக்குத் தெரிந்தது. 'திரை கடலோடி திரவியம் தேடப் போய்' நம்மவர்கள் பெருந்திரவியமான எமது கலாசாரப் பண்பைத் தொலைத்ததுதான் மிச்சம். ஆனால், நாங்கள் தொலைத்ததை மற்றவர்கள் எடுத்துக் கொண்டபோது தான் அதன் பெறுமதி எமக்குச் சற்றாவது புரிய வருகிறது. அந்தவகைத் தேடலில் கிடைத்த ஒரு செய்திதான் ஹவாய் தீவுகளில் வாழும் இந்துத் தமிழ் கலாசாரம் என்பது. அது பற்றி விவரிப்பதே இந்தக் கட்டுரை.

# எப்பொருள்... ...மெய்ப்பொருள்...


ஹவாய் தீவுகளில் வைத்து பூசிக்கப்படும் நடராஜ மூர்த்தம்.

'கிறீச்' 'கிறீச்' என அச்சாணிச் சில்லுடன் மோதிச் சத்தமிட்டு நகர்ந்து கொண்டிருக்கிறது அந்த மாட்டுவண்டி. அந்தப் பயணம் அளவெட்டியில் இருந்து கொழும்புத்துறை நோக்கியதாக இருக்கிறது. போகும் வழியில் நல்லூரான் கோயிலைத் தரிசிப்பதும் அந்த வண்டியில் இருந்தவர்களது ஒரு திட்டமாக இருந்தது. வண்டியினுள்ளே உயர்ந்த. அழகான தீட்சண்ணியமான பார்வை கொண்ட அந்த ஆங்கில இளைஞன் நம் நாட்டு மனிதனொருவரிடம் சுவாரஸ்யமாக உரையாடிக் கொண்டிருக்கிறான். வண்டி நல்லூரான் கோயிலை நெருங்குகிறது. இறங்கிய இருவரும் திருக்கோயிலை தரிசனம் செய்கிறார்கள். மனதில் ஆன்ம நிறைவுடன் மீண்டும் தொடர்கிறது பயணம்.

அது 1949ஆம் ஆண்டின் ஒரு மதியப் பொழுது. கொழும்புத்துறையிலுள்ள அந்த வீட்டின் படலை திறக்கப்படுகிறது. வழமையாக எல்லோரையும் கேட்கின்ற


காயத்திரியும் அவரது குடும்பமும் (ஹாவாயிலுள்ள வெள்ளையின இந்துத் தமிழ்க் குடும்பமொன்று)

அதே பாணியில் 'யாரடா அது?' அதட்டுகிறது அந்தக் குரல். அந்தக் குரலுக்குரியவர் வேறு யாருமல்லர் யாழ்ப்பாணத்துச் சித்தர் பரம்பரையின் மகுடமாகத் திகழும் யோகர் சுவாமிகளே அவர்.

பவ்யமாக உள்ளே நுழையும் அந்த நெடிய ஆங்கில இளைஞர் அந்த மகாமுனியின் பாதங்களைப் பணிகிறார். கையினால் அந்த இளைஞரை அரவணைத்தபடி 'Did you see me anywhere?' (என்னை எங்கேயாவது கண்டாயா?) என்று கேட்டார் சுவாமிகள். Yes at the Nallur temple (நல்லூர் கோயிலடியில் உங்களைக் கண்டேன்) என்று பதில் பிறக்கிறது அந்த ஆங்கில இளைஞரிடமிருந்து. சுற்றியிருந்த அனைவரும் ஆச்சரியத்தில் மூழ்குகின்றனர். தன்னைத் தேடி வந்த பக்தனுக்கு அவர் வரும் வழியிலேயே காட்சி கொடுத்துத் தன் சீடனாக ஏற்று 'உன் குரல் உலகெங்கும் ஒலிக்கும்' என்று ஆசியும் அருளுமளித்தார் யோகர் சுவாமிகள்.

சுவாமிகளிடம் அருள் பெற்ற அந்த ஆங்கில இளைஞர் வேறுயாருமில்லை. அளவெட்டி மண்ணில் துறவியாகி அமெரிக்காவில் மறைபரப்பி மறைந்த சுவாமிகள் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளே ஆவர்.

அமெரிக்காவின் ஹவாய்த் தீவுகள் இன்று நால்வேதங்களும் ஒலிக்கின்ற புனித பூமியாக மாறி இருகின்றது. 1972இல் சுப்பிரமுனிய சுவாமிகள் ஹவாய் தீவுகளில் தனது ஆச்சிரமத்தைத் தொடங்கிய போது அந்தச் சூழல் உலகில் இருந்து ஒதுக்கப்பட்ட ஒரு பகுதியாகவே இருந்தது. இன்று நாதமும் வேதமும் ஒலிக்கும் நல்லுலகமொன்று அங்கே உருவாகியிருக்கிறது. அந்தச் சூழல் முழுவதும் இன்று தமிழ் மணமும் இந்து கலாசாரமும் பேரெழில் கொண்டு மிளிர்கிறது. ஹவாயிலுள்ள சுவாமிகளின் ஆச்சிரமத்தைச் சூழ ஐநூறிற்கும் மேற்பட்ட இந்துக் குடும்பங்கள் வாழ்கின்றன. ஆனால். அதில் ஒரு குடும்பம் கூட இந்துத்துவ வம்சாவளியினர் அல்லர் என்பதும் அனைத்துக் குடும்பங்களுமே அமெரிக்க பூர்வீக ஆங்கிலக் குடிகள் என்பதும் ஆச்சரியமூட்டும் செய்தி.

இந்தக் குடும்பங்கள் அனைத்தும் பிறப்பால் ஆங்கில அமெரிக்கர்களாக இருந்தபோதும் இன்று தமிழ் இந்துக்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அருகிலுள்ள படத்தில் நீங்கள் காணும் குடும்பம் அதற்கு ஓர் உதாரணம். படத்தில் காணும் பெண்மணியின் இயற்பெயர் லீசி. ஆனால். அவரின் இன்றைய பெயர் காயத்ரி. அருகிலுள்ள அவரது கணவர் பெயர் தேவராஜா. பிள்ளைகளுக்கும் தமிழ்ப்பெயர்களையே சூட்டியுள்ளனர். இப்படிப் பல நூறு குடும்பங்களும் இங்கு ஓர் இந்து சாம்ராஜ்யத்தை அமைத்து வாழ்கின்றன. பண்ணிசை. பரதம். பஞ்சபுராணம். தோத்திரம். சாத்திரம் அனைத்தும் இவர்களுக்கு அத்துப்படி. முறைப்படி பதிகங்களை பண்ணோடு பாடவும். வேதங்களை ஓதவும் இங்குள்ள சிறார்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்கென இந்தியாவிலிருந்து வல்லுனர்கள் அங்கு வரவழைக்கப்பட்டு பயிற்சிகள் நடைபெறுகின்றன. சுப்பிரமுனிய சுவாமிகள் அமைத்த ஆச்சிரமத்தில் இதற்கான விசேட பாடசாலை ஒன்று இயங்கி வருகிறது. இதைவிட சுமார் இருபத்தைந்து கோடி ரூபா செலவில் இங்குள்ள சிவன் ஆலயம் தற்போது பெருப்பிக்கப்பட்டு வருகிறது. இராஜகோபுரங்களை நிர்மாணிக்கவும் சிற்பங்களை செதுக்கவும் ஒரு சிற்பியர் படையே இந்தியாவிலிருந்து அங்கு சென்று பணிகளை மேற்கொண்டு வருகிறது. இங்கு பிரதிஷ்டை செய்யப்படவுள்ள லிங்கமூர்த்தி வடிவம் இந்தியாவில் வடிவமைக்கப்பட்டு அங்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மார்கழி மாதத்தில் வாயிலில் கோலமிடல் என்பது சைவமும் தமிழும் தழைத்தோங்குவதாகக் கூறப்படும் யாழ்.மண்ணில் இன்று மறைந்து போய்விட்ட ஒரு மரபு. ஆனால். அந்த ஆங்கிலப் பெண்கள் தங்கள் வீட்டுமுற்றங்களை விதம் விதமான கோலங்களால் அலங்கரித்து ஆனந்தம் கொள்கின்றனர். சமய தினங்கள். ஆசார


சுப்பிரமுனிய சுவாமிகள்


நிகழ்வுகள். சடங்குகள் என்பவற்றின் போது இந்துகலாசார உடையணிவதை இவர்கள் கட்டாயமாகக் கடைப்பிடிக்கிறார்கள்.

தாலி கட்டும் நேரம்கூட ஜீன்ஸ். கோட் சேட் அணிவதில் நம்நாட்டு மாப்பிள்ளைமார் அதிக ஆர்வம் காட்டுகின்ற நிலையில். அவர்களோ பட்டுவேட்டி. கூறை அணிந்து. தாலிகட்டி திருமணச் சடங்குகளை நடத்துகிறார்கள். இந்துப் பாரம்பரியத்தின்படியே அம்மி மிதித்து. அருந்ததி பார்த்து ஏன் பூப்பனித நீராட்டு நிகழ்வுகளைக்கூட நடத்துகிறார்கள் என்றால் பாருங்களேன்.

1927-01-05 இல் பிறந்த ஹொபேர்ட் ஹொான்சன் ஒரு பிரபல ஆங்கில பைலா நடனக்காரர். அத்தனை சுகபோகங்களையும் அனுபவித்து வாழக்கூடிய குடும்பத்தில் பிறந்தவர். ஒரு நடன நிகழ்ச்சிக்காக 1949இல் கொழும்புக்குக்கு வந்தபோது அளவெட்டி கந்தையாச் செட்டியாருடன் யாழ்ப்பாணம் வந்தார். வந்த இடத்தில் சுயமாகவே உள்ளுணர்வால் உந்தப்பட்டு யோகர் சுவாமிகளைச் சந்தித்து அவரது சீடரானவர். ஆன்மீகம் அவரை ஆட்கொண்டது. அருள் மறை பரப்பும் துறவியானார். அளவெட்டியில் தொடங்கிய அவரது பணி ஹவாய் வரை அகன்று பரந்தது. இன்று சுவாமிகள் மறைந்துவிட்டபோதும் சுவாமிகளின் சமய மடங்கள் மொறிசியஸ். பிஜி. ஜேர்மன். இந்தியா போன்ற நாடுகளிலும் செயற்பட்டு வருகின்றன. வேரூன்றி விழுதெறிந்து எம் பரம்பரை வாழும் மண்ணில் நெறி பிறழ்வுகள். ஆனால். கடல் கடந்த ஹவாயில் உருவாகும் புதிய தமிழ் உறவுகளோ...! விந்தையாக இருக்கிறதல்லவா?

சமீபத்தில் ஹவாயிலிருந்து அளவெட்டிக்கு ஆங்கிலக் குடும்பம் ஒன்று கடிதம் எழுதியிருந்தது. அதில் அவர்கள் Vanakkam Subramaniam (வணக்கம் சுப்பிரமணியம்) என்றே ஆரம்பித்திருந்தார்கள். நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பது 'See you' 'Good Night' 'Bye Bye' தேவையா இது. நம்பெருமை நாமுரைக்காது விட்டால் யாருரைப்பது?

சமீபத்தில் சுவிஸிலிருந்து வந்த ஒரு குடும்பத்தைச் சந்திக்கக் கிடைத்தது. அரை ரவுசருடன் ஒரு ஆண்மகன் காதில் ஒரு கடுக்கன். மன்னிக்கவும் ஒரு வளையம். அவருக்கு பின்னால் நாலு பெண்கள் கறுப்பு நிறத் தோலுக்குப் பொருந்தாத நிறத்தில் லிப்ஸ்டிக் அடித்த உதடுகள். கழுத்திலிருந்து ஒரு அடி கீழிறங்கிய ரீ - சேட்டுக்கள டைட் பாண்டுகள் ஆட்களை அறிமுகப்படுத்திக் கொண்ட போது பிள்ளைகளிடம் உங்கள் பெயர் என்ன? என்று கேட்டேன். 'எங்கட பில்லைகளுக்கு டமில் தெரியாது' என்று தோளை அசைத்தபடி ஆங்கிலேயர் பாணியில் கூறினார் அந்தக் குடும்பத் தலைவர். What a Sweet Message? என்று கூறி வழியனுப்பி வைத்துவிட்டு யோசித்தபோது


காதில் பூ, கழுத்தில் உருத்திராட்ச மாலை - கலாசாரம் விதைக்கப்படுகிறது -

தலைக்குள் என்னவோ செய்தது.

தமிழனுக்கென்றொரு நாடு இல்லை என்று தானே போரைத் தொடங்கினோம். போர் முடியும்போது மொழியும் இல்லாமல் போய் விடுமோ?

**ஆர்.மார்க் அன்ரனி**

திரை கடல் ஓடித் திரவியம் தேடத்தான் வேண்டும். ஆனால் கண்ட குப்பைகளையும் நக்கிக்கொண்டு நாட்டுக்கு வரத் தமிழன் என்ன நாயா? அல்லது "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு" என எழுதிய தமிழ்ப் பெரும் புலவன் வள்ளுவன் வழிவந்த சேயா? கால தேவியே உன் பதிலுக்காய்க் காத்திருக்கிறோம் இத்தகைய நிலைகண்டு தான் தமிழ் விரைவாகச் செத்துவிடும் என்று சொன்னார்களோ என்னவோ... ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நம் அக்கம் பக்கம் எங்குமே

# உயிருள்ள நூல் நிலையங்கள்

வெளிநாடுகளில் உள்ள தமிழர்களில் நிறையப் பேர் புத்தகங்களைப் படிக்க நேரமில்லையென்று கூறுகிறார்கள். நாடு முழுவதிலும் நூல் நிலையங்கள் இருந்தும் அவற்றைப் பாவனைப் படுத்துவோர் எண்ணிக்கை நம்மில் குறைவு அல்லது மிகக்குறைவு என்று கூறலாம். இதுபற்றித் தொடர்ந்து பேசுவதால் யாதொரு பயனும் இல்லை. இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு அவசியம். இதனால்தான் நம் அருகில் வாழும் பல்லாயிரக் கணக்கான உயிருள்ள நூல்களையும் அந்த நூல்களால் அறியக்கூடிய விடயங்களையும் அடையாளம் காட்ட முனைகிறது இக்கட்டுரை.

நம் அருகில் வாழ்வோரும் நம்மோடு பழகக் கிடைப்போரும் காலத்தினால் இறைவன் அனுப்பி வைத்திருக்கும் நூல்கள் என்று முதலில் நாம் உணர வேண்டும். இவர்கள் எப்படி வாழ்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்பதையெல்லாம் கூர்ந்து அவதானித்தால் இவர்களைப்போல அரிய நூல்களை நூல் நிலையங்களில் பெற முடியாது என்பதை உணர்வீர்கள்.

படித்தவர், படிக்காதவர், வயோதிபர், இளைஞர், குழந்தைகள், யுவதிகள் என்று எண்ணற்ற மனிதப் புத்தகங்களை உருவகப்படுத்தி நம் அருகில் வைத்திருக்கிறான் இறைவன். அந்த மனிதர்களை உற்று அவதானியுங்கள் அவர்களில் இருந்து கற்றுத் தெரியுங்கள் என்பது இறைவன் தரும் செய்தி.

ஒவ்வொரு மனிதனிலும் நாம் ஒவ்வொரு பாடங்களைப் படிக்கலாம், ஒன்றுபோல மற்றையது இருப்பதில்லை. தற்போது வேறொரு நாட்டில் வாழும் நானறிந்த எழுத்தாள நண்பர் ஒருவர் நுரையீரலில் பாதிப்பு ஏற்பட்டு பெருநோய்வாய்ப் பட்டுள்ளார். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஒருநாள் அவர் ஆழமான மதுபோதையில் இருந்தபோது அவருடன் பேசினேன். அப்போது அவர் சொன்னார் குடிப்பவனும் சாகிறான்; குடிக்காதவனும் சாகிறான்; இதுபற்றி தான் அலட்டிக் கொள்வதில்லை என்றார். இப்போது அவர் குடித்த மதுதான் சிறிது சிறிதாகத் தேங்கி அவரைப் பிடித்திருக்கிறது. இதோ நான் குடிப்பதை இப்போது நிறுத்திவிட்டேன். ஆனால், நோய்தான் என்னைவிட மறுக்கிறதே என்று பத்து வருடங்களின் பின்னர் கலங்கினார். அந்த எழுத்தாளர் எழுதிய புத்தகங்களைவிட அவர்தான் சிறந்த புத்தகம் என்பதை ஒரு பத்தாண்டு அவதானிப்பில் உணர்ந்தேன்.

சரி இவரில் இருந்து படிக்கும் பாடம் என்ன?

'அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்' என்று ஒரு பழமொழி இருக்கிறது. இந்தப் பழமொழியில் உள்ள 'நின்றறுக்கும்' என்ற சொல்லின் பொருளைத் தன்னை அழித்து விளக்கிய அரிய புத்தகம்தான் அந்த எழுத்தாளர். தினசரி இன்பத்திற்காகக் குடிக்கும் மதுவின் நுண்கிருமிகள் அணு அணுவாகத் தேங்கி, குவியலாக வளர்ந்து இன்று அவருடைய ஜீவநாடியான நுரையீரலையே நின்றறுத்துவிட்டன. தெய்வம் எங்கேயென்று தேடி அலைவோர்க்கு நின்றறுக்கும் அருவமான நகர்வுதான் தெய்வம் என்பதை விளக்க இறைவன் அனுப்பிய புத்தகம் என்றும் அவரைக் கூறலாம்.

## அவற்றிலிருந்து படிக்கலாம் ஏராளம்

இனி இன்னொரு உதாரணத்தைப் பார்ப்போம். ஒரு நண்பரின் பெயரைக்கூறி, அவர் நமக்கெதிரான கருத்துடையவர் என்று இன்னொருவர் உங்களிடம் கூறுகிறார். அவர் சொல்வதை முதலில் நீங்கள் நம்பவில்லை. பின்னர், அவர் உங்களுக்கு எதிராக பேசிய ஒலி நாடாவை உங்களுக்குப் போட்டுக் காட்டுகிறார். உண்மையில் அது அவருடைய குரல்தான், அவர் உங்களைப்பற்றி எதிராகத்தான் பேசியிருக்கிறார். அதைக் கேட்டவுடன் நீங்கள் அவருக்கு எதிராகத்தான் திரும்புவீர்கள். ஏனென்றால் உண்மையை ஒலிநாடா காட்டும்போது நீங்கள் நம்பாமல் இருக்க முடியாது.

சரி, இனி சம்பந்தப்பட்டவரை நேரடியாக சந்தித்து ஏன் இப்படிக் கூறினீர்கள் என்று விசாரித்துப் பாருங்கள். அவர் அப்படிக் கூறவில்லை என்று அடியோடு மறுப்பார். அதன் பின்னர் நீங்கள் ஒலி நாடாவைப் போட்டுக் காட்டுகிறீர்கள். அவர் மௌனமாக இருப்பார். பின் யார் இந்த ஒலிநாடாவைத் தந்தவர் என்று வினவுவார். நீங்கள் சொல்லமாட்டீர்கள். ஆனால், அவர் ஒலிநாடாவைத் தந்தவர் மீது கோபமடைந்து போய்விடுவார். அதன் பின் நீங்களும் அவருடன் அதிகமாகப் பழகாமல் ஒதுங்கிக் கொள்வீர்கள். புலம்பெயர் வாழ்வில் இப்படி மற்றவர் சொன்னதாகக் கேள்விப்பட்டு, ஒலி நாடாக்கள் போட்டுக் காட்டப்பட்டு அதனால் பிரிந்து அழிந்தோரே மிகமிக அதிகம்.



நம்மைப் பற்றி ஒருவர் குறையாகச் சொல்கிறார், அதற்குச் சாட்சியமாக ஒலிநாடா, வீடியோ போன்றன இருந்தாலும், அந்தச் செயல் தவறுதான். இதில் நம்பமுடியாத வெறும் மயிரிழையளவு தடிப்பமான உண்மை இருக்கிறது. அந்த உண்மையை மனிதர் என்ற புத்தகத்தில் இருந்துதான் படிக்கலாம். நம்மைப்பற்றி நம்மிடமே நேரடியாகச் சொல்லப்படாத அத்தனை கருத்துக்களும் ஏறத்தாழ தவறானவைதான். அந்தத் தகவல்களை வைத்து முடிவுகளை எடுப்பதைப் போல மாபெரும் அறிவீனம் உலகில் கிடையாது என்பதே அந்த மெல்லிய, கூரிய உண்மை. இனி அதற்கான உதாரணத்தைப் பார்ப்போம்.

அதிகமான மனிதர்கள் ஒருவரிடம் கருத்துக் கூற முன்னர் அவர் எப்படிப்பட்ட பேர்வழி, அவருக்கு எது பிடிக்கும் என்பதைக் கணக்குப் போட்டு வைத்திருப்பார்கள். மேற்கண்ட நபருக்கு யாரைப் பிடிக்காதோ அவரைப்பற்றி நல்ல செய்திகளைச் சொல்வதையும் தவிர்த்துக்கொள்வார்கள். அதே நேரம் ஒருவரிடம் ஏதாவது காரியம் ஆகவேண்டியிருந்தால் அவருக்குப் பிடிக்காதவா பற்றிய தவறான விடயங்களை எல்லாம் கூறுவார்கள். அது அவர்களுடைய அடி மனதின் கருத்தல்ல. அந்தச் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ற பொய் என்பதே சரியான கருத்து. நாம் ஒருவரைப் பற்றி வைத்திருக்கும் கணிப்பிற்கேற்பவே நம்முடைய உரையாடல்களும் வசனக் கோர்வைகளும் இடத்திற்கு இடம் மாறிச் செல்கின்றன. ஆகவேதான் நமது நேரடி அவதானிப்பிற்கு அப்பால் பேசப்படும், நடைபெறும் விடயங்கள் எதையும் நாம் அப்படியே நம்பிவிடக்கூடாது. நாம் இன்னொரு மனிதருடன் நட்பாகப் பழகினால் அந்த நட்பு தமக்கு எதிர்காலத்தில் பாதிப்பைத் தரலாம் என்று எண்ணுவதாலும் சிலர் வேண்டுமென்றே குறைகூறுகிறார்கள். ஆகவே எவர் சொல்வதையும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப்படியே நம்பிவிடக் கூடாது.

உளவுப் பிரிவின் தகவலைக் கேட்டு ஈராக்கிற்குள் போன அமெரிக்காவின் அறிவீனத்தை இதற்கு இன்னொரு பெரிய உதாரணமாகக் கூறலாம். கண்ணால் காணாத விடயத்திற்கு படை நடவடிக்கை எடுத்த குற்றத்திற்காகப் பல உலகத் தலைவர்கள் இப்போது மன்னிப்பே கேட்டிருக்கிறார்கள். தம்மைச் சுற்றியிருக்கும் சாதாரண மனிதர்களில் பாடம் கற்காத பேர்வழிகள் எல்லாம் வல்லரசுகளின் தலைவர்கள் ஆகியிருக்கிறார்கள் என்பதே ஈராக் போர் நமக்குக் கற்றுத் தந்த பாடம். கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீரவிசாரித்தறிவதே மெய் என்பதை கற்க நூல்நிலையம் தேவையில்லை. நம்மைச் சுற்றியுள்ள மனிதப் புத்தகங்களே போதுமானவை.

- [illegible] -
(டென்மார்க்)

ஒருவர் இறக்கும் வரை அவரைப் பார்த்து ஏன் நாயே? என்று கூட கவனிக்கமாட்டார்கள். ஆனால், அவர் இறந்தவுடன் கண்ணீர் விட்டு அழுது அவருக்குச் செய்யாத கிரியைகள் எல்லாம் செய்வார்கள். இறந்தபின்பு ஒருவர் மீது காட்டும் இந்த அடிப்படைப் பாசத்தை இவ்வளவு காலமும் ஏன் மறைத்து வைத்திருந்தார்கள் என்று நாம் சிந்திக்க வேண்டும். அந்தப் பாசத்தை எல்லாம் வாழும்போது ஏன் காட்டாமல் போனார்கள் என்றும் சிந்திக்கவேண்டும். பலர் இறந்தவர்

(IVஆம் பக்கம் பார்க்க)

# மிகினும் குறையினும் நோய் செய்யும்

ஒரு சமயம் கொழும்பு நகருக்குத் தண்ணீர் வழங்கும் நீர்த்தாங்கிக்குள் நஞ்சு கலக்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி பரவியது. பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் இரவிரவாகப் பறந்து திரிந்து குழாயில் நீரை அடுத்த அறிவித்தல் வரை யாரும் பாவிக்கவேண்டாம் என அறிவித்துக் கொண்டிருந்தனர். தமிழர்கள் நெருங்கிவாழும் பகுதிகளுக்கு அவ்வறிவித்தல் அவ்வளவு தூரம் சென்றடையவில்லை. (அவர்களின் ஆள்கள் தானே அதனைச் செய்தவர்கள் என்ற கற்பனையுடன் அதனால் அனுபவிக்கட்டும் என்ற அலட்சியம் போலும்)

விடிந்ததும், அதெல்லாம் அநாமதேயத் தொலைபேசி மிரட்டலைத் தொடர்ந்து ஏற்பட்ட வதந்தி என்பது உறுதிப்படுத்தப்பட்டதாகப் புதிய தகவல் வெளியாகியது....

என்னவோ எழுதவென்று வந்து எங்கேயோ போய்விட்டேன் போலிருக்கின்றது.

அந்த ஊரின் நிலத்தடி நீரானது பெரும்பாலும் உவர்த்தன்மை பெற்று விட்டதால் அப்பகுதிகளுக்குக் குடி தண்ணீர் வழங்கும் பெரும்பணியினை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை மேற்கொண்டு வருகிறது. இதற்கென இங்கு பெரியதொரு நீர்த்தாங்கி அமைக்கப்பட்டிருக்கிறது. சற்றுத் தூரத்திலுள்ள நல்ல தண்ணீர் கிணற்றிலிருந்து அதற்கு தண்ணீர் பாய்ச்சப்பட்டு, குழாய்கள் மூலமாக மக்களுக்கு வழங்கப்படுகிறது.

இந்த தண்ணீர்த் தாங்கி அமைவிடத்திற்கு முன்னே அறிவித்தல் ஒன்று நடப்பட்டு அந்த அறிவித்தலில் தமிழ் கொலை செய்யப்பட்டிருந்தது. அதனை 'உதயன்' சில வாரங்களுக்கு முன்னர் 'படம் போட்டு' வெளிக்காட்டியது. என்ன ஆச்சரியம், அந்தப் பட விளக்கம் வெளியான அடுத்தடுத்த நாள்களிலேயே அப்பிழை திருத்தப்பட்டு அந்த அறிவித்தல் இப்பொழுது புதுப்பொலிவுடன் திகழ்கின்றது. இதற்காக உதயனுக்கு மட்டுமல்ல குறித்த நீர் வழங்கல் சபையினருக்கும் எமது மனம் நிறைந்த நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அதற்குப் பக்கத்திலே ஒரு முன்பள்ளியும் இயங்கி வருகிறது. அந்தப் பள்ளிப் பிள்ளைகள் அதனைப் பார்த்துத் தமிழ் படிக்க வெளிக்கிட முன்னர் அவர்களைத் தடுத்தாட்கொண்டமை காலத்தினாற் செய்த நன்றி என்பேன்.

தவறைத் திருத்தி புதிதாக அதனை மாட்டும் போது சம்பந்தப்பட்டவர்கள் பத்திரிகைக்குச் செய்தி கொடுக்க முன்னர் அதனைத் தங்களிடம் சொல்லியிருக்கலாமே என முணுமுணுத்துக் கொண்டார்களாம். அப்படியானால் பத்திரிகை சுட்டிக் காட்டிய பின்னர் தான், பாவம் அவர்களுக்கும் அத்தவறு தெரிந்ததோ?




## சொல்லட்டுமா, சொல்லட்டுமா?

சரி, அது தான் போகட்டும். அப்படியானால் மக்கள் சொல்லி வருகின்ற இன்னொரு குறைபாட்டை இவர்கள் கவனிப்பதாக இல்லையே! அது பற்றிச் சொல்லட்டுமா?

குடி தண்ணீரில் அளவுக்கதிகமான குளோரினைக் கலந்து விடுகின்ற விவகாரம் தான் அது. இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அப்பொழுதும் நான் உதயன் பத்திரிகையில் இப்படியானதொரு பத்தியினை எழுதிவந்தேன். அச்சமயம் "...நீர் வழங்கல் சபையினர் சில சமயம் செய்வது போல குடி தண்ணீருக்குள் அளவுக்கு அதிகமான குளோரினைக் கலந்து விடக் கூடாது" என்று வேறெதற்கோ அதனை ஓர் எடுத்துக் காட்டாகச் சொல்லியிருந்தேன். அதற்குப் பின் [illegible] அதே கதை தொடருகிறது போலிருக்கிறது. (இந்தக் கிறுக்கன் மீண்டும் கிறுக்க வந்து விட்டானே).

இதனை எழுதிக் கொண்டிருக்கும் காலத்தில் மிக அதிகமாக - பாவனையாளர்கள் தமது முகங்களைச் சுழிக்கும் அளவுக்குத் தண்ணீரில் குளோரின் கலந்திருப்பது தெரிகிறது. தண்ணீர், தேநீர் மட்டுமல்ல அதனைக் கொண்டு தயாரிக்கப்படும் பிட்டு, இடியப்பங்களிலே கூட அந்த மணத்தை உணர முடிகிறது. இப்படியே போனால் நாம் யாரையாவது "வருஞ்சுக்கு வாரியளா?" என்று கேட்டால் அவர்கள் "உங்களது உணவில் அது மணக்குமே" என்று மறுத்துவிடக்கூடும்!.

அது பற்றி அதற்குரியவர்களிடம் கேட்டால் "உங்களுக்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பதற்காகத் தான் அப்படிச் செய்கிறோம். நாங்கள் ஒன்றும் விகிதாசாரத்துக்கு மேல் போடவில்லை" என்கிறார்கள்.

எங்களுக்கு அந்த விகிதாசாரம் போன்ற அறிவியல் நுணுக்கங்களெல்லாம் தெரியாவிட்டாலும் "நல்ல தண்ணீருக்கு நிறமும் இல்லை மணமும் இல்லை" என்றெல்லாம் படித்த நினைவுகள் இருக்கின்றன. இப்பொழுதும் இங்குள்ள மக்கள் வேண்டுவதும் அதைத்தான். அவர்கள் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொண்டு, ஆயுளை வேண்டுமானாலும் குறைத்துக் கொள்ளச் சித்தமாக விருக்கிறார்கள். ஆனால், இறுதிவரை நல்ல தண்ணீர் குடித்துச் சாகவேண்டும் என்பதுவே அவர்களது வேணவா.

எனக்கும் இந்த அறிவியல் நுணுக்கங்களெல்லாம் தெரியாதுதான் (நாங்கள் அந்தக் கொப்பிகளுக்கு நடுவே குமுதம், கல்கண்டு வைத்துப் படித்தவர்கள்) ஆனால், இலக்கியம் ஓரளவு தெரியும் 'மருந்து' அதிகாரத்திலே திருவள்ளுவர் இப்படிச் சொல்லுகிறார்.

"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று"

(மருத்துவ நூலோர் குறிப்பிடும் மூன்றும் அளவுக்கு மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும்) என்பது இதன் கருத்து.

அந்த மூன்றும் என்ன என்பதில் உரைகாரர்களிடையே கருத்து முரண்பாடு இருந்தாலும், அதில் ஒன்றாக இல்லாவிட்டாலும், அது போன்ற ஒன்றாக இந்த தண்ணீரில் குளோரின் கலக்கும் விவகாரத்தையும் எடுத்துக் கொள்ளலாம் போலிருக்கிறதே!

சண் அங்கிள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரோடு நோவோம்...?

அரச உத்தியோகம் பார்க்கும் இரு நண்பர்கள் சந்தித்தனர்.

"என்னடா இப்படி இளைச்சுப் போனாய்?" என்று வினவினார் ஒருவர்.

"அது பெரிய சோகக்கதை. அதைவிடு, நீ எப்படி?" என்றார் மற்றவர்.

"என்னடாப்பா... குடும்பச் சண்டையே?"

"சேச்சே... நானும் மனிசியும் சந்திச்சால்தானே சண்டை வரும்"

"அப்பமனிசி வேறெங்கோ போய்விட்டாவா?"

"இல்லையடாப்பா. என்ரை மகனுக்குப் பத்து வயது அதுதான் பிரச்சினை"

"விளங்கேல்லையடா"

"மகன் ஸ்கொலஷிப் வகுப்பிலை படிக்கிறான். மனிசி விடியத் தொடங்கி இரவு பதினொரு மணி வரைக்கும் அவனோடையே மாயுறா. கடைச்சாப்பாடு. ரியூசனுக்கு பள்ளிக் கூட விசேட வகுப்புக்கும் கூட்டிக் கொண்டு திரியிறது, ஏழெட்டுப் பயிற்சிப் புத்தகங்களை வாங்கிச் செய்யிறது எண்டு 'அது' திரியிற பறப்பிலை வீடென்ன வாசலென்ன... கணவனென்ன... குடும்பமென்ன..." என்று சலித்துக் கொண்டார் அவர்.

இன்றைய நடுத்தர வர்க்கத்தின் 'அந்தஸ்தை' நிர்ணயிக்கும் ஒரு கருவியாகப் புலமைப் பரிசில் பரீட்சை மாறிவிட்டது. பிள்ளைகளின் மகிழ்ச்சியையும், உளத் தேவைகளையும் புறந்தள்ளி, அவர்களை இயந்திரத் தனமாகவும், சட்டகத் தனமாகவும் நகர்த்தி, தம்பிள்ளைகளும் 'ஸ்கொலர்' என்று சொல்லிப் பெருமை கொள்வதில் இந்தப் பெற்றோர்களுக்கு ஆனந்தம்.

அதற்கு 'அனுமதி' என்ற கயிற்றுடன் பிரபல பாடசாலைகள் காத்திருக்கின்றன. பல பாடசாலைகளின் நிர்வாகங்கள் தமது 'இருப்பை' புலமைப்பரிசில் வெற்றியினூடாகவே நிலைநிறுத்தப் பிரயத்தனப்படுகின்றன என்பதனையும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. சிறார் உளவியல் தொடர்பான எந்தவித அறிவுமற்ற பல தனியார்களின் 'வெற்றிகரமான' தொழிலாகவும் புலமைப் பரிசில் பயிற்சி வகுப்புகளும், பயிற்சிப் பரீட்சைகளும் அமைந்துள்ளன.

ஒரு மாணவனின் 'வெற்றி'யில் குளிர்காய்வோர் பலர். பெற்றோர், பாடசாலைகள், பயிற்சி வினாத்தாள் வெளியிடுவோர், தனியார் ஆசிரியர்கள் எனப் பலருமே 'பிள்ளை'யின் வெற்றிக்கு 'உரிமை' கோருகின்றார்கள்.

ஆக, பிள்ளையின் 'ஆளுமை' என்பது மறுதலிக்கப்படுகின்றது.

'தோல்வி'யைத் தழுவும் மாணவர்களின் நிலையோ பரிதாபம். அவர்கள் குடும்பத்தினதும், சமூகத்தினதும் 'தீண்டத்தகாத பிரிவினராக' சில காலத்துக்குக் கருதப்படுவார்கள். வசையும், இம்சையுமாய் அவர்கள் பொழுது நரகமாய்க் கழியும்.

எங்களூரில் இரு பிள்ளைகள் புலமைப் பரிசிலுக்குத் தோற்றினார்கள். இருவருமே பரீட்சையில் சித்தி பெற்றனர். ஒரு பிள்ளை 140 புள்ளியும், மற்றப் பிள்ளை 128 புள்ளியும் எடுத்தனர். 128 புள்ளி எடுத்த பிள்ளை அதன் தாயாரால் 'வையப்பட்ட' முறையைப் பார்த்த போது, தாங்க முடியவில்லை.

உண்மையில் பிள்ளைகளிடத்திலும், சமூகத்திலும் ஏற்றத்தாழ்வை உருவாக்கக் காரணமான 'புலமைப் பரிசில் பரீட்சை' தொடர்பாக கல்வியியலாளர்கள் கவனம் செலுத்தாதிருப்பது கவலைக்குரியதே.

- ஏகலைவன்.

# நம் அக்கம் பக்கம் எங்குமே...

(III பக்கத் தொடர்ச்சி)

களுக்காக அழுவதில்லை வாழ்வில் தாம் விட்ட தவறுகளுக்காகவே அழுகிறார்கள் என்பதுதான் உண்மை.

இறந்தவருக்காக அழுவது உண்மையாக இருந்தால், நாளைய நமது செயலால் இன்னொருவரை அழவைக்கவும் முயலவும் மாட்டோம். இறப்பு நடந்த வீடுகளைச் சண்டைக் களமாக்கும் மக்களின் கண்ணீர் போலியானது என்பதை அறிய மனிதர்களை விட வேறென்ன புத்தகம் வேண்டிக்கிடக்கிறது.

இனி இன்னொரு உதாரணம் தவறு என்று தெரிந்தும் மனிதன் அதை விடமுடியாமல் ஏன் தவிக்கிறான்? உலகில் உள்ள தொண்ணூற்றொன்பது விழுக்காடு மனிதரை வழிநடதது வது வயதுதான். அறிவோ, அறிஞரோ நூல்களோ அல்ல. ஒவ்வொரு வயதிலும் உண்டாகும் தூண்டுதலுக்கேற்பவே மனிதனுடைய செயல்கள் அமைகின்றன. சிறிது பழைய உடையைக் காட்டினாலே இது வயோதிபர்களுக்குரியது என்று ஒதுங்கும் இளைஞரை வழிநடத்துவது எது? கோயிலைத் தவிர மற்றெல்லாம் தவறெனக் கூறும் பெரியவரை வழிநடத்துவது எது? வயதுதான். எனவேதான் வயதிற்கேற்பவே மனிதர் செயல்கள் இருக்கும் என்பதை அறிந்து நாம் நடக்கவேண்டும். இந்த உண்மையை ஒவ்வொரு வயதினரிடமும் நாம் கற்கலாம்.

## காத்திருப்பில் கழிந்த காலம்

கடந்த இருபது ஆண்டுகளாக இங்குள்ள நமது மக்கள் என்ன நினைத்துக்கொண்டு வாழ்கிறார்கள்? நமது நாட்டில் அமைதி வரும், நிம்மதியாக வாழலாம் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் வாழ்கிறார்கள். ஆனால், அந்த அமைதி வருவதற்குள் என்ன நடந்திருக்கிறது? இங்குள்ள வாழ்வில் மூழ்கி, தீராத நோயாளிகளாகி முதுமையடைந்து பலர் இறந்தும் போய்விட்டனர். காத்திருப்பில் கழிந்த இருபது ஆண்டுகள் போனது போனதுதான். அவை மீண்டும் வரப் போவதில்லை. இந்த இருபது ஆண்டுகளை இழந்த பின்னர் ஐயோ, நான் அதைச் செய்யவில்லையே ஐயோ இதைச் செய்யவில்லையே என்று அலைபாயும் மனிதர்கள் போல சிறந்த பாடப்புத்தகங்கள் வேறு எங்கே இருக்கப்போகின்றன.

நமது தமிழ் மக்களையே சிரட்டையில் தண்ணீர் கொடுத்து, போத்தலில் தண்ணீர் கொடுத்து வீட்டின் வெளியால் நிறுத்தி நம் தமிழர்களே செய்த கொடுமைகள் ஏராளம். இந்தக் கொடிய மனிதர்களை பாடப்புத்தகங்களாகப் படிக்காமல் யாழ்ப்பாண சமுதாயம் நூல்நிலையம் போய் படித்து பல்கலைக்கழகம் போக ஆசை கொண்டது. கடைசியில் ஒருநாள் நூல்நிலையமே எரிந்தது.

அதை எரித்தது மாபெரும் தவறு. ஆனால், அந்த நூல்நிலையத்தால் பெற்ற அறிவால் சீதனத்தையும் மற்றைய கொடுமைகளையும் நாம் எரிக்கமுடியாமல் போனது நாம் விட்ட தவறு. நமது ஏழை எளிய மக்களின் துயரத்தை அறிந்து நீக்க அறிவைப் பயன்படுத்தாமல் சுயநலமாக வாழ்ந்ததே நமது இன்றைய அவலங்களுக்கு அடிப்படைக் காரணம்.

இப்படி நாம் எதையெல்லாம் இப்பிறவியில் அறியவேண்டுமோ அதையெல்லாம் அறிவதற்கான ஜீவனுள்ள நூல்கள் எவை? இதோ நம்மைச் சுற்றியுள்ள மனிதர்கள்தான். இந்தப் புத்தகங்களைக் கண்களாலும், கருத்துகளாலும் படியுங்கள். அதுதான் உண்மையான கருத்துள்ள கல்வி.

# ஒன்றாக முடியாத...

(I பக்கத் தொடர்ச்சி)

சமாதானப் பேச்சு. போர்நிறுத்தம் போன்ற கோசங்களை முன்வைத்திருந்த ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து வாக்களித்த அதே சிங்கள மக்கள். போர் ஓய்ந்திருந்த காலத்தில் பேச்சுகள் தமிழரின் உரிமைப் பிரச்சினைகளை தொட எத்தனித்த வேளையில். இனப்பிரச்சினை விவகாரங்களை பெரிதுபடுத்தாமல் தத்தமது வேறு பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்து தமது வாக்குகளை வழங்கியுள்ளனர் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

13ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி., ஜாதிகஹெல உறுமய போன்ற ஒற்றையாட்சி முறைமையிலும் தர்மராச்சியக் கோட்பாடுகளிலும் அழுங்குப்பிடியாக நிற்கின்ற தீவிரவாதக்கட்சிகளை ஆதரித்து சிங்கள மக்கள் தமது லட்சக்கணக்கான வாக்குகளை அளித்திருந்தனர். அவ்வாறே நடந்து முடிந்த மாகாண சபைகளுக்கான தேர்தல்களிலும் ஜே.வி.பியினால் நிறுத்தப்பட்டிருந்த 73 வேட்பாளர்களில் 71 பேர் வென்றுள்ளனர். நாடாளுமன்றத் தேர்தலிலும் மாகாணசபைகளுக்கான தேர்தல்களிலும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகளை பூரணமாக எதிர்த்தே ஜே.வி.பி. பிரசாரம் செய்திருந்தது. இவ்விடயத்தையும் கருத்தில் எடுத்துத்தான் சிங்கள மக்கள் ஜே.வி.பியை ஆதரித்துள்ளனர். இனப்பிரச்சினைக்கான ஒரு இடைக்காலத் தீர்வுக்கு இட்டுச் செல்லும் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு ஜே.வி.பியை ஆதரிக்கும் சிங்கள மக்கள் எதிர்ப்புக்காட்டுவதாகவே கருதலாம்.


### தமிழரின் ஜனநாயகத் தீர்ப்பு

ஆனால். 13ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக்கட்சியின் பெயரில் போட்டியிட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபை யோசனை உள்ளிட்ட பல முக்கிய உரிமைப் பிரச்சினைகளை தேர்தல் விஞ்ஞாபனமாக்கி வடக்கு-கிழக்கில் ஏகோபித்த ஆதரவையும் அங்கீகாரத்தையும் அந்த விஞ்ஞாபனத்துக்குப் பெற்றுவிட்டது. விடுதலைப் புலிகளின் முழுமையான அங்கீகாரம் பெற்றிருந்த அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தை தமிழ் மக்கள் அங்கீகரித்து 22 நாடாளுமன்ற உறுப்பினர்களை தமிழரசுக்கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்துக்கு அனுப்பியிருந்தனர்.

### பாரதூரமான இடைவெளி நிரூபிக்கப்பட்டது

ஜனநாயக வழிமுறை[illegible] வன்முறைப் போரில் ஈடுபட்ட இரண்டு இனங்களும் ஜனநாயகத் தேர்தல்களிலும் இடைவெளி எவ்வளவு பாரதூரமானது என்பதை நிரூபித்து விட்டன. இந்த நிரூபிப்பு தமிழ். சிங்கள சமூகங்கள் இரண்டினதும் எதிர்கால அரசியல் பொருளாதார நலன்களுக்கு எவ்வகையில் உதவப்போகிறது? சிங்கள. தமிழ். அரசியல் சித்தாந்தங்கள் முற்றிலும் எதிர்த்துருவப்பட்ட நிலையில் எதிரும் புதிருமான சூழ்நிலையில் இரு சமூகங்களும் எதிர்பார்க்கும் சமாதானம் ஒன்றல்ல என்பதே உண்மை; ஒன்றாகவும் முடியாத அரசியல் போரியல் சூழல் எழுந்துவிட்டது.

இராணுவச் சமநிலை கொண்ட இரு அணிகளின் சித்தாந்தங்களாகவும் பிராந்திய சர்வதேச சக்திகளின் நலன்களுக்குள் சிக்கிக்கொண்ட சித்தாந்தங்களாகவும் இவை உள்ளமையால் - இதில் எது எழுச்சிகொண்டு ஓங்கிநிமிர்ந்து எழுந்து வாழும் என்றோ இதில் எது தாழ்ந்து வீழ்ந்து அமிழ்ந்து போகும் என்றோ ஒற்றைக் காரணிகளையோ அன்றேல் ஒரு சில காரணிகளையோ வைத்துக்கொண்டு தீர்மானகரமாக கூறிவிடமுடியாது. ஆனால். [illegible]க்கும் என்கின்ற [illegible]க்காலத்துக்கும் உண்மையானது.



# பிரகடனம்

நடந்து முடிந்த திருவிழாக்களில்
பெருங்குரலெடுத்துப்
பாடி முடித்தாயிற்று...
விழாக்கள் வேறுபட்டன
மேடைகள் வடிவம் மாறின
மனிதர்களும் அது போலத்தான்
ஆனால்,
பாடல்களின் சப்தம்
ஓங்கி ஒலித்தன ஒரே மாதிரி...
கை தட்டல்கள்
முடிவதற்கிடையில் அடுத்த
திருவிழா ஒன்று
தேவைப்படுகிறது...!
எத்தனை விழாக்கள்
வந்து போனாலும்
பெருங்குரலெடுத்துப்
பாடிப் புரண்டாலும் – எம்
ஒப்பாரிப் பாடலையே
தேசிய கீதமாய்
பிரகடனப்படுத்தக் காத்திருக்கிறார்கள்
என்பதுதான் வேதனை...
நெருக்கடியான இப்போது
ஓர் திருவிழா வேண்டும்
பாடல்கள் இன்றி
சப்தங்கள் மட்டும்
கேட்பது போல்...!

ஏ.மருதம் கேதீஸ்.

# அழிகின்ற எச்சங்கள்....

முத்துமாரி அம்மன்கோயில்,
முன்னேயொரு வாசிகசாலை,
சத்தமிடும் புள்ளினங்கள்,
சலசலக்கும் குளத்துஜலம் - தாய்
முத்தமென ஒளியுமிழும்
முழுமதியின் முக நிலவில்
தோளுரசும் தோழர்களின்
வாயிசைக்கும் வம்பொலிகள்!
ஆத்தாகாளிக்கு ஆண்டுப்பொங்கல் வர
ஊரே ஊன்மறுக்கும்:
உற்சவங்கள் தான் சிறக்கும்
நேர்த்திக் கடன்தீர்க்கும்
நெறிமுறைகள் நெஞ்சுருக்கும்!
சாமிவலம் முடிந்தபின்னர்
சபை கூடிக் கொண்டாடும்
கூத்துக்கள் - குலமரபின்
கொற்றத்தைப் பறைசாற்றும்!
காளையரின் விறல்வினைகள்,
கன்னியரின் குரல்நயங்கள்,
கோலத் தமிழ்மகளின்
குன்றாத கலைப்பயன்கள்...
என்றந்தக் காலத்தை
எண்ணுகையில் எழில்கவியும்!
குண்டுகளால் குதறுண்ட - திடீர்
குபேரர்களால் குலைந்தழிந்த
பண்டுதமிழ் பண்பொழுகும்
பலநூறு வாழ்வம்சத்
துண்டுகளில் ஒன்றாக
தொலைந்திதுவும் போவதனை
கண்டீரா?, அணைபோடும் - தமிழ்
காலமும் கதைபாடும்!

- அனலையூர்ச் சேந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org